# திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு



முனைவர் ந.க. மங்களமுருகேசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு

முனைவர் ந.க. மங்களமுருகேசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : பெரியார் மகளிர் அணி)
வரிசை எண் : 3

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tirāviṭa iyakkattil aṉṉai Maṇiyammaiyāriṉ paṅku |
| Author | : | Dr. N.K. Mangalamurugesan<br>Professor (Rtd.), Dept. of History<br>Institute of Distance Education<br>University of Madras, Chennai - 600 005 |
| General Editor | : | Dr. S. Nirmala Devi<br>Senior Research Fellow<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 645 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 104 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees Forty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Contribution of E.V.R. Maniammiyar in the Dravidian Movement |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

திராவிட இயக்க வரலாறு என்பது தமிழ் இயக்க வரலாற்றின் துவக்கம் ஆகும். திராவிட இயக்க வரலாற்றில் விடுதலைக்கு முன்பே இடம் பெற்ற பெண்மணிகளில் குறிப்பிடத் தக்கவர்களாக விளங்கியவர்கள் அன்னை நாகம்மையார், பெரியாரின் சகோதரி கண்ணம்மா, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், அன்னை மணியம்மையார், திருமதி சத்தியவாணி முத்து முதலானோர் ஆவர். தந்தை பெரியார் 95 வயது வரை வாழ்ந்து தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் தன் வயது, நோய் போன்றவற்றைப் பொருட்படுத்தாது மக்கள் நலமே பெரிதெனக் கொள்ள நாளும் பாடுபட்டமைக்குத் துணை நின்றவர்களுள் அன்னை மணியம்மையாரின் தொண்டுதனைத் தமிழ்ச் சமூகம் நன்றியுடன் நினைவு கொள்ளும்.

> அம்மா என்னிடம் தொண்டராக வந்தபிறகு தான் என்னுடைய கருத்துக்கள் பல ஆயிரம் புத்தகங்களாக வெளிவரமுடிந்தது

எனத் தந்தை பெரியார்அவர்களே சான்றளித்த பெருமைக்குச் சொந்தக்காரர் அன்னை மணியம்மையாராவார்.

பெரியார் 1973இல் மறைந்த பின்னர் மணியம்மையார் இயக்கத் தலைமையேற்று ஏறத்தாழ 5 ஆண்டுகள் இயக்கத்தைத் தொய்வு இன்றிக் கட்டுக்கோப்புடன் நடத்திச் சென்று 1978இல் தகுந்த தலைமையிடம் - தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார். ஏறக்குறைய 26 வயதில் பெரியாரிடம் செயலராகவும், உதவியாளராகவும், தொண்டராகவும் சேர்ந்து பெரியாரின் 95 வயதுவரை அவரின் உணவு, உடல் பாதுகாப்பில் கவனம் செலுத்திப் பெரியாரைத் தமிழருக்குத் தொண்டு செய்திடப் பெரிதும் துணை நின்றவர் அம்மையார்.

இந்நூலாசிரியர் அம்மையார் பற்றிய பல அரிய தகவல்களை நூல் முழுதும் தந்துள்ளார். இந்தி எதிர்ப்பு பெரியார் காங்கிரசில் இருந்த காலத்திலேயே-1925 முன்னரே

நீதிக் கட்சியினரால் மேற்கொள்ளப்பெற்றது. 1920-1922 யிலேயே நீதிக்கட்சி இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துத் திருச்சியில் இராஜாஜி கலந்து கொண்ட கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்தது என்பது அரிய செய்திகளுள் ஒன்று.

வினா : கும்பகோணத்தில் 144 தடை உத்தரவு போடப்பட்டு இருப்பது தெரிந்தும் அத் தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடத்திச் சென்றது சட்டப்படி குற்றம்.

பதில் : எங்கள் மொழிகாக்கும் உரிமைக்கு அமைதியாய்ப் போறிடுவது எனது கடமையாகும். மொழிப்பற்றை மறப்பது நாட்டிற்குத் துரோகம் செய்வதாகும்.

வினா : அதற்காகச் சட்டத்தை மீறுவது சரியா?

பதில்: சட்டம் நாட்டின் மொழி வளர்ச்சியைக்கூட ஒழிப்பதாயிருக்கிறது.

வினா: உங்கள் மதம் என்ன?

பதில் : எனக்கு எந்த மதமும் கிடையாது.

வினா: உங்கள் சாதி ?

பதில்: திராவிட சாதி.

வினா: தடையுத்தரவை மீறிச் சட்டத்தை மீறியுள்ள தங்களை ஏன் தண்டிக்கக் கூடாது? சமாதானம் ஏதாவது சொல்கிறீர்களா?

பதில்: நான் சமாதானம் சொல்வதற்காக இங்கு வரவில்லை. சர்க்கார் சட்டத்தை நிறைவேற்றியிருக்கும் தாங்கள் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன். தாராளமாய்ச் செய்யுங்கள்.

வினா: தங்களுக்கு இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனை யளிக்கிறேன்.

பதில்: மிகமகிழ்ச்சி. வணக்கம்.

என்பன போன்ற பல அரிய தகவல்கள் அடங்கிய நூலாக மட்டுமல்லாது பல வரலாற்றுச் செய்திகள் அடங்கிய நூலாகவும் பகுத்தறிவுச் சிந்தனைகள் பொதிந்த ஆய்வு நூலாகவும் இது அமைகிறது.

இந்நூலினை வெளியிடுவதில் எம் நிறுவனம் பெருமை கொள்கிறது. நூலாசிரியருக்கு எம் பாராட்டுக்கள்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவனப் முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர்கள் திருமதி எ.ம. லட்சுமி மற்றும் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. திராவிட இயக்க வீராங்கனை | 1 |
| 2. வாழ்வும் திராவிடர் இயக்கத்தின் நுழைவும் | 12 |
| 3. திராவிடர் கழகத்தலைவர் அன்னை மணியம்மையார் | 83 |

# 1. திராவிட இயக்க வீராங்கனை

> அவர் தொண்டுக்கு முழுக்க முழுக்க என்னை ஆளாக்கி அவர் நலத்தைக் கண்ணெனப் பாதுகாக்க ஒரு தாயாக என்னைப் பாவித்துக் கொண்டு அவரை ஒரு சிறு குழந்தையாகவே மனத்தில் இருத்தி அக்குழந்தைக்கு ஊறு நேரா வண்ணம் பாதுகாப்பதிலேயே மகிழ்ச்சி கொண்டேன்

என்று தந்தை பெரியார் பற்றிக் கூறும் அன்னை ஈ.வெ.ரா. **மணியம்மையார்** உலகில் எங்குமே இல்லாத ஒரு புரட்சி இயக்கத்தின், பகுத்தறிவு இயக்கத்தின், பகுத்தறிவுப் பிரச்சார இயக்கத்தின் தகைசால் தலைவராக விளங்கிய வீராங்கனை ஆவார். அவருடைய தொண்டும், புகழும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை.

அவ்வாறு தொண்டாற்றிய மணியம்மையாரைக் குறித்துத் தந்தை பெரியார் தம் தொண்ணூறு வயதுக் காலத்தில்,

> இந்த வயதிலும் சாகாமல் இருக்கின்றேன் என்றால் இந்த அம்மாவால்தான் என்பது யாருக்கும் தெரியாது. எனது உடம்புக்கு ஏற்ற உணவு பக்குவப்படி கொடுப்பது, உடைமாற்றுவது எல்லாம் இந்த அம்மாதான்.

என்று குறிப்பிட்டார்.

திராவிட இயக்கத்தின் தந்தை, தமிழ் இனத்தின் விடிவெள்ளி தந்தை பெரியாரைக் காக்கும் தொண்டின் வாயிலாகத் திராவிட இயக்க வரலாற்றில் ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்கள் முதலில் பங்கு பெறுகிறார்.

இவ்வாறான அய்யாவின் நலன் காக்கும் பணிகளை மேற்கொண்டவராக மட்டும் இருந்திருந்தால் திராவிட இயக்க வரலாற்றில் மணியம்மையாரின் பங்கு எனும் தலைப்பிற்கு அவருக்கு இடம் கொடுப்பது நியாயமாகவும் பொருத்தமாகவும் அமைந்திடாது. நர்சு போல அவர் அய்யாவிற்குப் பணிவிடை செய்த வெறும் தாதியாக மட்டும் விளங்கிடவில்லை.

தந்தை பெரியாரின் உதவியாளராக வந்த அவர், திராவிடர் கழகத்தில் பெரியார் பேச்சுக்கள், கட்டுரைகளை, சுவடிகளை மட்டும் விற்று வந்தவராக, அதாவது கொள்கை பரப்புவதில் துணை நிற்பவராக அடுத்து உயருகிறார். பெரியாரின் எண்ணங்கள் எழுத்துருவில் அச்சு ஊர்தி ஏறி அது அவர் பேசுகின்ற கூட்டங்களில் நூலாக விற்கப்பெற்றது. அதே பணியை முதன்மைப் பணியாய் முதலில் மேற்கொண்டார்.

அடுத்து, திராவிடர் கழகத்தின் நிருவாகக் குழுவில் இடம் பெற்றார். அதாவது திராவிடர் கழக ஆட்சிக் குழுவில் இடம் பெற்று முதன்மையான முடிவுகள் மேற்கொள்ளும் பெரியாருக்குத் துணை நின்றார். இங்கும் கூட அவர் பங்களிப்புச் செய்தார் என்று கூறிவிட முடியாது.

ஏனென்றால் அவரும் இக்குழுவின் கூட்டங்களில் பங்கேற் றவர்களில் ஒருவர். அவ்வளவுதான். அல்லது பெரியார் தலைமை யேற்று நடத்தும் கூட்டங்களில், நிருவாகக்குழு உறுப்பினர் அல்லாத ஒருவர் அங்கே இருக்கக் கூடாது என்பதால், உறுப்பினராகி அய்யாவுக்கு அருகில் அமர்ந்து இடம்பெற்றுத் துணைபுரிந்தார்.

அடுத்து அய்யா நடத்தி வந்த விடுதலை ஏடு, இரண்டாம் உலகப் போருக்குப்பின் அரசிடமிருந்து அய்யாவின் கைக்கு வந்து சேர்ந்ததும் அம்மாவின் பொறுப்பு அதிகமாகியது. அவர் வெறும் தாதியில்லை.

குடிஅரசு ஏட்டில் வெளியான விளம்பரம், விடுதலை ஏடு **'புதிய விடுதலை'** எனும் பெயரில் 6.6.1946 முதல் வெளிவரும் என்று வந்தது. அவ்வாறே வெளிவந்த விடுதலையின் **'ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர்'** என்னும் பொறுப்பினை மணியம்மையார் அல்ல, அல்ல கே.ஏ. மணி ஏற்றார்

விடுதலை ஏடு **கே.ஏ.மணி** எனும் மணியம்மையாரைக் கொண்டு, **பாலகிருஷ்ணபிள்ளை தெரு, சிந்தாதிரிப்பேட்டை,** சென்னை எனும் முகவரியில் இருந்து வெளிவந்தது.

EDITED
PRINTED AND
PUBLISHED
BY
**K.A. MANI**

என ஆங்கிலத்தில் இடம்பெற்றிருந்தது. 6.6.1946 முதல் பொறுப்பாசிரியராக விளங்கிய மணியம்மையார் 10.3.1978இல் மறையும்

வரை அதன் பொறுப்பாசிரியராக, அச்சிடுபவராக, வெளியிடுபவராக விளங்கினார்.

ஆசிரியர்கள் பலர் இருந்தனர், சென்றனர். ஆனால் பொறுப்பாசிரியர் ஒருவர்தான். அதாவது அன்னை மணியம்மையார்தான். இப்படி 32 ஆண்டுக்காலம் ஓர் ஏட்டின் பொறுப்பாசிரியராக விளங்கிய பெண்மணி உலகிலேயே ஒருவர் உண்டென்றால் அவர் மணியம்மையார்தான்.

எனவே இயக்க ஏட்டின் வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர் என்ற அளவில் வெறும் பெயரளவில்தான் என்று இல்லாது, அரசு விடுதலை ஏட்டின்மீது நடவடிக்கை எடுத்தபோதெல்லாம்- அது ஆளும் தமிழகக் காங்கிரசு அமைச்சரவையாக இருந்தபோதிலும் சரி - அவசரநிலை - நெருக்கடி நிலை என்று அய்யா மறைந்த பிறகு அன்னை இந்திரா அம்மையார் நடவடிக்கை எடுத்தபோதும் சரி துணிவுடன் அரசின் நடவடிக்கைகளை எதிர்கொண்டு, அபராதம் கட்டவேண்டும் என்று தண்டனை விதிக்கப்பெற்றால் அத் தண்டனையை ஏற்று, பிணையத் தொகை பறிமுதல் செய்யப்படும் என்றால் பறிமுதல் கொடுத்தும், பெரியார், குத்தூசி குருசாமி முதலியோர் எழுதிய தலையங்கக் கட்டுரைகளுக்குச் சிறைத் தண்டனை எனில் 'மகிழ்ச்சியுடன்' ஏற்றுச் சிறைபுகுந்தார் அன்னை மணியம்மை.

ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றுச் சிறை புகுந்ததும் உண்டு. அல்லது நீதிமன்றத்தினால் எச்சரிக்கப் பட்டதும் உண்டு.

எனவே பத்திரிகை உரிமை, சுதந்திரம், எழுத்துரிமைக்காகச் சிறை சென்ற இயக்கத் தலைவி அவர். அத்தோடு அவர் மேற்கொண்ட பொறுப்புக் குறித்துத் தாம் மறைவதற்கு முன் 1973இல் பெரியார் குறிப்பிட்டவை இவை:

> **மணியம்மையார் இயக்கத் தொண்டுக் கென்றே என்னிடம் வந்த இந்த 30 ஆண்டுகளில் பல காரியங்களுக்குத் தேவைக்கு உதவி செய்து வந்ததால் என் உடல் பாதுகாப்பு, வீட்டு நிருவாகம் ஆகிய வற்றில் எனக்குத் தொல்லையில்லாமல் இருக்கும் வாய்ப்பை அடைந்தேன்.** (விடுதலைமலர், 1973)

பெரியார் மேடைகளில் பேசினார். ஒரு மாதத்தில் இருபது நாட்களுக்கு மேல் பேசினார். அந்தப் பேச்சுக்கள் எல்லாம் காற்றோடு கரைந்து போயிருக்கும்.

பெரியார் அவர்களின் பொதுவாழ்வு அவருக்கு இருந்த நோய்களின் விளைவால் அரைகுறை வாழ்வாக அறுபது வயதைக் கூட எட்டாத வாழ்வாக முடிந்துபோயிருக்கும் அவருடைய சிந்தனைகள் தொடர்ந்து 96 வயது வரை தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைக்காமலே போயிருக்கும்.

அந்நிலை ஏற்படாமல் அய்யாவைக் கண்ணும், கருத்துமாய்க் காத்து அவரை வாழவைத்த மாபெரும் தொண்டாற்றியவர் அன்னை மணியம்மையார். அதனாலேதான் தமிழர் தலைவர் விடுதலை ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்

> **நம் அறிவு ஆசான் அய்யா அவர்களை 96 ஆண்டு வரை வாழவைத்து அதற்குப்பிறகு ஐந்து ஆண்டுக் காலம் அவர்கள்விட்டுச் சென்ற பணியை அவர்கள் போட்டுத் தந்த பாதையில் எந்த விதச் சபலத்திற்கும் ஆளாகாமல் செய்து முடித்த வரலாற்றில் இப்படிப் பட்ட புரட்சித் தாயை இந்த நாடு கண்டதில்லை என்று அறிவாளிகளும், ஆய்வாளர்களும் வியக்கும் வண்ணம் வாழ்ந்தவர் நம் அன்னை ஈ.வெ.ரா. மணியம்மை.**

என்றார்.

## திராவிட இயக்கத்தின் உண்மையான தலைவி

மணியம்மையாரின் வாழ்க்கையில் காலக்கட்டங்கள் மூன்று ஆகும்.

* ஒன்று, இரண்டு ஆகிய காலக்கட்டங்கள் தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தவை. மூன்றாவது காலக்கட்டம் அவர் திராவிடர் கழகத் தலைவியாக விளங்கிய காலம்.

1943இல் தந்தை பெரியாரிடம் வந்து உதவியாளராகப் பணியாற்ற வருகிறார். தன்னலமற்ற தொண்டினால், இயக்கக் கொள்கையின் பால் கொண்ட உறுதியினால், இயக்கம் இவராலே தனக்குப்பிறகும் தொடர்ந்து காப்பாற்றப் பெறும் எனும் தந்தை பெரியாரின் அசைக்கவியலாத, தொலைநோக்கு, நம்பிக்கை, தீர்க்கதரிசனம் ஆகியவற்றின் விளைவால் திருமண ஏற்பாடு எனும் ஏற்பாடு மேற்கொள்ளப்பெற்றதன் விளைவால் ஈ.வெ.ரா. மணியம்மை ஆகிறார். இது முதல் கட்டம். 1943 முதல் 1949 வரையிலான முதல் கட்டம் இது. இக்காலக் கட்டத்தில் திராவிடர் கழக நிருவாகக்குழு உறுப்பினர், விடுதலையின் வெளியிடுபவர், பொறுப்பாசிரியர்.

திராவிட இயக்க வரலாற்றில் விடுதலை ஏட்டின் பங்கு எனும் ஆய்வு மேற்கொள்ளப்படுமானால் அந்த ஆய்வில் அன்னை மணியம்மையாரின் பங்கு, முதன்மைப் பங்கு நிச்சயம் இடம்பெறும். விடுதலை ஏடு இன்று பவளவிழாக் காண்கிறது- 75 ஆண்டுகள்தலை நிமிர்ந்து நிற்கிறது. அந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு, 25 ஆண்டுகள் அதன் பொறுப்பாசிரியர் அன்னை மணியம்மையார்.

*இரண்டாவது காலக்கட்டம் 1949 முதல் 1973 வரையிலான காலக்கட்டம் இந்தக் காலக்கட்டத்தில் பெரியார் எனும் மாமனிதர், பகுத்தறிவு, தன்மானத் தலைவர் தன்னைச் சார்ந்து இருந்த தலைமைத் தொண்டர் பலர் தனியே பிரிந்து சென்ற போதிலும் தடியூன்றித் தம் கையை மணியம்மையரைப் பற்றிக் கொள்ளச் செய்து தம் சமுதாய சீர்திருத்தப் பணியை 'யாரை? நம்பித் தொண்டாற்றுகிறேன்? என் காலம் வெல்லும்' என்று உறுதியுடன் செயல்பட்ட காலம். இக் காலக்கட்டத்திலும் போராட்டங்கள் இருந்தன. வன்முறையற்ற அறப்போர்கள், மறியல்கள் இருந்தன. அவை அனைத்திலும் மணியம்மையார் முதன்மைப் பங்கேற்றுத் தொண்டாற்றத் தவறவில்லை.

ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போரா? ஆரியம், வைதீகம் ஆகியவற்றின் ஆதிக்க எதிர்ப்பா, உணவு விடுதியில் 'பிராமணாள்' பெயர் அழிப்புப் போரா? எதிலும் பங்கேற்காமல், சிறைப்படாமல் ஒதுங்கியதில்லை.

தன்னை முன்நிறுத்திக் கொள்வதில்லை என்ற போதிலும், முன்நின்று போராட்டக்களத்தில் கொடியேற்றி மறியல் செய்து கொள்கைப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறைத்தண்டனையும் பெற்றார்.

இந்தப் போராட்டப் பணிகளுக்கு இடையே அய்யா சிறைப்பட்ட வேளையில் இயக்க அலுவல்களோடு, இயக்கத் தொண்டர்கள் இருவர் சிறைப்பட்டு மடிந்தபோது சிலிர்த்தெழுந்து பெண் சிம்மமாய்ப் பெரியாரின் வாரிசு என்பதை மெய்ப்பிக்கவும் தவறவில்லை, திருச்சியில் சிறைப்பட்டோர் மடிந்தபோதுஅவர்கள் உடலைப்பெற்று உறுதியாய் ஊர்வலம் நடத்தியவர் அன்னையார்.

1973 டிசம்பர் 23 அய்யா மறைந்தார். இயக்கம் என்னவாகும்? தாய்க்கழகம் ஆன திராவிடர் கழகம் சேய்க் கழகமான தி.மு. கழகத்துடன் இணைந்துவிடுமா? தனித்து இயங்குமா? என்னவாகும் எதிர்காலம்? என்று இருந்த நிலையில், ஊகங்கள் ஊடகங்களிடையே ஊதிப்பரவிய வேளையில் உறுதிமிக்க தலைவியாய் விளங்குவார் என்று திராவிடர் கழகத் தொண்டர்கள் அம்மாவே அய்யாவின்

திராவிட இயக்க வாரிசு-அய்யா வழியில் அம்மா- என முடிவுகள் மேற்கொண்டார்.

தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாத அந்தத் தன்மான இயக்கத் தலைவி-தயக்கத்துடன்தான் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஏற்கும் வரைதான் தயக்கம். ஏற்றபின்னரோ 'அய்யா தேவலை' என்று சொல்லும்படிச் செய்ய வேண்டும் என்று அறிவித்தார்.

ஓர் இயக்கத் தலைவி எப்படி விளங்கவேண்டும்? ஓர் இயக்கத்தலைவி எவ்வளவு உறுதியாக இருக்கவேண்டும்? ஓர் இயக்கத்தலைவி எவ்வளவு எளிமையாக இருக்க வேண்டும்? என்பதற்கு எடுத்துக்காட்டாக அம்மா விளங்கினார்.

1973 முதல் தாம் மறையும் 1978 வரையிலான காலக் கட்டத்தில் இக்காலக்கட்டம் இந்திரா அம்மையாரின் அரசு- அடக்கு முறையை- அவசர நிலை- நெருக்கடி நிலை என்று ஏவிவிட்ட காலம். நெருக்கடி நிலையின் பாய்ச்சலுக்கு அஞ்சாது துணிந்து நின்ற இந்தியத் தலைவர்கள் வரிசையில் இடம்பெற்ற தலைவர்களில் அம்மாவும் ஒருவர்.

அய்யா இல்லாத குறை மனத்தளவில் பாதிப்பை ஏற்படுத்தியதைச் சமாளித்துப் பணியாற்ற அம்மாவிற்கு அய்யா வகுத்துத் தந்த பாதை, வழி துணை நின்றது. ஆனால் அம்மாவின் உடல்நிலை அவர்களை உழைக்க இடங்கொடுக்கவில்லை என்ற போதிலும் 'துணிந்து நில், தொடர்ந்து செல்' என்று துணிந்து நெருக்கடிக் காலத்தில் கொடுமைகளை எதிர்கொண்ட வீராங்கனை அவர்.

அய்யா காட்டிய வழியில் சாதி ஒழிப்பு, அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர் ஆகும் வகையில் சட்டம் இயற்ற அரசைக் கட்டாயப்படுத்தல் ஆகியவற்றை மேற்கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக அய்யா தம் கைக்குறிப்பில் எழுதிவைத்திருந்த இராமாயண எதிர்ப்பை - வடநாட்டில் நடைபெற்று வந்த இராம் லீலாவைக் கண்டித்து இராவணலீலா நடத்திச் சாதனை ஏட்டில் இடம் பெற்று விட்டவர் அம்மா அவர்கள்.

இப்படிப்பட்ட திராவிட இயக்க வீராங்கனையின் வரலாற்றைக் காண்கிறோம்.

திராவிட இயக்க வரலாற்றில் விடுதலைக்கு முன்பே இடம் பெற்ற பெண்மணிகளில் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கியவர்கள் அன்னை நாகம்மையார், பெரியாரின் சகோதரி **கண்ணம்மா**, மூவலூர் மூதாட்டி **இராமாமிர்தம் அம்மையார்**, அன்னை **மணியம்மையார்**, திருமதி **சத்தியவாணி முத்து** முதலானோரே ஆவர்.

இவர்களில் தனித்ததோர் இடம் பெறுபவர் அன்னை மணியம்மையார். முதலாவதாகத் திராவிட இயக்கத்தில் தந்தை பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரைக் காக்கும் தொண்டின் வாயிலாக அய்யா 95 வயது வரை வாழ்ந்து தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டாற்றித் தூயபணி ஆற்றினார்.

இரண்டாவதாகத் தகைமை சான்ற, தாழ்த்தப்பெற்ற, ஒடுக்கப்பெற்ற, பிற்படுத்தப் பெற்ற சமூகத்தின் நலன் கருதியதும், பகுத்தறிவுப் பாதை காட்டியதும், சாதியை ஒழிக்கக் கங்கணம் கட்டியதும், சாதி ஒழிப்பிற்குத் தடையாக விளங்கிய கடவுள், மதம் ஆகிய அனைத்துக்கும் எதிராகப் போர் தொடுத்ததுமான இயக்கத் தலைமை ஏற்று, 'அய்யாவிற்குப்பிறகு அவருடைய சீட்டாவும், கைத்தடியும்தான்' என்று ஏளனம் பேசியவர்கள், ஏகடிகம் பேசியவர்கள் வெட்கித் தலைதாழும் வண்ணம், அய்யா போட்டுத் தந்த வழியில் தொடர்ந்து இயக்கத்தை நடத்திச் சென்ற பெருமைக்கும், சிறப்பிற்கும் உரியவர் அன்னை மணியம்மையார்.

அன்னை மணியம்மையார் விரும்பியோ, விரும்பாமலோ அய்யாவின் இயக்கமாம் திராவிடர் கழகம் 1949இல் பிளவுபடக் காரணங்களில் ஒன்றாக அன்னை மணியம்மையாரின் பெயரும் இடம் பெற்றாலும் இன்றும் திராவிட இயக்கம் வேர் விட்டுக் கிளைவிட்டுத் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்றவாறு, அந்நாளில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல் 'இரட்டைக் குழல் துப்பாக்கியாகப்' பகுத்தறிவுப் பாதையில் நடைபோட்டு வருவதற்கு அன்னை மணியம்மையார் பங்களிப்புச் செய்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எத்தனையோ சாதனைகளில் ஒன்றெனத் திகழ்வது முதலாவதாக அண்ணாவின் அரசு நிறைவேற்றிய சுயமரியாதைத் திருமணம் செல்லும் எனச் சட்டம்.

இரண்டாவதாக, அய்யா இறுதிவரை ஆசைப்பட்டுக் காணவிரும்பிய புரட்சிகரமான மாறுதல் அனைத்துச் சாதியினரும் ஆலயங்களில் அர்ச்சகர்கள் ஆகவேண்டும் என்பது. அதனையும் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்த அரசு நிறைவேற்றிவிட்டது.

அய்யா அவர்கள் அத்தனை ஆண்டுக்காலம் வாழ்ந்து ஆயிரக் கணக்கான மைல்கள் சுற்றிச் சுற்றி வந்து மேடைகளில் முழங்கிய பகுத்தறிவுக் கருத்துக்கள் அவ்வேளைகளில் மட்டும் மேடையில் வெடித்த அணுகுண்டுகளாய் ஒளி, ஒலி எழுப்பிச் சென்று விட்டுப் போயிருக்கும்.

ஆனால், அவை அச்சுத்தேர் ஏறி, அய்யாவின் கருத்துத் தாங்கிய நூல்களாக, ஏடுகளாக வெளிவந்தன. அதனாலேதான் அய்யா குறிப்பிட்டார்

> **அம்மா என்னிடம் தொண்டராக வந்த பிறகுதான் என்னுடைய கருத்துகள்பல ஆயிரம் புத்தகங்களாக வெளிவர முடிந்தது என்று.**

**வேலூர் - மணியம்மையார் பிறந்த மண்**

இன்றைய வேலூர் மாவட்டத்தின் தலைநகரமான வேலூர் நாற்புறமும் மலைகளால் சூழப்பெற்ற ஊர். ஒரு காலத்தில் வேலூருக்கு அவப்பெயர் ஒன்று இருந்தது. "சாமி இல்லாக் கோயில், அரசனில்லாக் கோட்டை, அதிகாரம் இல்லாத போலீஸ், தண்ணீர் இல்லா ஆறு" என்பது.

அந்த அவப்பெயர் இன்று சற்று மாறி சாமி உள்ள கோயில் ஊர் ஆகிவிட்டது. போலீஸ் பயிற்சிக் கல்லூரியையே அதிகாரமில்லாப் போலீஸ் என்றனர். ஆனால் அதிகாரம் செலுத்தப் பயிற்சி கிடைக்கிறது.

வேலூர் சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையில் அமைந்துள்ளது. சுப்பிரமணியம் அல்லது முருகன் என்னும் கடவுள் பெயரைக் குறிக்கும் 'வேலாயுதம்' என்ற சொல்லிலிருந்து வேலூர் பிறந்தது என்பர்.

1801இல் வடஆர்க்காடு ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. சித்தூர், இப்போது ஆந்திர மாநிலத்திலுள்ள ஊர் வடஆர்க்காடு மாவட்டத்தின் தலை நகரமாக விளங்கியது. 1860இல் இந்த மாவட்டம் ஒன்பது தாலுக்காக்களைக் கொண்டிருந்தது.

அவை சந்திரகிரி, சித்தூர், பழமனேரி, வாலாஜா பேட்டை, குடியாத்தம், வேலூர், போளூர், வந்தவாசி, ஆற்காடு ஆகும். 1911இல் சேலத்திலிருந்து திருப்பத்தூரும், தென் ஆர்க்காட்டிலிருந்து திருவண்ணாமலையும் வடஆர்க்காடு மாவட்டத்தில் இணைந்தன. 1997 முதல் வேலூர் மாவட்டம் என்று பெயரிடப்பெற்றது. இப்போதைய வேலூர் மாவட்டத்தில் எட்டுத் தாலுக்காக்கள் உள்ளன.

**தமிழ்நாட்டுச் சமூகச் சீர்திருத்தவாதிகள்**

தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வைகுண்ட சுவாமிகள், வள்ளல் இராமலிங்க அடிகள் பசிப்பிணி, சாதி உயர்வுக் கோட்பாடின்றிச் சமுதாயம் வாழ வகை செய்தார்கள். இவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

மாபெரும் சமூகச் சீர்திருத்த வாதியாக உதித்தவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி ஆவார்கள். அய்யா எனவும், தந்தை பெரியார் எனவும் தமிழ்ச் சமுதாயம் பெருமையோடு அழைத்த தலைவர் அவர். அவருடைய பொது வாழ்க்கை நுழைவு முதலில் சென்னை மாநிலச் சங்கத்தில். பின்னர்க் காங்கிரசில் இணைந்து விடுதலைக்கு உழைத்தார். பெரியாரைக் காங்கிரசில் சேர்த்த பெருமையைத் தேடிக் கொண்ட பெருமைக்குரியவர் இராஜாஜி ஆவார்.

பெண் விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்ட இயக்கம் திராவிட இயக்கம் ஆகும். 1921இல் நீதிக்கட்சி அரசுதான் பெண்டிருக்கு வாக்குரிமை அளித்தது. 1926இல் பொது நிறுவனங்களுக்குப் போட்டியிடவும் வகை செய்தது.

காங்கிரசு இயக்கத்தில் தன் இதயத்திற்கு இனிய கோட்பாடான வகுப்புரிமைக் கோட்பாட்டிற்கு, மனித நேயத்திற்கு ஆதரவு தேடும் முயற்சியில் முழுதும் முயன்ற பெரியார் தம் முயற்சியில் வெற்றி கிட்டாதபோது 1926இல் **சுயமரியாதை இயக்கம்** எனும் தனி இயக்கம் கண்டார்.*

1929, 1930, 1931களில் செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர் ஆகிய மூன்று நகரங்களில் சுயமரியாதை இயக்க மாநில மாநாடுகள் நடைபெற்றன. சுயமரியாதை இயக்க மாவட்ட மாநாடுகள் பல நடைபெற்றன. சமூக இழிவிற்குக் காரணமாக விளங்கிய பார்ப்பனீயம், சாதி, சமயம், கடவுள் ஆகியவற்றை ஒழிப்பதையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு அயராது பாடுபட்ட ஒரே தலைவராக, ஒப்பற்ற தலைவராகப் பெரியார் விளங்கினார்.

வாழ்நாள் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பெரியார் கல்லடி, சொல்லடிபட்டுத் தம் பகுத்தறிவுக் கோட்பாட்டை, மனித வேற்றுமையை அகற்றப் பாடுபட்டார். இன்று பார்ப்பனரல்லாத சமூகம் தலை நிமிர்ந்து பல் துறைகளிலும் பங்கு பெற்றுப் பணியாற்றுகிறது என்றால் அதற்குப் பெரியார் என்ற தனி மனிதரின் தலைமைத் தொண்டே காரணம். மனிதநேயம்தான் பெரியாரின் அடிப்படைக் கொள்கை.

அவர் விரும்பியிருந்தால் பதவி நாற்காலிகள் அவர் காலடியில் வந்து வீழ்ந்து இருக்கும். பதவி சுகத்தை அணைக்க அவர் என்றும் விரும்பினாரில்லை.

இரண்டு ஆளுநர்கள், இரண்டு தலைமை ஆளுநர்கள் பதவியேற்க அவரை முதல்வர் வேண்டியபோது, தாழ்வுற்று, வறுமை

---

*பார்க்க: தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம், ந.க. மங்களமுருகேசன், 1985.

மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, நிலைகெட்டு நின்றதும், பார்ப்பன சமூகத்தின் சிறுபான்மைச் சமூகத்தில் அடிமையாகிக் கிடந்ததும் ஆன தமிழ்ச் சமூகத்தினை விடுவிக்க எழுது கோலையும், மேடைப் பேச்சையும் மட்டுமே பயன்படுத்திய புரட்சியாளர் பெரியார்.

அவருடைய இயக்கத்தில் வன்முறைக்கு இடம் இருந்த தில்லை. வன்முறையில் அவர் எதையும் சாதிக்க விரும்பியதில்லை. வன்முறையாளர் எனில் அவர்களை ஒதுக்கி வைக்கவும் தயங்கிய தில்லை. உலகிலேயே வன்முறையின்றி இப்படி சமூக மாற்றத்திற்கு உழைத்திட்ட ஒரே தலைவர் பெரியார் ஒருவரே.

எனவே பெரியாரின் கோட்பாடுகள் கொள்கைகள் கலப்படமற்ற சுயசிந்தனைகள் இளைஞர் சமுதாயத்தை ஈர்த்தன. அவருடைய சிந்தனை சுயமான சிந்தனை, கலப்படமற்ற சிந்தனை. அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று கூறும் சிந்தனையல்ல. தாமே சுயமாகச் சிந்தித்து அவர் கூறுகையில் அதுவும் முக தாட்சண்யம் பார்க்காமல் கூறுகையில் அவருடைய துணிவு இன்றைய சமூகத்தைச் ஈர்த்தது.

அடுத்து அவருடைய சுயநலமில்லாப் போக்கு. தனக்கென எதுவும் சேர்த்திடாது, தன் சொந்தச் சொத்தையும் இயக்கத்திற்கு என்றே ஒப்படைத்த பாங்கு எவரையும் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு, சுயநலம் என்ற குற்றச்சாட்டு சுமத்த வகையின்றிச் செய்தது.

பொது வாழ்வில் நேர்மை, பொது வாழ்வில் துணிவு, பொது வாழ்வில் தூய்மை ஆகியவைகளால் ஈர்க்கப் பெற்ற இளைஞர்களைப் போல, பெரியாரின் தூய தொண்டுக்குத் தன் வாழ்வை ஒப்படைக்க முன்வந்த தொண்டில் சிறந்த தூய பெண்மணி ஒருவர் வந்தார். அவர்தான் **அன்னையார்** எனவும், **அம்மா** எனவும் அழைக்கப்பெறும் கே.ஏ. மணியம்மையார் என்று பெயர் பெற்று ஈ.வெ.ரா. மணியம்மையாராக மறைந்த மணியம்மையார். பெரியாரின் தொண்டுக்குத் தன் இளமை வாழ்க்கையைத் தியாகம் செய்து வந்துற்ற அன்னை திராவிட இயக்க வரலாற்றில் தலை சிறந்த பெண்மணி. பெரியாரின் தொண்டராக வந்தவர் இயக்கத்தில் பொதுக்குழு உறுப்பினராக ஆனார். பெரியாரின் தனி உதவியாளர் ஆனார்.

பெரியார் தனக்குப் பிறகு இயக்கம் வாழ ஏற்பாடு ஒன்று செய்த போது - திருமண ஏற்பாடு செய்த போது பெரியாரின் துணைவியானார். இயக்கநலனுக்குச் சொத்துக்களைக் காக்கப் பெரியார் செய்த ஏற்பாடு அது. அச்சொத்துக்கள் நிலைத்து

இயக்கம் நிலை பெறவேண்டும் என்ற ஏற்பாடே அன்றி இல்லற சுகம் கருதியோ, இனிமையான வாழ்வு கருதியோ மேற்கொள்ளப் பெற்ற ஏற்பாடு அன்று என்பதைக் காலம் மெய்ப்பித்தது.

பெரியார் 1973இல் மறைந்த பிறகு மணியம்மையார் இயக்கத்தலைமை ஏற்று ஐந்து ஆண்டுகள் கட்டுக்கோப்புடன் நடத்திச் சென்று 1978இல் தகுந்த தலைமையிடம், தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் இயக்கம் செம்மையாக நடைபெறவிட்டு விட்டுச் சென்றார். பெரியார் அளித்த பணி இன்றும் சிறப்புடன் சீரிய தலைமையின் கீழ் நடைபெறுகிறது.

மணியம்மையாரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். ஏறக்குறைய 26 வயதில் பெரியாரிடம் செயலாளராகவும், உதவியாளராகவும், தொண்டராகவும் வந்து சேர்ந்தார். பெரியார் என்னும் அந்தப் புரட்சியாளர் 95 வயது வரை வாழ்ந்தார் என்றால் அது மணியம்மையாரின் கண்டிப்பான, கனிவான கவனிப்பின் விளைவாலேதான்.

மணியம்மையாரின் தொண்டுதான் அய்யாவை 60, 70, 80, 90 என்று ஆண்டுகளைக் கடக்கச் செய்தது. அண்ணா அவர்களே இதைக் குறிப்பிட்டுள்ளார். அம்மாவின் தொண்டை வியந்து பாராட்டிய புரட்சிக் கவிஞர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அம்மா சிறுபெண்ணாகப் பெரியாருக்குத் தொண்டாற்றிய காலத்திலேயே "அந்தச் சிறுபெண்ணை அன்னை என்று அழைப்பதிலே என்ன தவறு" என்று அய்யாவின் சிறுநீர்க் கலம் ஏந்திய பண்பு மிக்கத் தொண்டைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார்.

# 2. வாழ்வும் திராவிடர் இயக்கத்தில் நுழைவும்

## பிறப்பு

'அன்னையார்', 'அம்மா' எனத் திராவிடர் கழகத் தொண்டர்கள் மத்தியில் சிறப்புடன் இடம்பெற்றிருந்த ஈ.வெ.ரா. மணியம்மையார் மார்ச் 10, 1917ஆம் ஆண்டு அன்றைய வடஆர்க்காடு மாவட்டத்தின் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள வேலூரில் பிறந்தார்.

திருமதி மணியம்மையாரின் பிறந்தநாள் **மார்ச் 10, 1917**இல் என்பதே சரியானது ஆகும். மணியம்மையாரின் வாழ்க்கை குறித்து எழுதியுள்ள சிலர் **மார்ச் 10, 1920** என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பெரியார் 1949இல் திருமண ஏற்பாடு குறித்து ஓர் அறிக்கை ஒன்றை வெளியிடுகையில் அம்மா அவர்கள் பிறந்த தமிழ் ஆண்டைக் குறிப்பிடுகிறார். அந்தத் தமிழ் ஆண்டிற்குச் சமமான ஆண்டு 1917. மேலும் அம்மாவுடன் அய்யா மேற்கொண்டுள்ள திருமண ஏற்பாட்டுப் பதிவிலும் மார்ச் 10, 1917 என்பதே இடம் பெற்றுள்ளது. எனவே மார்ச் 10, 1917இல் மணியம்மையார் பிறந்தார்.

## குடும்ப உறுப்பினர்கள்

மணியம்மையாரின் இயற்பெயர் க. காந்திமதி என்பதாகும். வேலூரில் விறகுத் தொட்டி வைத்துக் கௌரவமாகக் குடும்பம் நடத்திய வி.எஸ். கனகசபை முதலியார் பத்மாவதி ஆகியோரின் மூத்த மகள் மணியம்மையார் ஆவார்.

மணியம்மையாருடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள். அவர்களின் பெயர்கள் சண்முகம், தியாகராசன் ஆகும். ஒரே சகோதரி கமலா ஆவார். மணியம்மையாரின் தந்தை அவர்கள் பகுத்தறிவாளராக விளங்கியதால், அவர் வழியிலேயே அவருடைய பிள்ளைகள் ஆண், பெண் அனைவருமே சுயமரியாதைக் கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினர். பழமைப் பண்புகள், கடவுள் நம்பிக்கை ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ளாது சுயமரியாதை வழியே வாழ்க்கையை நடத்தி வந்தனர். சுயமரியாதைக் குடும்பத்திலே பிறந்தவர் என்னும் அடிப்படைப் பெருமைக்குரியவர் மணியம்மையார்.

பிள்ளைகள் மட்டுமல்லாது மணியம்மையாரின் தாயார் பத்மாவதி அம்மையாரும் முழுமையான பகுத்தறிவாளராகக் கணவர் காட்டிய வழியில் விளங்கினார். திருமதி பத்மாவதி அவர்கள். எளிமை, கனிவு, தாராள இயல்பு, அனுசரித்துச் செல்லும் உயரிய பண்புகள் உடையவராக விளங்கினார். தாயாரின் பண்புகள் மகள் காந்திமதியிடத்துப் படிந்திருந்தன.

வேலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கனகசபை அவர்களும், பத்மாவதி அம்மையாரும் சுயமரியாதைக் கோட்பாட்டைப் பரப்புவதில் முன்னணியில் இருந்தனர். சுயமரியாதைக் கோட்பாட்டு வாழ்க்கைக்கு அவர்கள் முன்மாதிரியாக விளங்கினர். வேலூரில் கனகசபை அவர்களின் குடும்பம் பகுத்தறிவாளர் குடும்பமாக விளங்கியது. பெரியாரின் அன்பிற்கும் உரியவர்களாக விளங்கியது. அந்நாளில் 1940களில் வேலூரில் பெரியார் நன்கு அறிந்த பகுத்தறிவாளர் குடும்பம் அது. வேலூர் வந்தால் பெரியார் தங்கிச் செல்லும் பெருமை பெற்ற குடும்பம் அது.

**கல்வி நிலை**

வேலூரில் வீட்டிற்கு அருகில் இருந்த தொடக்கப் பள்ளியில், வேலூரில் அரசமரத் தெருவில் இருந்த பள்ளியில் தொடக்கக் கல்வியைப் பயின்றார். ரெட்டியப்ப முதலிதெருவில், வேலூர் கொசப்பேட்டைப் பகுதியில் இடைநிலைக் கல்வியைக் கற்றார். பள்ளி இறுதி வகுப்புவரை பயின்ற அவர் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வை இருமுறை முயன்றும் எழுதவியலாமல் போயிற்று. நான்காவது பாரம் படிக்கும்போது 1936இல் ஒரு திருமணத்திற்கு வேலூர் வந்த தந்தை பெரியாரைச் சந்தித்ததால் பள்ளி நிருவாகம் இவரை வகுப்பிலிருந்து வெளியேற்றியது என்று கூறப்படுகிறது

கனகசபை அவர்களின் குடும்பம் பெரியாருக்கு நன்கு அறிமுகமான குடும்பம். பெரியார் வேலூர் வரும்போது இவர்கள் இல்லத்தில் தங்கிச் செல்வது உண்டு என்பதோடு பெரியாருக்குக் கனகசபை அவர்கள் அடிக்கடி கடிதம் எழுதுவதும் உண்டு. கடிதத்தை முடிக்கையில் எல்லாம் அவர் பெரியாரை உடல் நலனை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு எழுதுவது உண்டு. அவ்வாறு எழுதுகையில் ஒருமுறை பெரியார்

> **எல்லோரும் என்னை உடல் நலனைக் கவனிக்கச் சொல்கிறீர்கள். ஆனால் அருகிலிருந்து கவனிக்கத் தான் யாருமில்லை**

என்று குறிப்பிட்டார். ஏனென்றால் 1933இல் பெரியாரின் துணைவியார் நாகம்மையார் மறைந்த பிறகு, இனி பொது வாழ்க்கை

மனைவி, இல்லறம், குடும்பம் எனும் எவ்வித இடைஞ்சலுமில்லாமல் நடைபெறலாம் என்று கருதியவர் பெரியார்.

அப்போது கனகசபை தம் மகள் காந்திமதியை அழைத்து வந்து 'என் மகள் உங்களுக்கு உதவியாக அமைவார்' என்று கூறிச் சென்றார். அவர் கூறியவாறு அவர் மறைந்த பிறகே நடைபெற்றது.

அது போலவே கனகசபை அவர்கள் இறந்த பிறகு மணியம்மையார் பெரியாருக்குத் தொண்டு செய்ய 1943ஆம் ஆண்டு வந்து சேர்ந்தார். தன்னை இந்தத் தமிழ் இன மீட்பருக்கு, அவர் தம் ஆயுளை நீட்டிப்பதற்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அய்யாவுக்குத் தொண்டு செய்ய வந்தநாள் **1943 செப்டம்பர் 11** ஆம் நாள். அன்று வந்த அவர், 1973 டிசம்பர் 23இல் முப்பது ஆண்டுகள் கழித்துப் பெரியாரின் கடைசி மூச்சு நிற்கும் வரை தன் சொந்த வாழ்வு என்று தனி வாழ்வு இல்லாமல் இயக்கமே தன் வாழ்வாக வாழ்ந்தார்கள்.

மணியம்மையார் தன் குடும்பத்தைப் பற்றிக் கூறுகையில்

> **என் குடும்பத்தைப் பொறுத்த வரையில் பெரும் பணக்காரத் தன்மையில் இல்லையென்ற போதிலும் போதிய கவுரமும் மதிப்பும் கொண்ட நடுத்தர நிலையில் கஷ்டம் இன்னதென்று தெரிந்து கொள்ள முடியாத தன்மையில் இருந்து வந்ததுதான். வாழ்க்கைக்கும் போதிய வசதியான ஓரளவிற்கு ஏதோ கொஞ்சம் இருந்தாலும் மனக்குறை இல்லாது மற்றவர்களின் ஆதரவையும் எதிர் பார்க்காது வாழத் தகுதியுடைய நிலையில் இருந்தது தான். சிறுவயது முதல் என் தந்தையால் சுயமரியாதைக் கருத்துப்பட வளர்க்கப்பட்டுத் தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி எங்கள் இல்லத்தில் தங்குவதில் அன்போடு பழகி, அவரது கருத்துக்களாலும், கொள்கையாலும், கவரப் பட்டதால், என் தந்தையார் மறைவுக்குப் பிறகு நான் ஒரு திடமான முடிவுக்கு வந்து அய்யா அவர்களின் தொண்டுக்கு நம்மால் ஆனதைச் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்து, இயக்கத்தில் தீவிரப்பணியில் சேர்ந்தேனே தவிர வேறில்லை**

சிறு வயதிலிருந்தே அன்னை மணியம்மையார் பகுத்தறிவுக் கொள்கைகளில் ஊறி வளர்ந்தவர். தன் திருமணம் பற்றிய சிந்தனை இல்வாழ்க்கையின் கற்பனை ஆகியன குறித்துச் சிறுவயதிலிருந்தே அம்மா அவர்களுக்கு இருந்ததில்லை. அதனால் கேட்டவர்களிடம்

எல்லாம் 'திருமணம் செய்வது என் தனிப்பட்ட விஷயம். இது பற்றி யாரும் கேட்க வேண்டாம்' என்று கூறிக் கேட்பவர் வாயை அடைத்து விடுவார்.

தன்னிடம் பணிபுரிந்து, தனக்கு உதவிட வந்த மணியம்மையாரைத் தந்தை பெரியார் தமிழ்ப் புலவர் படிப்புப் படிக்க வைக்க விரும்பி, சி.டி. நாயகம் அவர்கள் நடத்திய கல்லூரியில் தமிழ்ப் புலவர் படிப்பில் சேர்த்துவிட்டார்.

அவ்வாறு புலவர் எனப்படும் வித்வான் படிப்புப் படித்த அவர் படிப்பு முடிந்து தேர்வு எழுதி முடிக்க இயலவில்லை. உடல்நலக் குறைவினால் தேர்வு எழுத இயலாமல் போய்விட்டது.

எப்படியும் படிப்பை முடித்துவிட வேண்டும் என்று அடுத்த முறை மதுரையில் உள்ள தேர்வு மையத்தில் தேர்வு எழுதுவதற்கு மதுரை வந்தார். மதுரையில் தனியாக வந்து இறங்கிய அம்மாவைப் பார்த்த இவருடைய உறவினர், அம்மா தம் வீட்டில் சொல்லாமல் ஓடிவந்து விட்டார் போலும் என்று எண்ணி மதுரையில் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டார்.

காவல் நிலையத்தில் இவரை விசாரித்தார்கள். தேர்வு எழுதவே வந்து இருக்கிறார் என்று தெரிந்தபின் காவல் நிலையத்தி லிருந்து தேர்வு எழுதச் செல்ல அனுமதித்தார்கள்.

இவர் அதன்பின் புறப்பட்டுத் தேர்வு மையம் செல்வதற்கும், தேர்வு எழுத அனுமதிக்கும் நேரம் முடிவதற்கும் சரியாகிவிட்டது. எனவே தேர்வுக் கூடத்தில் இருந்தவர்கள் தேர்வுக்குத் தாமதமாக வந்தமையால் அனுமதிக்க மறுத்து விட்டனர். எனவே தேர்வு எழுத முடியாமல் போய்விட்டது. அதன்பிறகு தேர்வு எழுதப் போக வில்லை.

அதன்பின் அய்யாவின் உதவியாளராக அய்யாவுடன் சென்று வந்தார். அய்யாவிற்கு உதவுவது, அவருக்குத்தேவையான குறிப்புகள் எடுத்துத் தருவது, அய்யாவின் கருத்துக்கள் அடங்கிய சுவடிகள் விற்பது ஆகிய பணிகளில் ஈடுபட்டார். அய்யாவின் உடல்நிலையைக் கருதி அவருடைய உணவுப்பழக்கங்களை ஒழுங்குபடுத்தினார். அய்யாவும் ஒரு தாய்க்குக் கட்டுப்பட்ட பிள்ளை போல், மணியம்மை உண்மையான பொறுப்பும், அக்கறையும் உடையவராக விளங்குகிறார் என்பதால் அவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு உணவு, உடல்நலம் முதலானவற்றில் நடந்து கொண்டார்.

தன்னலமற்ற தொண்டு அவர் மேற்கொண்டார். பெரியாரும் பாசத்தோடு 'அம்மா, அம்மா' என்றே விளித்தார். அம்மாவும் 'அய்யா, அய்யா' என அன்புடன் அழைத்தார்.

அய்யாவின் உதவியாளராக

கோவை அய்யாமுத்து "என் நினைவுகள்" எனும் நூல் எழுதியவர். அவர் எழுதியுள்ள ஒரு தகவல் 1949க்குமுன் பெரியாரை எந்த அளவிற்குக் கவனித்துக்கொண்டு, மணியம்மையார் பெரியாரின் உடல்நலம் பேணினார் என்று காட்டும்.

> கும்பகோணத்திலிருந்து என் நண்பர் கா.மு. ஷெரீப் வந்திருந்தார். கும்பகோணத்துக்கப்பால் காவிரி நதியின் மத்தியில் பெரிய விஸ்தாரமான திட்டு பூமியை வாங்கி அதிலே ஆட்டுப் பண்ணையும், விவசாயப் பண்ணையும் நடத்தி வருவதாகவும் அதை நான் காணவேண்டுமென்றும் என்னை அழைத்தார். அவரும் நானும் திருச்சூரிலிருந்து ரயிலேறிப் புறப்பட்டோம்.
>
> ஈரோடிலே ரயில் மாற வேண்டும். திருச்சி செல்லும் வழியில் இரண்டாம் வகுப்பில் நுழைந்தோம். கீழ்த்தட்டு ஒன்றில் ஒரு ஜமுக்காளம் விரிக்கப் பட்டிருந்தது. அருகில் ஒரு சிறிய பையன் நின்று கொண்டிருந்தான். அவனை விசாரித்தபோது நாயக்கருக்காக அவன் காத்திருப்பதாகத் தெரிய வந்தது.
>
> பிளாட்பாரத்தில் காய்கறியில்லாத சோற்றுக்கடை வைத்திருந்தவனைக் கூப்பிட்டு முதல் தரமான சாப்பாடு கொண்டு வரும்படி சொன்னேன். பிரியாணி, சாப்ஸ், ஆம்லெட், குருமா என்று அவன் கடையில் உள்ளதையெல்லாம் தட்டுக்களில் கொணர்ந்தான்.
>
> அந்தத் தட்டுக்களையெல்லாம் நாயக்கரின் ஜமுக்காளத்தின் மீது வைக்கச் சொல்லிவிட்டு நாங்கள் இருவரும் நாயக்கரின் வருகைக்காகக் காத்திருந்தோம். வண்டியினுள் நுழைந்த நாயக்கர் 'இதெல்லாம் என்னடா'வென்று அருகிலிருந்த பையனைக் கேட்டார்.
>
> நான் உள்ளே நுழைந்து அவருக்கு வணக்கம் செலுத்தி 'இவையெல்லாம் தங்களுக்கு வரவழைத்தேன்' என்றேன்.
>
> 'ஐயோ, என் உடல்நிலை முன் போல் இல்லை, பத்திய உணவு சாப்பிட்டு வருகிறேன். இதையெல்லாம் எதற்காகக் கொண்டு வந்தீர்கள்?' என்று சங்கடத் துடன் கேட்டார்.

'என்ன செய்வது? நீங்கள் பிரியமாகச் சாப்பிடுவீர்கள் என்று எண்ணி ஆர்டர் கொடுத்துவிட்டேன். ஓட்டல் காரர்களுக்குப் பணமும் கொடுத்தாகிவிட்டது' என்று இழுத்தேன்.

'சரி, சாப்பிட்டுத் தொலைக்கிறேன்' என்று தட்டுகளை யெல்லாம் ஒருவாறு காலி செய்துவிட்டார். நானும் நண்பர் ஷெரீப் அவர்களும் வெளியில் நின்று கொண்டிருந்தோம்.

அப்போது பின்னல் ஜடையுடன் ஒரு பெண் உள்ளே நுழைந்தாள்.

'நான் ஒரு தப்பு செய்து விட்டேன்' என்றார் பெரியார் அப்பெண்ணிடம்

"என்ன அது"

"பிரியாணி சாப்பிட்டேன்"

"ஐயோ ஏன் சாப்பீட்டீர்கள்"

"எனது மிகப் பழைய நண்பரொருவர் பிரியத்தோடு வற்புறுத்தினார். தட்ட முடியவில்லை"

"உங்கள் நண்பருக்கு உங்கள் உடல்நிலை எப்படி தெரியும்? நீங்கள் மறுத்திருக்க வேண்டாமா?"

மேற்கண்டவாறு அப்பெண்ணும் பெரியாரும் பேசிக் கொண்டிருக்கையில் ஸ்பென்சர் சிப்பந்தி ஒருவன் எங்களைக் கடந்து சென்றான். 'ஓடிப்போய் ஒரு சோடா கொண்டுவா' என்று அவனிடம் நான் கூறிய வுடனே வெகு விரைவில் சோடாவும் டம்ளருமாக ஓடிவந்தான்.

சோடாவைத் திறந்து டம்ளரில் ஊற்றி வண்டிக்குள் இருந்த நாயக்கரிடம் கொடுக்கச் சொன்னேன்.

யாருக்கு என்று பட்லரை விசாரித்து டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டு வண்டியை விட்டுக் கீழே இறங்கி எனது பக்கத்தில் வந்த நின்றார் நாயக்கர். அப்பெண்ணும் அவர் அருகில் வந்து நின்றார்.

"இப்பெண் யாருங்க, புதிதாய் இருக்கிறது. அவள் உங்களைப் போடும் போடு எனக்கே பயமாய் இருக்கிறது" என்றேன்.

“இவளா? ஆம்! இவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை எங்கிருந்தாவது தேடிப் பிடியுங்கள்” என்று பெரியார் சொன்னதும் அப்பெண் பெரியாரின் மீது ஓங்கித் தட்டிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்.

அவர் சென்றபின் பெரியார், “வேலூரில் ஒரு நண்பரின் மகள். ஸ்கூல் பைனல் வரை வாசித்திருக்கிறார். அவருக்கு நமது இயக்கத்தில் அதிகப்பற்று. எனது காரியதரிசி போல் என்னுடன் இருந்து வருகிறார்” என்றார்.

வண்டி புறப்படும் சமயமாயிற்று. பெரியார் உள்ளே நுழைந்து படுத்துக் கொண்டார். நானும் நண்பர் ஷெரீபும் அதே பெட்டியில் ஏறிப்படுத்துக் கொண்டோம்.

அதிகாலைக்கு முன்னரே ரயில் திருச்சி ஜங்ஷனை அடைந்தது. நாங்கள் மூவரும் கீழே இறங்கும் முன்னர், அப்பெண் எங்கள் வண்டியின் முன்னே வந்துநின்றாள்.

என்ன மணி, நல்ல இடம் கிடைத்ததா? நன்றாகத் தூங்கினாயா?

முதல் தரமான இடம் சேர்வென்ட்ஸ் கம்பார்ட் மெண்ட் முதல் இரண்டு வகுப்புப் பிரயாணிகளின் வேலைக்காரர்களுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் தனிப்பெட்டி காலியாக இருந்தது. நன்றாய்த் தூங்கினேன்.

அதுதான் பொய். இந்தப் பெண் தூங்கவே இல்லை. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டி நின்றதும் ஓடிவந்து உங்களை எட்டி எட்டிப் பார்த்து விட்டுப் போனாள் என்று ஒருபோடு போட்டார் நண்பர்.

இப்படியும் பூலோகத்தில் ஒருபெண் இருப்பாளா? என்று நான் மனதுக்குள் எண்ணிக் கொண்டேன்.

இச்சம்பவம் நடந்த சில ஆண்டுகளுக்குப் பின் பெரியாரும், மணியும் புருஷனும் மனைவியுமாக மாறிவிட்டார்கள் என்ற செய்தி தெரிந்ததும், இப்படி ஏதாவது நடக்கும் என்று நான் அப்பொழுதே நினைத்தேன் என்று பெரியாருக்குக் கடிதம் எழுதி எனது மகிழ்ச்சியைத் தெரிவித்தேன்.

என்னதான் எவ்வளவுதான் இராஜாஜி அவர்கள் நாயக்கர் முகர்ந்தாலும், கசந்தாலும், துப்பினாலும்

இராஜாஜியின் வாக்கே நாயக்கருக்குத் தேவரின் திருவாக்காகச் சில சமயங்களில் அமைந்து விடுகிறது.

திருவண்ணாமலை என்னும் திருப்பதிக்குச்சென்று ஆச்சாரியார் அவர்களை வணங்கி, அவரது அருளும் கடாட்சமும் பெற்றபின் அல்லவா தமது தள்ளாத வயதில் மணியம்மையை ஓர் ஊன்று கோலாகக் கருதித் தம் கையில் பிடித்துக் கொண்டார்.

(இப்படித்தான் பெரியார்-மணியம்மை திருமண ஏற்பாடு குறித்து பலரும் தவறாக எண்ணினர்.)

நாயக்கரின் இந்தப் பொருந்தா மணத்திற்குபின் தானோ என்னவோ இராஜாஜி ஒரு கூட்டத்தில், 'புருஷனும் மனைவியும் ஒத்த வயதினராய் இருந்தால் இருவரும் ஏக காலத்தில் வ்யோதிகத்தை அடைந்து விடுவார்கள். அப்போது ஒருவருக் கொருவர் உதவியாக இருப்பது அருமை. ஆதலால் புருஷனை விட மனைவி பன்மடங்கு வயதில் குறைந்தவளாக இருந்தால் புருஷன் கிழவனாகும் போது மனைவி திடங்குன்றாது அவனுக்குச் சேவை செய்து வாழ முடியும்' என்று பேசினார்.

திருச்சி ஜங்ஷனில் வண்டியைவிட்டுக் கீழே இறங்கியதும் நானும் ஷெரீபும் சூடான காபியைத் தேடிக் கொண்டு புறப்பட்டோம்.

மணி, இதோ அய்யா காபி குடிக்கப் போகிறார். கூஜாவை எடுத்துக் கொண்டு அவர்களுடன் போ. கூஜாவில் ஒரு கப் காபி போட்டுக் கொள், நீயும் ஒரு கப் குடி. அய்யா துட்டுக் கொடுப்பார். நீ கொடுக்க வேண்டாம் என்று கூறி அப்பெண்ணையும் எங்களுடன் அனுப்பி வைத்தார் பெரியார்.

காபிக்காக நாங்கள் இருந்த பிளாட்பாரத்தை விட்டு முதல் பிளாட்பாரத்தை அடைந்தோம். ஆனால் அந்த நேரத்தில் காபிக் கடை மூடிக் கிடந்தது.

ஸ்டேஷனுக்கு வெளியே சென்று ஒரு சாயாக் கடையில் ஆளுக்கொரு கோப்பை குடித்துவிட்டு பெரியாருக்குச் சூடாகக் கொண்டு போய்க் கொடுத்தோம்.

பட்டுக்கோட்டையில் ஒரு கல்யாணத்திற்குத் தலைமை தாங்கச் சென்ற பெரியாரும், அவருடைய அருமைக் காரியதரிசியும் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டார்கள்.

நாங்கள் இருவரும் வரும்போதே கும்பகோணம் போய்ச் சேர்ந்தோம்.

(இந்தச் சந்திப்புக்குப்பின் மணியம்மையை இரண்டாம் தடவையாக 2-4-57இல் ஏற்காட்டு மலையுச்சியில் பார்த்தாகக் குறிப்பிடுகிறார்.)

(கோவை அய்யாமுத்து, நான் கண்ட பெரியார், 1957)

அய்யாவின் உடல்நிலை 1943இல் எப்படி இருந்தது என்பதற்கு மணியம்மையார் 1943இல் குடியரசில் விடுத்த இந்த அறிக்கை சான்றாகும். அம்மையார் இவ்வாறு குடியரசில் அறிக்கை வெளியிட்டபோது பெரியாருக்கு வயது 63. எனவே எவ்வளவு கண்காணிப்புடன் அம்மா கவனித்திருப்பார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

வேலூர் அ. மணி என்னும் பெயரில் இடம்பெற்ற அறிக்கை:

பெரியாருடன் குற்றாலத்திலும், ஈரோட்டிலும் ஒரு மாத காலமிருந்தேன். அவர் உடல்நிலை மிகப் பலவீனமாகவும் நாளுக்கு நாள் மெலிவாகியும் வருகிறது. அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவருக்குப்பின் இயக்க காரியங்களைப் பார்க்கத் தகுந்த முழு மாதக் காலமும் உழைக்க முழுக் கொள்கைக்காரர்களும் கிடைப்பார்களா என்கிற கவலையிலே இருக்கிறார். இயக்கத்துக்காக என்று தன் கைவசமிருக்கும் சொத்துக்களை என்ன செய்வது என்பது அவருக்கு மற்றொரு பெருங் கவலையாய் இருப்பதைக் கண்டேன். அதோடு இயக்கத்துக்கு வேலை செய்யச் சில பெண்கள் வேண்டுமென்றும் அதிக ஆசைப்படுகிறார். அப்பெண்களுக்கு ஜீவனத்துக்கு ஏதாவது வழிசெய்து விட்டுப் போகவும் இஷ்டப் படுகிறார். இந்தப்படி பெரியாரை நான் ஒருமாத காலமாக ஒரு பெருங்கவலை உருவாகக் கண்டேன். அவர் நோய் வளர அவை எருப்போலவும் தண்ணீர் பாய்ச்சுவது போலவும் இருக்கிறது. நான் ஒரு பெண் என்ன செய்ய முடியும்?

இன்னும் சில பெண்கள் முன் வரவேண்டும். அவர்கள் பாமர மக்களால் கருதப்படும் மானம், ஈனம், ஊரார் பழிப்பு யாவற்றையும் துறந்த நல்ல கல்லுப்போன்ற உறுதியான மனதுடைய நாளைய வாரிசுகளாய் இருக்க வேண்டும். அவர்களது முதல் வேலை பெரியாரைப் பேணுதலும் பெரியார் செல்லுமிடங்களுக்கெல்லாம்

**சென்று இயக்க மக்களை அறிமுகம் செய்து கொள்ள வேண்டியதும் இயக்கப் புத்தகங்களைப் படிக்கவும் எழுதவும் ஒன்றாய்ப் பேசவும் தெரிந்துகொள்ள வேண்டும். வீடுகள்தோறும் இயக்கப்புத்தகங்களும் 'குடி அரசும்' இருக்கும்படியாகவும் செய்து அவற்றை நடத்தும் சக்தி பெறவேண்டும். இந்நிலையில் சுயமரியாதை இயக்கம் இருக்கிறது பெண்மக்களே யோசியுங்கள்.** குடிஅரசு 23.10.1943

மணியம்மையாரின் இந்த அறிக்கை அவர் திராவிடர் கழகத்தின் முழுநேரப் பணியில் இறங்கும் முன், அதாவது பெரியாரிடம் செயலாளராக (காரியதரிசி) வந்து சேரும் முன் வெளியிட்ட அறிக்கை.

எனவே பெரியாரிடம் வந்து சேரும் முன்னரே அம்மா அவர்கள் தன் கடமை, பொறுப்பு ஆகியன என்ன என்பதை நன்கு உணர்ந்து தெளிந்த பின்னரே வந்து சேர்ந்தார்.

இயக்க நலனுக்கும் உழைத்தார் என்பதால் அய்யா எழுதினார்

**அம்மா என்னிடம் தொண்டராக வந்தபிறகுதான் என்னுடைய கருத்துகள் பல ஆயிரம் புத்தகங்களாக வெளிவர முடிந்தது**

இவ்வாறு மணியம்மையார் இயக்க ஏடுகள் விற்றதை அன்றைய நாளில் வடநாட்டு ஏடுகள் ஒரு விந்தையாகவே எழுதின.

அன்னை நாகம்மையார், பெரியாரின் முதல் துணைவியார் 1933இல் இறந்தார். நாகம்மையார் உயிருடன் இருந்தவரை கழகத் தோழர்களுக்கு அன்னையாக விளங்கிய அவர் பெரியார் இல்லத்தில் தினமும் உணவு வழங்கியுள்ளார்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கி நடத்திய காலத்தில் பெரியார் இல்லத்தில் அவருடைய ஆதரவாளர்கள் பலரும் தங்கிச் சாப்பிட்டதுண்டு.

1943இல் அன்னை மணியம்மையார் பெரியாரின் செயலாளராக வந்தபிறகு பெரியாரின் இல்லத்தில் அண்ணா, மன்னை நாராயண சாமி, கலைஞர், அரங்கண்ணல் என்று பலரும் அன்னை மணியம்மையாரின் உபசரிப்பைப் பெற்றவர்கள்.

அன்னை நாகம்மையாரைப் போலவே, அன்னை மணி யம்மையாரும் திராவிட இயக்கத் தோழர்களுக்குத் தம் கையாலே உணவு சமைத்துத் தாய்மை உணர்வோடு அளித்துள்ளார்.

மணியம்மையார் மறைந்தபோது தம் இரங்கலுரையில் தலைவர் கலைஞர் இதைச் சுட்டிக் காட்டுகிறார்.

**பெயர் மாற்றம்**

மணியம்மையாருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயர் காந்திமதி என்பதாகும். காந்திமதி என்ற பெயரை அரசியல்மணி என்று மாற்றியவர் அண்ணல் தங்கோ ஆவார்.

அண்ணல் தங்கோ வேலூரில் மணியம்மையாரின் இல்லம் இருந்த பகுதியில் குடியிருந்தார் என்று அறிகிறோம்.

கே. அரசியல்மணி அல்லது க. அரசியல் மணி என்று பெயர் மாற்றம் பெற்றவர். பின்னர்க் கே.ஏ. மணி என்று பெயர் சுருக்கி அழைக்கப்பெற்றார். விடுதலையில் கே.ஏ. மணி, க.அ. மணி ஆகி, பின் மணி ஆகிய பெயர்களில் எழுத்து ஓவியங்கள் சில தீட்டியுள்ளார்.

பெரியார் இளம்வயதில் 'மணி' என்றே அழைத்திருக்கிறார். பிறகு 'அம்மா' என்றே விளித்திருக்கிறார்.

**அம்மாவின் எழுத்தாற்றலுக்கு மாதிரிகள்**

அம்மாவின் எழுத்தாற்றல் 'குடியரசு' வாயிலாக வெளிப் படுகிறது. முதல்முதலில் அவர் எழுதிய கட்டுரை 'இராமாயணமும் கந்தபுராணமும் ஒன்று' என்று காட்டும் கட்டுரை. இரண்டுக்கும் ஏறத்தாழப் பல ஒப்புமை காட்டி எழுதப்பெற்ற கட்டுரை. ஆனால் அதன் தொடர்ச்சி உடனடியாக வெளிவராமல் ஓரிரு ஆண்டுகள் கழித்தே வெளிவந்தது.

பெரியார் பணியே பெரும்பணி ஆகிவிட்டமையால் அம்மா அதிகமாக எழுதவில்லை. அய்யாவின் மறைவிற்குப் பின் மீண்டும் அவருடைய எழுத்துப்பணி முப்பது ஆண்டுகளுக்குப் பின் தொடர்கிறது.

1949க்குப் பிறகு அய்யாவின் துணைவியாராக அவருக்குப் பணிவிடை செய்வது, அய்யா ஏற்படுத்திய திருச்சி ஆதரவற்ற குழந்தைகள் இல்லமான நாகம்மையார் இல்லப் பொறுப்பு, பெரியார் மணியம்மையார் இல்லப் பொறுப்பு ஆகியவற்றை மேற்கொள்வது, அய்யாவின் உடன்செல்வது ஆகிய பணிகள் மேற்கொள்ளக் காண்கிறோம்.

பாரதி விழா

**பிற சமயமும் நம் (இந்து) சமயமும்**

12 வருடத்துக்கு முன் ஒரு இந்துப் பெண் எழுதியது) (மணி தொகுத்தது)

தேவர்களின் காமவிகாரம் (மணி திரட்டியது)

தாழ்த்தப்பட்டோர் முன்னேற வழி - பெரியார் பேசியது (மணி தொகுத்தது)

சீதையைப் பற்றிய ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி

ஆகியன வெளிவந்தன. அவற்றை இங்குக் காண்போம்.

## 1. சீதையைப் பற்றிய ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி

வால்மீகி தனது ராமாயணம் என்னும் காவியத்தில் சீதையை ஒரு கற்புற்ற உயர்குணப் பெண்ணாகச் சித்தரிக்க வேண்டும் என்று கருதி இருந்திருக்கிறாரா? அல்லது சீதையைக் காம உணர்ச்சிக் காதல் கொண்ட ஒரு சாதாரணப் பெண்ணாகச் சித்தரிக்க வேண்டும் என்று கருதி இருந்திருக்கிறாரா என்பது இந்த ஆராய்ச்சியின் கருத்தாகும்.

இதில் எடுத்துக்காட்டப்படும் விஷயங்கள் எல்லாம் வால்மீகி இராமாயணத்தில் உள்ளவைகளேயாகும்.

1. சீதையின் பிறப்பு வால்மீகியால் இழித்துரைக்கப் பட்டிருக்கிறது

(அ) சீதை யாராலோ எப்படியோ பெற்று, கட்டாந் தரையில் போட்டுப் புழுதியினால் முடப்பட்டுக் கிடந்திருக்கிறாள்.

(ஆ) இதனால் சீதையை அவள் பக்குவமடைந்து வெகு நாள் வரையிலும் யாரும் மணக்க வரவில்லை.

(இ) வளர்த்த தந்தை இதற்கு ஆக வருந்தி இருக்கிறார்.

இந்தச் சங்கதியை வால்மீகி சீதையின் வாய்மொழி யாகவே ஆரண்ய காண்டத்தில் ரிஷி ஆஸ்ரமத்தில் ரிஷியின் மனைவிக்குச் சீதையே சொன்னதுபோல் சித்தரித்து இருக்கிறார்.

2. சீதையின் குணத்தில் பரதன் அதிருப்திப்பட்டதாகவும் சீதையைப் பரதன் வெறுத்திருப்பதாகவும் சித்தரித்து இருக்கிறார்.

இதையும் வால்மீகி சீதையின் வாய்மொழி யாகவே அயோத்தியா காண்டத்தில் ராமன் வனம் செல்லும்போது, சீதையைத் தன்னுடன் கூட வனத் திற்கு வரவேண்டாம் என்றும், தான் திரும்பிவரும் வரை

பரதனிடத்தில்அவனுக்கு நல்லவளாய் நடந்து கொண்டு இரு; அதனால் நமக்கு லாபம் கிடைக்கு மென்றும் சொன்னதற்குப் பதிலாக என்னை வெறுக்கும் பரதனிடத்தில் நான் இருக்கமாட்டேன் என்பதாகச் சீதை சொன்ன தாகவும், இங்கு உள்ள நாள் எல்லாம் நம்மை அனுபவித்துவிட்டுக் காட்டுக்குப் போகும்போது நம்மைத் தள்ளப் பார்க்கிறான் என்றும் காட்டில் இராமனின் அழகைக் கண்டு வேறு பெண்கள் மோகித்து வசப்படுத்திக் கொண்டால் நம் பாடு திண்டாட்டமாகப் போய்விடுமே என்றும் எண்ணிய தாகவும் சித்தரிக்கிறார்.

அன்றியும் சீதையைப் பார்த்து, "நீ பரதனால் பாராட்டத்தக்கவள் அல்ல" என்று இராமன் வாயால் சொன்னதாகச் சித்தரித்து இருக்கிறார்.

லட்சுமணன் வாயாலும், சீதையை ஒரு சாதாரணப் பெண் என்றும், சீதை கெட்ட நடத்தை உள்ளவள் என்றும் ஆரண்ய காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்.

சீதையை அவள் வாய்ப்பேச்சாலேயே "தன் மனைவியைப் பிறருக்குக் கூட்டிக் கொடுக்கும் கூத்தாடிபோல் என்னைப் பரதனுக்கு விட்டு லாபம் அடையப் போகிறாயா... பேடியே ஆண்மை யற்றவனே" என்றும், அற்பன் என்றும் கூடத் தன் கணவனைக் கேட்டதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்.

கணவன் சீதையை உன் நகைகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு வா என்று சொல்லியும் ஒரு தடவை கழற்றிவிட்டு மறுபடியும் போட்டுக் கொண்டே, காட்டுக்குப் போனதாகச் சித்தரிக்கிறார்.

கணவன் பல தடவை சொல்லியும் மர உரி தரிக்காமலே காட்டுக்குப் போனதாகச் சித்தரிக்கிறார்.

அது உண்மை என்று கருதும்படியாகவே இராமன் வாயாலும் நான் உன்னைச் சோதித்துப் பார்த்தேன் என்று சொன்னதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரிக்கிறார்.

மற்றும் பல இடங்களிலும் சீதை கற்பில் சந்தேகப்பட்டதாக இராமன் வாயால் சொன்னதாகச் சித்தரிக்கிறார்.

சீதை தனது மதிப்புக்குரிய கொழுநன் லக்ஷ்மணனை, அவனது நல்ல எண்ணத்தையும் அவன் செய்த சேவையையும் சிறிதும் அறியாமலும் நன்றி இல்லாமலும் தன்மேல் லட்சுமணன் ஆசைப்பட்டு,

தன்னை அடைந்து அனுபவிக்கக் கருதியதாக வெளியில் சொல்லி, ஒரு சாதாரண இழிகுலப் பெண் நடந்துகொள்ளும் குணம் பேச்சுப்போல், சீதை வாயாலேயே எடுத்துக்காட்டி சித்தரிக்கிறார்.....

(குடியரசு, 10-11-1945)

அம்மாவின் முதல் கட்டுரை 'இராமாயணமும் கந்தபுராணமும் ஒன்றே' என்பது. அது மிக நீண்ட கட்டுரையாதலால் இங்கே அதனை அளித்திடவில்லை.

எனினும் அக்கட்டுரை அம்மாவின் எழுத்தாற்றலுக்குப் பகுத்தறிவுச் சிந்தனைக்கு மிக உயர்ந்த எடுத்துக்காட்டு.

இராமாயணத்தை ஆழ்ந்து படித்ததினாலேயே அம்மா அவர்கள் அதனை உள்வாங்கி, அதேவேளையில் கந்தபுராணத்தையும் உள்வாங்கி இரண்டையும் ஒன்று என ஒப்பீடு காட்டக் காண்கிறோம்.

இரண்டு நூல்களையும் மேலெழுந்த வாரியாகப் படித்தால் இதுபோல் ஒப்பீடு காட்டிட இயலாது. ஆழமான புலமை வேண்டும். அதே வேளையில் பகுத்தறிவு நோக்கு வேண்டும்.

இந்த இரண்டும் மணியம்மையாரிடம் இளம்வயிதிலே நிரம்பக் காணப்படுகின்றன. மணியம்மையார் பெரியார் தொண்டை முழு நேரமாகக் கொள்ளாமல் திராவிட இயக்க மேடைப் பேச்சாளராக, திராவிடர் கழகப் பிரச்சாரமாக விளங்கியிருந்திருப்பாரேயாகில் அவருடைய சிந்தனைத் தெளிவை, திராவிட இயக்க உணர்வை மேலும் உணர்ந்து போற்ற வாய்ப்பு கிடைத்திருக்கும்.

சீதையைப் பற்றிய ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி எனும் கட்டுரையை வால்மீகி இராமாயணம் என்னும் காவியத்தின் அடிப்படையில் மணியம்மை எழுதியுள்ளார்.

கம்பராமாயணம் படித்த நமக்குச் சீதையைக் குறித்த படப்பிடிப்பு மிகவும் உயர்வானதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் அம்மா அவர்கள் வால்மீகி இராமாயணம் காட்டும் சீதையைக் குறித்த தகவல்களையெல்லாம் எடுத்துக் கூறுகையில் சீதையைப் பற்றி நம் உயர் மதிப்பு, அனுமானம், எண்ணங்கள் ஆகியன சிதைந்து விடுகின்றன.

கட்டுரையின் தலைப்பே 'சீதையைப் பற்றிய ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி' என்னும்போது தாம் சொல்லும் செய்திகள் எல்லாம் உண்மையானவை, வால்மீகி கூறியவை, தான் ஒன்றும் புனைந்து உரைத்தவையோ, பொய்ச் சுருட்டோ அல்ல என்று அம்மா தெளிவுபடக் கூறுவதாகத் தோன்றுகிறது.

மேலும், 'இதில் எடுத்துக்காட்டப்படும் விஷயங்கள் எல்லாம் வால்மீகி இராமாயணத்தில் உள்ளவையாகும் என்று சத்தியவாக்கு உரைப்பதன் வாயிலாக, அம்மா எழுதியவைகளைக் குறித்துச் சிறிதும் அய்யம் கொள்ள நேரிடவில்லை. அதுமட்டுமல்லாது சீதையைப் பற்றிய தகவல்களைப் படித்து அவை வால்மீகி எழுதியவை என்பதால் அதிர்ச்சியில் உறைகிறோம்.

அம்மாவின் இந்தக் கட்டுரையிலிருந்து அறிகின்ற வால்மீகி தெரிவித்த அதிர்ச்சிச் செய்திகளை வரிசைப்படுத்தலாம்.

1. சீதையின் கற்பு வால்மீகியால் இழித்தே உரைக்கப்பட்டுள்ளது.

2. சீதையை வெகுநாள் வரையில் யாரும் மணக்க முன்வரவில்லை.

3. சீதையின் குணத்தில் பரதன் அதிருப்தியடைந் துள்ளான்.

4. சீதையைப் பரதன் வெறுத்திருக்கிறான்.

5. என்னை வெறுக்கும் பரதனிடத்தில் இருக்க மாட்டேன் என்று சொல்லிச் சீதை காட்டுக்குச் சென்றாள்.

6. காட்டில் இராமனின் அழகைக் கண்டு வேறு பெண்கள் மோகித்து வசப்படுத்திக் கொண்டு விடுவார்கள் என்று இராமர் மீது சந்தேகம் கொள்கிறாள்.

7. இலட்சுமணன் வாயாலும், சீதையை ஒரு சாதாரணப் பெண் என்றும், சீதை கெட்ட நடத்தை உள்ளவள் என்றும் ஆரண்ய காண்டத்தில் வால்மீகி கூறியுள்ளார் என்பதும் அதிர்ச்சியளிக்கின்றன.

8. சீதை இராமனைப் பார்த்து பேடியே, ஆண்மை அற்றவனே, அற்பனே என்றெல்லாம் திட்டிப் பேசியதாக வால்மீகி அயோத்யா காண்டத்தில் கூறியுள்ளார்.

9. இலட்சுமணன் தன் மேல் ஆசைப்பட்டுத் தன்னை அடையக் கருதியதாகச் சீதை கூறுகிறாள்.

2. பாரதி விழா

என் அருமைத் திராவிட மக்களே! நீங்கள் இம்மாதம் நடந்த பாரதி விழாவில் சிலர் கலந்துகொண்டீர்கள். சிலர் நீங்களே விழாக் கொண்டாட்டத்தை நடத்தினீர்கள்.

உங்களுக்குப் பாரதி திராவிடரா? ஆரியரா? என்பது தெரியவில்லை. பாரதி ஆரியப் பற்று உள்ளவரா? திராவிடப் பற்று உள்ளவரா? என்பதும் தெரிந்துகொள்ள முடியவில்லை. தீபாவளி, கிருஷ்ண ஜெயந்தி, ராமநவமி, சமணர் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆகியவைகளைப் போல் பாரதி விழாவும் கொண்டாடினீர்கள்.

பாரதியின் திராவிடப் பற்றும், ஒப்பு நோக்கமும் கீழ்வரும் அவரது பாட்டுகளில் காணப்படும் குறிப்புகளி லிருந்து உணர்ந்து பாருங்கள்.

பிறரும், "அப்படித்தான் செய்வோம் யார் கேட்பது" என்றால் உங்களுக்கு வேறு யார் தான் மான உணர்ச்சி அளிக்க முடியும். பாரதியின் உள் நிலைமை தெரிய அவரது பாடல்களைச் சற்றுக் கூர்ந்து பாருங்கள்.

### பாரதியின் நாட்டுப்பற்று

உன்னத ஆரியநாடெங்கள் நாடே

***

### பாரதியின் இனப்பற்று

முன்னையிலங்கை அரக்கர்அழிய
முடித்த வில் யாருடைய வில்

ஆரிய ராணியின் வில்

ஆரிய ராணியின் சொல்

ஆரிய தேவியின் தேர்

***

### பாரதியின் நாட்டுப்பற்று

வரலாறு பேரிமய
வெற்புகுதற் பெண்குமரி
யீராரும் ஆரியநாடென்றேயறி

***

### பாரதியின் மகிழ்ச்சி

ஆரிய காட்சி பேரானந்தமன்றோ

***

### பாரதியின் நாட்டுப்பெருமை

ஆதிமறை தோன்றியலாகிய நாடே

***

### பாரதியின் கடவுள்
### (இந்திரனைத் தேவர்கள் வேண்டுவது போலவே)
### துதி (கிருஷ்ணன்)

ஆரியர் தம் தர்மநிலை ஆதரிப்பான்
ஆரியர் பாழாகா தருமறையின் உண்மை தந்து
எங்களாரிய பூமியெனும் பயில் மங்களம் பெற
ஆரியர் வாழ்வினை ஆதரிப்போனே
ஆரிய நீயுநின் அறமறந்தாயோ
வெஞ்செயலரக்கரை வீட்டிடுவோனே
ஆரியர் கோனே

***

### பாரதியாரின் மொழிப்பற்று
### (ஆங்கிலம் பற்றி)

ஆரியர்க்கிங்குஇருப்பாவதை

***

### பாரதி தமிழ்ப்பற்று

ஆதிசிவன் பெற்றுவிட்டான் என்னை ஆரிய மைந்தன்
அகத்தியனென்றோர் வேதியன் கண்டு....................
இலக்கணஞ்செய்து கொடுத்தான்

ஆன்ற மொழிகளினுள்ளே உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்

***

### பாரதியாரின் ஆசை

ஆரிய நாட்டினர் ஆண்மை
யோடியற்றும் சிறிய முயற்சிகள்

என்றெல்லாம் வெளுத்துவாங்கி இருக்கிறார்.

நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, கலைப்பற்று, கடவுள்பற்று ஆகியவைகளைப் பாரதி பாடல் சுவைப்போர்களே பாரதியாரின் சுபாவத்தை நன்றாய்ச் சுவையுங்கள்.

தமிழருக்கு மானமிருந்தால் தமிழ் நாடும், தமிழ் மொழியும் இந்நிலையில் இருக்குமா? இங்கு ஆரியர் ஆதிக்கம் இவ்வுயர்நிலையில் இருக்குமா?

(குடியரசு, 23-9-1944)

'பாரதி விழா' என்னும் கட்டுரை பாரதியாரைப் பற்றிய புதிய பார்வையாக அமைகிறது. பாரதி ஆரியப்பற்று உள்ளவர் என்று 'அம்மா'வின் கூற்றை நம்மால் ஏற்க இயலாதுபோல் தோன்றினாலும் பாரதியார் நாட்டுப்பற்று, பாரதியின் இனப்பற்று, பாரதியின் மகிழ்ச்சி, பாரதியின் நாட்டுப் பிறப்புரிமை, பாரதியின் கடவுள், பாரதியின் மொழிப்பற்று, பாரதியின் தமிழ்ப்பற்று, பாரதியாரின் ஆசை ஆகிய தலைப்புகளை இட்டு 'ஆரியம்' எனும் சொல்லைப் பாரதி இத்தலைப்பின் கீழ்வரும் பாடல் வரிகளில் கையாண்டு இருப்பதை அம்மா எடுத்துக்காட்டுகிறார்

சூத்திரத்துக்கு ஒரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்குவேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின்
சாத்திரமன்று அவ
சழக்கர்களின் குப்பையே

என்ற பாரதி

பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே
வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே

எனச் சுதந்திரப் பள்ளுப் பாடும் பாரதி 'ஆரியம்' என்ற சொல்லை வைதீகப் பெருமை கூறக் கையாண்டிருப்பாரா? வேறு பொருள் இருக்க வேண்டும் எனச் சிந்திக்கச்செய்வதாக இருக்கிறது.

3. பிறசமயமும் நம் (இந்து) சமயமும் (12 வருடத்துக்குமுன் ஒரு இந்துப்பெண் எழுதியது)

இன்றைய தினம் உலகத்திலுள்ள 200 கோடி ஜனங்களுக்கு முக்கியமாய் 4, 5 மதங்களே பெரும் பெரும் மதங்களாகி யிருக்கின்றன.

அவற்றுள் சுமாராக, கிறிஸ்துமதத்திற்கு 60 கோடியும் பௌத்த மதத்திற்கு அதன் உட்பிரிவுகளையும் சேர்த்து 60 கோடியும் இசுலாம் மதத்திற்கு 40 கோடியும், இந்து மதத்திற்கு 20 கோடியும், நாஸ்திகர்கள் 20 கோடியுமாக இருக்கின்றதினாலும் இந்து மதம் தவிர மற்ற மதங்கள் எல்லாம் வேறு மதங்களில் இருந்து வருகின்றவர் களையெல்லாம் தங்களின் மதங்களில் சேர்த்துக் கொள்ளுவதும் நாளுக்கு நாள் தங்கள் மதங்களை விர்த்தி செய்வதும் தங்கள் தங்கள் மதங்களில் உள்ள மக்கள் எல்லோரையும் சமமாகக் கருதி ஒற்றுமைப் படச் செய்வதுமான முயற்சியில் எல்லோருக்கும் சமமான கல்வியும், வாழ்க்கையில் சரி சுதந்திரமும் அளிக்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் இந்து மதம் என்பதில் மாத்திரம் மனிதனை மனிதன் பிரித்துக் காட்டிக் கீழ்மேல் உயர்வு தாழ்வு நிலையை உண்டாக்கி வேறு மதத்தில் இருந்து வரும் எவனையும் சேர்க்காமலடித்து இந்து மதத்தி லிருந்தும் அநேகரை வேறு மதத்திற்குப் போகும்படி நிர்ப்பந்தப்படுத்தி ஜன சமூகத்தை வருஷத்திற்கு வருஷம் குறைத்துக் கொண்டே வரப்படுகிறது.

மதக் கொள்கையைப் பற்றிப் பேசும்போது மாத்திரம் "இந்து மதம், அன்பு மதம், சமத்துவ மதம், சமரச சன்மார்க்க மதம்" என்று சொல்லுவது, நடக்கும் போது மாத்திரம் சமரசமில்லை, சன்மார்க்க மில்லை, அன்பு இல்லை, இரக்கமில்லை என்பதும், மற்றும் மற்ற மதங்களில் இல்லாத தத்துவங்கள் வேதாந்த சாரங்கள், ஞானங்கள் இந்து மதத்தில் இருக்கின்றது என்று பெருமை பேசிக் கொண்டு ஆத்மாவே கடவுள் என்றும், ஒரே ஆத்மா உலகிலெல்லாம் பிரகாசிக்கின்றதென்றும், எல்லா உடல்களி லிருக்கும் ஆத்மா ஒன்றே என்றும், அதற்குப் பற்றில்லை என்றும், அதற்குச் சாவு இல்லை என்றும், பிறப்பு இல்லை என்றும், ஆத்மா, கடவுள், தோற்றம் ஆகியவை மூன்றும் ஒன்றை ஒன்று பிரியாத தன்மையுடையதென்றும், இன்னும் ஏதேதோ பித்துக் கொள்ளி போல் பேசி பெருமையடைந்து கொண்டு வாழ்க்கையில் அவை ஒன்றுக்கொன்று சிறிதும் சம்பந்த மில்லாமல் நடந்து மனித சமூகத்திற்குப் பல கொடுமை களை இழைத்துக் கொண்டு வருவதாயிருக்கின்றது.

மற்ற சமயக்காரர்களெல்லாம் தாங்கள் செய்யும் தருமங்களையும், காட்டு மிருகங்களையும், புரியம் கர்மங்களையும் இந்த உலகத்திலிருக்கும் மக்களுடைய இந்த உலகத்திலேயே நன்மை உண்டாகும்படியும் அதனுடைய பலனை இந்த உலகத்திலே அடைவதாகவும் சொல்லிக் கஷ்டப்படுகின்ற ஜீவன் யாராயிருந்தாலும் தேவைப்படுகின்ற ஜீவன் யாராயிருந்தாலும் அவர்களுக் கெல்லாம் தங்களால் ஆன வித்தியாசமில்லாமல் தங்கள் மதமக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்படும்படியாக உதவி வருகின்றார்கள். மீதியுள்ளதை நாட்டின் முன்னேற்றத்திற்கும் உதவி பெரிய பெரிய நன்மைகளைச் செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்து மதக்காரரோ நாங்கள் செய்வது மக்களுக்கு இந்த உலகத்திற்குப் பயன்படுகின்றதா என்பதைவிட மேல் உலகத்திலுள்ளவர்கள் திருப்தி யடைவார்களா? சந்தோஷமடைவார்களா? நமக்கு

வேண்டியதை அவர்கள் கொடுப்பார்களா? நாம் இந்த லோகத்தைவிட்டுப் போனபிறகு மேல் லோகத்தில் நமக்கு நன்மை கிடைக்குமா? இந்த ஜன்மம் போன பிறகு அடுத்த ஜன்மத்தில் நமக்குப் பெருமையும் மேன்மையும் கிடைக்குமா? என்கிற கவலையிலேயே செய்வதுடன் கஷ்டப்படுபவனையும் தேவைப்படுபவனையும் லட்சியம் செய்யாமல் யாருக்குக் கொடுத்தால் மேல் லோகத்தில் பலனுண்டு என்கிற கவலையின்மேல் சுயநல எண்ணங் கொண்டு எவனெவன் தனக்குக் கொடுத்தால் அதிகமான பலன் மேல் லோகத்தில் கிடைக்குமென்றும் கடவுள் தனக்கே கொடுக்கும்படி சொன்னார் என்றும் பித்தலாட்டமாய் அறிவுக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாததால் எழுதி வைத்திருக்கின்றானே அவைகளை எல்லாம் நம்பி அந்தப்படியே செய்கின்றவர்கள்.

மற்ற மதக்காரர் எல்லோரும் தங்கள் மதக் காரர்கள் உண்மைக்கும், மற்ற மதக்காரர்கள் நன்மைக்கும் என்று பள்ளிக்கூடம் கட்டி ஏராளமான பொருள் செலவு செய்து உபாத்தியாயர்களை வைத்துப் படிப்பு சொல்லிக் கொடுக்கின்றார்கள். இந்து மதக்காரர் கோவில் கட்டி ஏராளமான பொருள் செலவு செய்து பார்ப்பார்களையும் தாசிகளையும் வைத்து உற்சவங்கள் செய்கின்றார்கள். படிப்பைப் பற்றியோ கவலையே இல்லாமலிருக் கின்றார்கள்.

மற்ற மதக்காரர்கள் மக்களின் நோய்களைச் சௌக்கியம் செய்ய ஆஸ்பத்திரிகள் கட்டி வைத்தியம் செய்கின்றார்கள். இந்து மதக்காரர்கள் நோய் வந்தாலும் காசில்லாமல், வேறொருவன் செய்யும் வைத்தியத்தைக் கூட செய்து கொள்ளாமல் அந்த நோய்க்கும் கடவுளை நம்பிக் கடவுளுக்கும் 'சில்லரை தேவதை'களுக்கும் வேண்டிக் கொள்வதின் மூலமும், கோயில்களுக்குப் போய்ப் படுத்துக் கொள்ளுவதன் மூலமும் காசையும் நேரத்தையும் செலவு செய்து காயலாவைப் பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

மற்ற மதக்காரர்கள் பெண்களுக்குப் படிப்புக் கொடுத்து அறிவு உண்டாக்கி வாழ்க்கையில் புருஷர் களுக்குக் குடும்பக் கஷ்டமில்லாமல் இருக்கும்படியாக பயன் பெறுகின்றார்கள். இந்து மதக்காரர்கள் படிப்புக் கொடுக்காமல் போவதோடல்லாமல் ஏறக் குறைய 100க்கு 50 பெண்களுக்குப் "பிசாசு" பிடிக்கச் செய்து பேயோட்டு கின்றார்கள்.

கடைசியாக கடவுள் விஷயத்திலும் 60 கோடி கிறிஸ்தவருக்கு ஒரே கடவுளாகவும், 60 கோடி புத்தர்களுக்கு ஒரு கடவுள் கூட இல்லாததாகவும், 40 கோடி முகமதியர்களுக்கும் ஒரே கடவுளாகவும், அதுவும் உருவம் பால் இல்லாததாகவும் இருக்கும் போது இந்துக்களுக்கு மாத்திரம் 20 கோடிப் பேருக்கு 88 கோடி கடவுள்களும் அவைகளுக்கும் "கண்ணு, மூக்கு, கை கால்கள், அதுவும் ஒவ்வொன்றுக்கு ஆயிரக்கணக்கான கண்கள், இரண்டாயிரக்கணக்கான கைகள், பதினாயிரக் கணக்கான பெண்ஜாதி, பதினாயிரக் கணக்கான தாசிவேசி வைப்பாட்டிகள், பிள்ளைகுட்டி, மாமன், மாமி, மைத்துனன், மாமனார், மருமகன், மருமகள், பேரன், பேத்தி, கொள்ளுப் பேத்தி முதலிய பந்து வர்க்கங்களுடன் இருக்கின்றன."

இவை மாத்திரமல்லாமல் மற்ற மதச் சடங்கு களுக்கு, பூசையோ, சாப்பாடோ, ஸ்நானமோ,. வேஷ்டி துணியோ, கல்யாணம் கருமாதியோ கல்லெரிப்போ இல்லாமல் இருப்பதும், இந்துமதக் கடவுள்களுக்கு மாத்திரம் தினம் ஒரு வேளை மூன்று வேளை பூசையும், ஸ்நானமும், அபிஷேகமும், ஒவ்வொரு சாமிகள் பூசையாள் 1க்கு 1 படி, 2 படி, 100 படி, 10 மூட்டை, 20 மூட்டை, 50 மூட்டை அரிசி வீதம் சமைத்து வைத்து ஆராதனை செய்வதும், மற்றும் பல பல விலையுயர்ந்த சாமான்கள் வைத்து நைவேத்தியம் செய்வதும், கணக் கில்லாமல் துணிகள் கட்டுவதும் நகைகள் போடுவதுமான செலவுகள் செய்து வருகிறார்கள்.

மதத்தலைவர் அல்லது தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் என்பவைகளிலும் மற்ற மதக் காரருக்கு ஒவ்வொருவரே உண்டு. அதாவது கிறிஸ்து சமயத்திற்கு கிறிஸ்துநாதரும், இஸ்லாம் சமயத்திற்கு மகமது நபியும், பௌத்த சமயத்திற்கு புத்தரும் இப்படி ஒவ்வொருவரே உண்டு. ஆனால் இந்து சமயத்திற்கு முதலில் யார் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகும். அப்படிக் கண்டுபிடித்துவிட்டால் பிறகு அவர்களைப் போல் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்காக இலட்சக்கணக்கான அவதாரம், தேவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரிஷிகள், முனிவர்கள் முதலாகிய தெய்வ அவதாரமும் தெய்வ அம்சமும் பொருந்தியவர்கள் கணக்கு வழக்கில் அடங்காத அளவு ஆகிவிடும்.

சமய ஆதாரங்கள் விஷயத்தில் மற்ற சமயக் காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆதாரமே

உண்டு. அதாவது கிறிஸ்தவருக்குப் பைபிள், இஸ்லாமானவருக்கு குர்ஆன், பௌத்தருக்குத் திரிபீடகம் என்பவையாகும். ஆனால் இந்து சமயக்காரருக்கு 4 வேதம், 6 சாஸ்திரம், 18 புராணம் இவை தவிர, அவர் சொன்னது இவர் சொன்னது உதாரணமாக, மனு சொன்னது, பாராசர் சொன்னது, ரிஷிகள் சொன்னது, போநாயனர் சொன்னது, பகவான் சொன்னது, மாடு, குரங்கு, கழுகு, கிளி சொன்னது என்பவைகள் போன்ற கணக்கு வழக்குக்கடங்காத அநேகம் உண்டு.

இந்த விதமான ஆதாரங்களைப் பார்க்கும் உரிமை விஷயத்திலோ மற்ற சமயக்காரர்களில் யாரும் அச்சமய ஆதாரம் எதையும் கேட்க - பார்க்க - படிக்க - மனதில் இருத்த - உரிமையுண்டு. ஆனால் இந்து சமயக்காரருக்கோஅச்சமய ஆதாரத்தை நூற்றுக்கு மூன்று பேர் அதிலும் பெண்களை நீக்கிவிட்டால் 100-க்கும் ஒன்றரைப் பேர் மாத்திரமே படிக்க - கேட்க - பார்க்க உரிமையுடையவர்களாவார்கள். பாக்கி தொண்ணூறத் தெட்டரைப் பேர்கள் அவைகளைப் பார்த்தோ கேட்டோ படித்தோ விட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதும் கண்ணைக் குத்துவதும், நாக்கை அறுப்பதும் முதலாகிய பலவகை தண்டனைகள் படிப்படியாயுண்டு.

இப்படியிருக்க இதுபோலவே இன்னும் அநேக விஷயங்களில் இந்துமதம் வித்தியாசத்தை வைத்துக் கொண்டு அவைகளை நிலைநிறுத்த முயற்சிகளும் செய்துகொண்டு, இதன் பயனாகவே தேசத்தை அந்நிய நாட்டு ஆதிக்கத்திற்கும் உண்மைக்கும் விட்டுக்கொண்டு தேசத்தில் உள்ள மக்களை நாயினும் கடையாக கேவலமாய் நடத்தி இழிமக்களாக்கி அடிமைப்படுத்திக் கொண் டிருப்பதை மறந்து அநேகரை ஒப்புக்குச் சிறைக்குப் போகச் சொல்லுகின்றது.

எனவே பிறசமயத்திற்கும் நம் (இந்து) சமயத் திற்குமுள்ள தாரதம்மியத்தையும் அதனால் ஏற்பட்ட பலனையும் எனக்குத் தோன்றிய வகையில் ஒருவாறு எடுத்துச் சொன்னேன். இனி உங்களுக்குப் பட்ட படி முடிவு செய்து நடந்து கொள்ளுங்கள்.

பிற சமயமும் நம் (இந்து) சமயமும் (12 வருடத்துக்கு முன் ஒரு இந்து பெண் எழுதியது) எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் அம்மாவின் இளமைக்கால எண்ணங்களைக் காண்கிறோம். எல்லோரையும் போலவே தம்மை இந்துப்பெண் எனவும், தம் சமயம் இந்துச் சமயம் எனவும் அழைப்பதைக் காண்கிறோம்.

இது பகுத்தறிவுக் கண்ணோட்டம் வளர்ச்சி பெறாத நிலையில் எழுதப்பட்ட போதிலும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் எழுதியது.

பின்னாளில் கும்பகோணம் மறியல் போராட்டத்தின்போது அம்மாவிடம் முதிர்ச்சியைக் காண்கிறோம். வழக்கு விசாரணையின்போது தனக்குச் சமயமில்லை, தமிழர் மதம் என்றவாறு கூறக் காண்கிறோம்.

இந்து மதத்தில் மனிதனை மனிதன் பிரித்துக் காட்டிக் கீழ்மேல் உயர்வு தாழ்வு நிலையை உண்டாக்கி வேறு மதத்திலிருந்து வருபவரை இந்து மதத்தில் சேர்க்க மறுப்பதையும் இந்து மதத்திலிருப்பவரை வேறு மதத்திற்குப் போகும்படி செய்து மக்கள் தொகையில் இந்துக்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது எனச் சுட்டிக் காட்டுகிறார்.

அடுத்து இந்துமதக் கோட்பாட்டைப் பற்றி விமரிசனம் செய்கின்ற அம்மா கொள்கைக்கும் நடத்தைக்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்து மதம், அன்பு மதம், சமத்துவ மதம், சமரச சன்மார்க்க மதம் என்று கூறிவிட்டுச் செய்கையில் சமரசமில்லை, சன்மார்க்கமில்லை, அன்பு இல்லை இரக்கமில்லை என்பதைக் கடிந்துரைக்கிறார்.

அடுத்து ஆன்மா, கடவுள், தோற்றம் ஆகியவற்றைக் குறித்துப் பேசுவதற்கும் வாழ்க்கையில் அவை ஒன்றுக்கொன்று சிறிதும் தொடர்பில்லாமல் மனித சமுதாயத்திற்குக் கொடுமைகள் பலவற்றை இழைத்துக்கொண்டு வருகிறது என்று காட்டுகிறார்.

பிற சமயத்தவர்கள் மேல் உலகைப் பற்றிக் கவலைப்படாமல் இவ்வுலக நன்மையைக் கருதுவதையும் சுட்டிக்காட்டி, இந்துக்கள் என்பவர்கள் இவ்வுலக வாழ்க்கைக்குப் பயனளிக்கவில்லை என்று கூறுகிறார்.

பிற சமயத்தில் அறிவை வளர்க்கப் பள்ளிக்கூடம் கட்டுகையில், இந்துக்கள் கோயில் கட்டிப் பார்ப்பனர்களையும் தாசிகளையும் வைத்துத் திருவிழாக்கள் கொண்டாடுகின்றனர். படிப்பைப் பற்றிக் கவலையே இல்லாமல் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்.

தந்தை பெரியார் பெண்ணுரிமை, பெண் உயர்வு பாராட்டியவர். தந்தை பெரியாரின் வழியில் அன்னையார் பெண்டிர் உயர்வு போற்று வரிகளை இக்கட்டுரையில் எடுத்துரைக்கக் காண்கிறோம்.

> இந்துமதக்காரர்கள் படிப்புக் கொடுக்காமல் போவ தோடல்லாமல் ஏறக்குறைய 100க்கு 50 பெண்களுக்குப் 'பிசாசு' பிடிக்கச் செய்து பேயோட்டுகிறார்கள்.

எனக் கிண்டலாகக் கூறக் காண்கிறோம்.

மதச் சடங்குகள், பூசைகள், ஆராதனை, பல தெய்வ வழிபாடுகள் முதலியன குறித்த அம்மாவின் பார்வையும், பல்வேறு சாத்திரங்கள், சூத்திரங்கள் இருப்பதையும், இறுதியில் பணிவாகத் தாம் சொல்லவேண்டிய கருத்து விளக்கங்களையெல்லாம் எடுத்துக் கூறி விளக்கிய பின்,

> எனவே பிற சமயத்திற்கும் நம் (இந்து) சமயத்திற்குமுள்ள பலனையும், எனக்குத் தோன்றிய வகையில் ஒருவாறு எடுத்துச்சொன்னேன். இனி உங்களுக்குப் பட்டபடி முடிவு செய்து நடந்துகொள்ளுங்கள்

என்று எழுதுகையில் பெரியாரின் பாணி அம்மாவிடம் எதிரொலிக்க காண்கிறோம்.

4. தேவர்களின் காமவிகாரம் (மணி திரட்டியது)

> நமது இந்திய நாட்டின் ஜனத்தொகை 38 கோடியென்று கணக்கிடப்பட்டிருக்கிறது? ஆனால், இந்து சமயத் தேவர்களின் ஜனத்தொகை 33 கோடி என்று புராணங் களும் இதிகாசங்களும் சொல்லுகின்றன. இந்த 33 கோடி தேவர்களின் வரலாறுகளைப் புராண இதிகாசங்கள் எழுதவில்லை. ஆனால்தேவர்கள் எனப்படுவோரின் முக்கியமான ஒரு சிலரைப் பற்றி மாத்திரம் புராணங் களிலும், இதிகாசங்களிலும் விளக்கமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இவர்களின் யோக்கியதையைப் பற்றி ஆராய்வதற்காகவே இக்கட்டுரை எழுதப்படுகிறது.
>
> முதலில் சூரியன் என்னும் தேவனைப் பற்றி ஆராய்வோம். இந்தச் சூரியன் அந்தகனஞ்ஷணிம்சன் என்பவனுடைய மகளைப் புணர்ந்த சரித்திரம் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவளுடைய பெயர் ஆனந்தை என்பது. சூரியன் இவள் மீது காமவிகாரங் கொண்டு புணர்ந்தான் என்றால் சூரியனுடைய யோக்கியதை எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள்!
>
> இரண்டாவதாகச் சந்திரன் என்னும் தேவனுடைய யோக்கியதையைப் பார்த்தால் அவன் தன் குருவாகிய பிரகஸ்பதி அல்லது வியாழன் என்பவருடைய மனைவி தாரை என்பவளைப் புணர்ந்து புதன் என்னும் ஒரு பிள்ளையைப் பெறும்படிச் செய்துவிட்டான். இக்கதையைத்

'தாராதசாங்கம்' என்னும் நாடகத்தில் நடத்திக் காட்டப் படுவதால் இங்கு விபரமாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சந்திரனால் கற்பழிக்கப்பட்ட தாரகையின் கணவனும், இனித் தேவர்களுக்கெல்லாம் குரு என்னும் பெரிய உத்தியோகம் படைத்தவனுமாகிய வியாழன் அல்லது பிரகஸ்பதி என்பவனுடைய யோக்கியதையைப் பார்ப்போம்.

இந்தத் தேவகுருவுக்கு உசத்தியர் என்னும் தமையன் ஒருவன் உண்டு. அவருடைய மனைவி மமதை என்பவள். இந்த மமதை என்பவள் கர்ப்பமுற்றிருந்த சமயத்தில் ஒரு நாள் பிரகஸ்பதி அவளைப் பார்த்து விட்டார். உடனே அவருக்குக் காமவிகாரம் உண்டாகி விட்டது. அவர் தம் தமையன் மனைவியாயிற்றே என்றும் பாராமல், கருப்பமாயிருக்கிறாளே என்றும் கவனியாமல் மிருகங்கள் கூடச் செய்யாத மிலேச்சத்தனமாக மமதை அருகில் சென்று தனது காமவிகாரத்தைத் தெரிவித்துத் தன்னைக் கூடும்படிகேட்டுக் கொண்டார்.

அதைக் கேட்ட மமதை எனக்குப் பிள்ளை யில்லாவிட்டால் உன்னைக் கூடிப் பிள்ளை பெற்றுக் கொள்ள சாத்திரம் சம்மதிக்கிறது. ஆனால் உன் அண்ணனைக்கூடி எனக்கு இப்போது கர்ப்பம் உண்டாகி யிருக்கிறது. ஆகையால், நான் உன் கருத்துக்கு இணங்க மாட்டேன் என்று பதில் சொன்னாளாம்! ஆனால் காம விகாரம் கொண்ட தேவகுருவா இவளைச் சும்மாவிடுவார்? அவர்உடனே அவள்மேல் விழுந்து கலவந்தப் புணர்ச்சி செய்தாராம்! அந்தோ கொடுமை! கொடுமை! தேவர்களின் குருவே இப்படிச் செய்தால் இவருடைய சிஷ்ய தேவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்?

இனி, அக்கினி பகவான் என்ற தேவனுடைய யோக்கியதையைக் கவனிப்போம். அக்கினி ஒரு நாள் யமலோகத்துக்குப் போனானாம். அங்கே யமனுடைய மனைவி சாமளை என்பவள், வீட்டில் தனிமையாய் இருந்தாளாம். அவளைக் கண்ட அக்கினித் தேவன் காமவிகாரங் கொண்டு அவள் அருகில் சென்று தனது காம விகாரத்தை அவளுக்குத் தெரிவித்துத் தன்னைச் சேரும்படி வேண்டினானாம்.

சாமாளை, அக்கினியைப் பார்த்து யமன் உன்னுடைய சிநேகிதன் அல்லவா? உன் சிநேகிதன் மனைவியாகிய என்னை நீ கற்பழிக்க விரும்பலாமா? என்று கேட்டாளாம். அக்கினிக்குக் காமப்பித்து தலைக்கேறிவிட்டதால், அதெல்லாம் எனக்குத் தெரியாது

என் விருப்பத்தை நிறைவேற்றி என்னைக் காப்பாற்ற வேண்டும் எனச் சொல்லி அவள் கால்களில் விழுந்து கெஞ்சினானாம்! உடனே அவள் அவன் விருப்பத்திற்குச் சம்மதிக்க இருவரும் கூடி சுசித்தார்களாம்!

இந்தச் சமயத்தில் யமன் வீட்டிற்கு வரவும் சாமளை பயந்து அக்கினியை விழுங்கி வயிற்றுள் வைத்துக்கொண்டாளாம். இன்னும் இக்கதை நீளமாகப் போகிறது. முக்கியமான பாகத்தைச் சொல்லிவிட்டோ மாகையால் இதனோடு நிறுத்திக் கொள்வோம்.

இனி, அக்கினிதேவனால் கற்பழிக்கப்பட்ட சாமளையினுடைய கணவன் யமன் என்னும் தேவனுடைய யோக்கியதையை ஆராய்வோம்.

இந்த நமன் என்னும் யமன் டிண்டியை என்பவருடைய மனைவி சரண்ய என்பவளைக் கண்டு மோகித்துக் காமவிகாரங்கொண்டு அவளைச் சேர்ந்து கற்பழித்துவிட்ட செய்தி புராணங்களில் சொல்லப் பட்டிருக்கிறது.

இன்னும் தேவர்களுக்கெல்லாம் அரசனாகிய இந்திரன் யோக்கியதை எல்லோருக்கும் தெரிந்ததே. அவன் கௌதமர் என்பவருடைய மனைவி அகலிகை என்பவளை வஞ்சகமாகப் புணர்ந்து கற்பழித்துவிட்டான்.

இம்மட்டோ! தேவர்களுக்கும் அப்பாற்பட்ட பிரம்மா தன் மகள் பத்மை என்பவள் மீது காமவிகாரம் கொண்டு அவளைப் புணர்ந்ததாகவும், பிரம்மாவின் தந்தையான விஷ்ணு கலந்தரன் என்னும் அசுரனுடைய மனைவிமேல் காமவிகாரங் கொண்டு அவளை வஞ்சகமாகக் கூடி இன்புற்றதாகவும், சிவன் தாருவன ரிஷி பத்தினிகளைக் கற்பழிக்கும் பொருட்டு நிர்வாணக் கோலத்தோடு ரிஷி பத்தினிகளிடம் சென்ற கதையும், புராணங்களிலும் இதிகாசங்களிலும் மிக விரிவாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால் தேவர்கள் எனச் சொல்லப்படு வோரின் யோக்கியதை, தமையன் மனைவியைப் பலாத்காரமாய்ப் புணர்வதும், குரு பத்தினிக்குப் புத்திர தானம் செய்வதும், சிநேகிதன் மனைவியை வஞ்சகமாகப் புணர்வதும், பிறர் மனைவியை இச்சித்துப் புணர்வதும் தான் என்று புராணங்களிலிருந்தும் இதிகாசங்களி லிருந்தும் தெளிவாகப் புரிகிறது.

வாசகர்களே! இவ்வளவு யோக்கியதையுடைய தேவர்கள் இந்து சமயத்தில் இருக்கும்போது இந்து

சமயம் எவ்விதமாக மதிக்கப்படும் என்பதை யோசித்துப் பாருங்கள். காமவிகாரங்கொண்டு திரியும் இத்தேவர்கள் சரித்திரங்களடங்கிய புராணங்களையும், இதிகாசங் களையும் படிப்பதனாலும் கேட்பதனாலும் கடுகளவாவது ஆத்திக புத்தி உண்டாகுமா? கடவுள் பக்தி ஏற்படுமா? மோட்சம் கிடைக்குமா? அல்லது சன்மார்க்க பத்தியாவது உண்டாகுமா?

இந்த ஆபாசம் நிறைந்த சாமிகளின் கதைகளைப் படித்தால் அறிவு விளக்கமுறுமா? தேசத்திற்கு நல்ல பெயர்தான் கிடைக்குமா? யோசித்துப் பாருங்கள். மிஸ் மேயோ போன்ற மேனாட்டுப் பெண்கள் இந்தியாவைப் பற்றியும், இந்து சமயத்தைப் பற்றியும் இழிவாக எழுதினார்கள் என்று முதலைக் கண்ணீர் விடும் சிகாமணிகள் இக்கதைகளையும் மோட்ச சம்பந்தமான தென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்களா?

இவ்வித ஆபாசக் கதைகள் நிறைந்த புராணங் களைக் காப்பாற்ற ஆத்திகச் சங்கங்களும், வைதீகக் கூட்டங்களும் இருக்க வேண்டுமா? இந்துக்களே, உலகத்தாரே இக்கதைகளையும் புராணங்களையும் தேவர்களையும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

இன்னும் இக்கதைகளை மேன்மேலும் ஆராய்ந்தால் தேவர்கள் என்று சொல்லப்படுவதே கட்டுக் கதைகள் என்று நன்கு விளங்கும். எப்படி என்றால், பல நூற்றாண்டு களுக்கு முன்னே இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்திருந்தார்கள் என்னும் உண்மையைச் சரித்திரக்காரர்களே எழுதி யிருக்கிறார்கள்.

அக்காலத்தில் அறிவு வளர்ச்சியுறாத அவர்கள் கிரகங்களையும், பஞ்சபூதங்களையும் தெய்வங்களென்றும், தேவர்களென்றும் முட்டாள்தனமாக நம்பி அவைகளை வணங்கி வந்தனர்.

உதாரணமாக சூரியன் ஒரு தேவன், சந்திரன் ஒரு தேவன், வியாழன் ஒரு தேவன் என்று இவ்வாறு சூரியன், சந்திரன், வியாழன் முதலியவைகளைத் தேவர் களாகவும், இடி மின்னல்களை உண்டாக்குகிற ஒரு தேவன் இருக்கிறான் என்றும், அவனுக்கு இந்திரன் என்று பெயர் என்றும் வானத்தில் காணப்படும் சூரிய சந்திர கிரகங்களையும், நட்சத்திரங்களையும் தேவர்களென்றும் நம்பி அவர்களுக்குப் பெண்டாட்டி பிள்ளைகளைக் கற்பித்துவிட்டதோடு அக்காலத்தில் ஆரியர்களுக்குள்

இருந்த அயலான் மனைவியைப் புணர்வது முதலிய காம விகாரங்களையும் இந்தக் கிரகங்களுக்குக் கற்பித்துக் கதை எழுதி வைத்துவிட்டார்கள்.

அவ்விதமே அக்கினி, வருணன், வாயு முதலிய பஞ்சபூதங்களையும் தேவர்கள் என்றும் சொல்லி அவர்களுக்கும் மனைவி மக்கள் காம விகாரங்களைக் கற்பித்து எழுதிவிட்டார்கள்.

வாசகர்களே! இவ்வாறு பஞ்சபூதங்களையும் கிரகங்களையும் அறியாமையினால் தேவர்கள் என்று எத்தனையோ காலத்துக்கு முன் ஒரு பைத்தியக்காரன் எழுதி வைத்து விடுவானானால் அந்தப் புளுகுகளை யெல்லாம் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நம்பிக் கொண்டு இவ்வாபாசக் கட்டுக்கதைகளைப் படித்துக் கொண்டிருந்தால் அவனைப் போலச் சர்வமுட்டாள் எவனாவது இருப்பானா என்று கேட்கிறோம்.

இவ்விதக் காமவிகாரமுள்ள கட்டுக்கதைகளைப் படிப்பதைக் காட்டிலும் அராபிக்கதை, விக்கிரமாதித்தன் கதை, பஞ்சதந்திரக்கதை, தெனாலிராமன் கதைகளைப் படிப்போமேயானால் சற்று அறிவு வளரும்.

ஆனால் நமது நாட்டில் குருட்டு நம்பிக்கை வேரூன்றியிருப்பதால் இந்த ஆபாசம் நிறைந்த புராணக் கதைகளைத் தெய்வீகச் சம்பந்தமானதென்றும், மோட்சத்துக்கும் ஆத்மார்த்தத்திற்கும் கடவுளுக்கும், மதத்திற்கும் சம்பந்தமுடையவைகளென்றும் ஜனங்கள் நினைத்துக் கொண்டிருப்பது மூடத்தனமல்லவா? இவ்வித ஆபாசக் கதைகள் வேறு எந்தச் சமயத்திலாவது இருக்கிறதா? என்று சற்று எண்ணிப்பாருங்கள்.

தேவர்களின் காமவிகாரம் (மணி திரட்டியது) என்ற இந்தக் கட்டுரையை அம்மா அந்நாளில் எழுதினார் என்றால் அதற்குத் துணிவு அதிகம் வேண்டும்.

தேவர்கள் எனக் கூறப்படும் புராணக் காலத் தெய்வங்களின் வாழ்க்கை ஊழல்களை அம்மா புட்டுவைத்த அளவிற்கு எந்தப் பெண்மணியும், ஏன் எந்த ஆடவரும்கூடப் புட்டு வைத்திருப்பார்களா என்பது உண்மையில் அய்யத்திற்குரியது.

சூரியனில் தன் விமரிசனத்தைத் தொடங்குகிறார். ஆனால் அம்மா எடுத்துக் கொண்ட பொருள் 'காமவிகாரம்' என்பது. எனவே ஒவ்வொரு கடவுளர்களின் காமவிகாரங்களையும் எடுத்துரைக்கிறார்.

சூரியன், சந்திரன், பிரகஸ்பதி, அக்கினி, யமன் என்று வரிசையாகப் புராணங்களில் கூறப்பட்ட காமவிகாரக் கதையைப் பிறழ்ச்சி இல்லாமல் மாற்றமில்லாமல் அம்மா கொடுத்திருப்பதைப் படித்துப் பார்த்துத்தான் சுவைக்க இயலும்.

5. தாழ்த்தப்பட்டோர் முன்னேற வழி - பெரியார் பேசினது (மணி தொகுத்தது)

சுமார் 15 வருடங்களுக்கு முன் சென்னை இராயபுரத்தில் கண்ணப்பர் வாசகசாலையைத் திறந்து வைக்கையில் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இன்று நாட்டில் கிளப்பப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைக்குப் பொருத்தமானதாக இருப்பதால் அதன் சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

ஆதிதிராவிட மக்களாகிய நீங்களும் மனிதர் களேயாயினும் சமூகவாழ்க்கையில் மிருகங்களைவிடக் கேவலமாகத் தான் நடத்தப்படுகின்றீர்கள் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

உங்களுக்குள் சிலர் ராவ்பகதூர்களாகவும், ராவ்சாகிப்களாகவும், மோட்டார் வாகனங்களிலும், கோச்சுகளிலும் செல்லத்தக்க பணக்காரர்களாகவும் இருக்கலாம்.

மற்றும் உங்களுள் ஞானமுள்ள அறிவாளி களும் படிப்பாளிகளுமிருக்கலாம்.

எவ்வாறிருந்தாலும் அத்தகையவர்களையும் பிறந்த ஜாதியையொட்டித் தாழ்மையாகத்தான் கருதப் பட்டுத்தான் வருகின்றதென்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

அதற்கு ஒரே ஒரு காரணந்தான் சொல்ல வேண்டும். அது ஜாதி வித்தியாசக் கொடுமையே யாகும்.

ஆதிதிராவிடர்கள் என்றால் கோயிலருகிலும் வரக் கூடாதென்றார்கள். இப்பொழுது ஒரு சில இடங்களில் தாழ்த்தப்பட்டோர் கோயிலுக்குள் அனுமதிக்கப்படு கின்றார்கள் என்றால், அது அரசாங்கத்தாரின் சட்ட பலத்தைக் கொண்டு. ஆனால், பொதுவாகத் தாழ்த்தப் பட்டோர் அனுமதிக்கப்படுகிறார்களா? என்பதையும் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அதை ஆதரிக்கிறார்களா? என்பதையும் இதுசமயம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆம்! ஆதி திராவிடர்களும் இந்துக்கள் தாமென ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும் அவர்களை இழிவுப்படுத்திக் கொடுமை செய்வதில் ஒரு சிறிதும் பின்வாங்குவதில்லை.

பிறவியில் மிருகமாய்ப் பிறந்தும் ஜாதியில் நாய் என்றழைக்கப்படுவதுமான, மலம் உண்ணும் கேவலமான ஜந்துவையும் தாராளமாக விட்டுவிடும்போது, ஆறறிவுள்ள மனிதராகப் பிறந்து இந்துவென்று சொல்லிக்கொள்ளும் ஆதிதிராவிடர் எனப்படும் ஒரு முனிசாமியை அவர் பிறப்பின் காரணமாக ரஸ்தாவிலும்விட மறுக்கப்படுவது என்ன கொடுமை?

இக்கொடுமையைத் தடுத்துக் கேட்டால் அவர்கள் இந்துக்களாய்ப் பிறந்துவிட்டார்கள், அவர்களைக் குறித்து மனுதர்ம சாஸ்திரம் இப்படிச் சொல்கிறது. வேதத்தில் கர்மகாண்டங்கள் அப்படிச் சொல்லுகின்றன என்று சாஸ்திரக் குப்பைகளின் மீது பழியைப் போடுவதோடு மதத்தையும் தங்கள் கொடுமைகளுக்கு ஆதரவாக்கிக் கொள்ளுகின்றார்கள்.

இவ்வாறு மதத்தின் பேராலும், சமய நூல்கள், சாஸ்திரங்கள் புராணங்களின் பேராலும் செய்யப்படும் கொடுமைகளுக்கு அளவில்லை.

ஆயிரக்கணக்கான வருடங்களாய் மதத்தின் பெயராலும், சாஸ்திர புராணங்களின் பெயராலும், ஒரு பெரிய சமூகம் கொடுமைக்குட்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர்களாகிய உங்களைவிடச் சற்று உயர்ந்த ஜாதியார் எனப்படும் எங்களையும் கேவலப் படுத்தாமல் விட்டார்களா? அதுவுமில்லை.

உங்களைத் தொட்டால் தீட்டுப்பட்டுவிடும். குளிக்கவேண்டுமென்பது போலத் தான் எங்களைத் தொட்டாலும் குளிக்க வேண்டுமென்கிறார்கள். அதோடு எங்களைச் சூத்திரர்கள்,வேசியர்கள், பார்ப்பனனுக்கு அடிமை செய்யப் பிறந்தவர்களென்ற இழிபெயர் களுமிட்டழைக்கிறார்கள்.

இக்கேவலச் செயல்களுக்குக் கடவுளால் எழுதிவைக்கப்பட்ட சாஸ்திரம் ஆதாரமென்கிறார்கள்.

நம் மக்களுக்குள் அநேகர் எவர் எப்படிச் செய்தாலென்ன? நம் ஜீவனத்துக்கு வழியைத் தேடுவோமென்று இழிவையும் சகித்துக்கொண்டு உணர்ச்சியில்லா வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதனால்தான் ஆயிரக்கணக்கான வருடங்களாய் இக்கொடுமைகள் ஒழிய வழியில்லாதிருந்து வந்திருக்கின்றது.

நம் ஜீவனத்துக்கு வழியைப் பார்ப்போம் என்று இழிவுக்கிடங்கொடுத்துக் கொண்டு போகும்வரை சமூகம் ஒரு காலத்திலும் முன்னேறாது. ஜாதிக் கொடுமைகள் ஒருபோதும் ஒழிய மார்க்க மேற்படாது என்பது திண்ணம். கேளுங்கள்.

ஜாதிக் கொடுமைகளை ஒழித்துச் சமகாலத்தை நிலைநாட்டும் பொருட்டுத்தான் நம் நாட்டின் சுயமரியாதை இயக்கம் தோன்றியது.

உலகத்தில் அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று பந்தயம் போட்டுக்கொண்டு ஜாதி வித்தியாசம் கொடுமைகளை நிலைநாட்டி, சமூக முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் தடையாயிருக்கும் எந்தச் சாத்திர, புராணங்களையும் சுட்டெரிக்கச் சுயமரியாதைக்காரர்கள் தயாராயிருக்கிறோம்.

கொடுமை செய்யும் மதத்தையும் சாஸ்திரத் தையும் கடவுளையும் ஒழிப்பதற்குப் பயந்தோமே யானால் நாம் நிரந்தரமாய்ச் சூத்திரனாயும், தாழ்ந்தவ னாயும் பல கொடுமைகளுக்குட்பட்டுக் கொண்டு தானிருந்தாக வேண்டும்.

சம உரிமையில்லாதிருப்பதைவிட சாவதே மேலென்று நினைப்பவர்களின் சுதந்திரத்திற்கு ஒன்றும் தடையாயிருக்க முடியாது. அதற்குத் தடையாயிருக்கும் கடவுளும், மதமும், மோட்சமும், நரகமும் அவர்களுக்கு அக்கறையில்லை.

ஜாதிக் கொடுமைகளை ஒழிக்க நமது பெரியோர்கள் எவ்வளவோ பாடுபட்டு வந்தார்கள். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த கபிலர் காலத்திலும், திருவள்ளுவர் காலத்திலும், அதற்குப் பின்னரும் ஜாதியில்லை.

நமது பெரியார்கள் சொல்லியவை ஆயிரக் கணக்கான பிறரால் வாயளவில் பாராயணம் செய்யப்படு கின்றனவேயன்றிச் செய்கையில் அதனால் ஒரு பலனும் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை.

இன்றைக்கும் ஜாதிக்கொடுமையினால் இவன் இந்தத் தெருவில் வந்தால் தீட்டுப்பட்டுவிடும். அவன் அந்தத் தெருவில் போனால் சாமி செத்துவிடும் என்ற அநியாயங்கள்தான் தலைவிரித்தாடுகின்றன.

இவ்வுலகில் பல மதக்கொடுமைகளுக்கும் ஜாதி வித்தியாச இழிவுக்குமுட்பட்டுக் கேவலமான மிருகத்திலும் இழிவாகக் கருதப்பட்டுப் பின்னால் மோட்சமடைவதை விடச் சமத்துவம் பெறுவது தான் பிரதானமென்று சொல்லுவேன்.

ஜாதிக் கொடுமையை ஒழித்து இங்குச் சமத் துவத்தைக் கொடுக்காத சாமி அங்கு மோட்சத்தையும், ரம்பை, ஊர்வசி நடனத்தையும், தங்க மெத்தையும்,

சுகபோகத்தையும் கொடுக்கிறதென்றால் அதை நம்புகிறவன் மடையனா வென்று கேட்கிறேன்.

தீண்டப்படாதார் தாழ்ந்தவர்கள் என்று கொடுமையாக ஒதுக்கி ஒடுக்கப்பட்டுத் துன்புறும் மக்களுக்கும் உயர்ந்த ஜாதியார் கடவுள் முகத்தில் பிறந்தவர் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கும், குணத்தினாலும், உருவத்தினாலும், அறிவினாலும் ஏதாவது வித்தியாசமிருக்கின்றவாவென்று கேட்கிறேன்.

இவ்வாறிருக்க மக்களில் பெரும்பான்மை யோரை ஜாதிக்கொடுமைகளுக்கும் இழிவுக்கும் உட்படுத்திவைக்க மதப் புரட்டுகளும், புராணப் புரட்டுகளும் தான் ஆதாரமாக இருக்கின்றன.

மக்கள் சுகாதாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாயிருக்கும் இவ்விந்துமதத்தையும் புராணங்களையும் ஒழிக்காமல் பின் என்ன செய்வது என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள்.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற வழி - பெரியார் பேசினது என்ற இந்தக் கட்டுரை

பெரியாரின் பேச்சுக்களை மணியம்மையார் தொகுத்து வெளியிடும் ஆற்றல் கொண்டு விளங்கியதற்கான சான்றுக் கட்டுரை.

சென்னையில் முப்பதுகளில் பெரியார் இராயபுரத்தில் கண்ணப்பர் வாசக சாலையைத் திறந்து வைத்துப் பேசிய பெரியார் பேச்சாகும்.

இந்தக் கட்டுரையைத் தொகுக்கையில்

இன்று நாட்டில் கிளப்பப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைக்குப் பொருத்தமாக இருப்பதால் அதன் சில பகுதிகளைக் கீழே தருகிறார்

என்று குறிப்பிட்டுக் கட்டுரையைத் தொடங்கியிருக்கிறார்.

சாதிக் கொடுமை, தாழ்த்தப்பட்டவர், ராவ்பகதூர், ராவ் சாகிப் பட்டம் பெற்றாலும் சாதி இழிவு போகவில்லை. கோவிலுக்குள் நுழைய விடவில்லை. 'ஆயிரக்கணக்கான வருடங்களாய் மதத்தின் பெயராலும், சாஸ்திர புராணங்களின் பெயராலும் ஒரு பெரிய சமூகம் கொடுமைக்குட்படுத்தப்பட்டு வருகிறது' என்று அன்று முதல் இன்று வரை தாழ்த்தப்பட்டவர்கள் நலனில் அக்கறை கொண்ட இயக்கம் திராவிடர் இயக்கம் என்பதைச் சுட்டிக்காட்டக் காண்கிறோம்.

8-7-1944இல் குடியரசில் "இரண்டும் ஒன்றே - கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே" என்னும் தலைப்பில் அன்னையாரின் முதல் கட்டுரை வெளிவந்தது. இக்கட்டுரையின் அடுத்த பகுதி 1946இல் மீண்டும் தொடர்ந்தது. இக்கட்டுரையில் 1, 2, 3 என்று கந்தபுராணத்திற்கும், இராமாயணத்திற்கும் இடையே 64 ஒற்றுமைகளைக் காட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதையே பெரியாரும் பின்னாளில் தமது சொற்பொழிவுகளில் பயன்படுத்திக் கொண்டார்.

அன்னையார் பொதுவாகத் தன்னை முன் நிறுத்துவதோ, மேடையில் முழக்கமிடுவதோ கிடையாது. இருப்பினும் ஏரலில் 1946இல் கருஞ்சட்டைப் படை மாநாடு நடைபெற்றபோது கழகக் கொடி பற்றிப் பேசிய பேச்சு கிடைத்துள்ளது. 1953இல் கள்ளக்குறிச்சியில் அந்த வட்டத் திராவிட விவசாயத் தொழிலாளர் மாநாட்டுக்குத் தலைமை வகித்துத் தாம் விவசாயி இல்லை யென்றாலும் ஒரு சில பேசுகிறேன் என்று கூறிப் பேசினார்.

## பெரியாரின் உடல்நிலை பாதிப்பு

பெரியாருக்கு 1945இல் 68 வயது ஆகியது. அப்போது இருந்து அவருடைய உடல் நிலையில் பாதிப்பு ஏற்படுவதும், மருத்துவமனை செல்வதும், நோய் குணமானதும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதும், மீண்டும் உடல் பாதிப்பு, மருத்துவமனை, ஓய்வு, சுற்றுப்பயணம் என்றே வாழ்க்கை அமைந்தது. பெரியாரை உணவு விசயத்தில் கட்டுப்படுத்தி, அவருக்கு ஒத்துக் கொள்ளாத உணவை அவர் சாப்பிடவிடாமல் தடுத்து அவரைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு அன்னையைச் சார்ந்தது.

## நிருவாகக் குழுவில் அன்னையார்

1946க்குப்பின் இரண்டு புதிய பொறுப்புகளைப் பெரியார் மணியம்மையாருக்கு வழங்கினார். முதலாவது பொறுப்பு திராவிடர் கழகத்தின் மாநில நிருவாகக்குழு உறுப்பினர் பொறுப்பு ஆகும். மணியம்மையார் வட ஆர்க்காடு மாவட்ட நிருவாகக் குழுவின் இரண்டு உறுப்பினர்களில் ஒருவர்.

அடுத்து விடுதலை ஏட்டில் வெளியிடுவோர், ஆசிரியர், அச்சிடுவோர் எனும் பொறுப்பை ஏற்றார். 14.3.48, திராவிடநாட்டில், 7.3.48இல் சென்னையில் கூடிய நிருவாகக்குழுக் கூட்டம், அதில் பங்கேற்றவர்களின் பெயரில் கே.ஏ. மணி என்று அன்னையாரின் பெயர் இடம் பெற்றுள்ளது.

## விடுதலைக்கு ஜாமீன்

திராவிட இயக்க வரலாற்றில் பத்திரிகையில் பொறுப்பு ஆசிரியர் எனும் அடிப்படையில் அரசின் அடக்குமுறைச் சட்டத்திற்கு அம்மா ஆளானது குறிப்பிடத்தக்கது.

'விடுதலை' அப்போது பாலகிருஷ்ணப்பிள்ளை தெரு, சிந்தாதிரிப்பேட்டை என்னும் முகவரியிலிருந்து மணியம்மையாரை வெளியிடுபவராகவும், பொறுப்பு ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்தது.

1947இல் இந்தியா விடுதலை பெற்று ஆங்கிலேயரின் ஆட்சி அகன்ற பின்னரும் பத்திரிகைகளின் மீது குறிப்பாகத் திராவிட இயக்க ஏடுகளின் மீது அரசின் அடக்குமுறை ஆயுதம் ஏவப்பட்டது.

தமிழகப் பகுதி அடங்கிய சென்னை மாநிலத்தை அப்போது காங்கிரசுக் கட்சி அரசு ஆட்சி செலுத்தியது. அந்த அரசு 1931ஆம் ஆண்டில் இந்தியப் பத்திரிக்கை (நெருக்கடி அதிகாரம்) சட்டம் 7(3) பிரிவின் கீழ் விடுதலை மீது நடவடிக்கை எடுத்தது.

அரசு ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம்) ஜாமீன் தொகையினை 15-6-1948க்குள் சென்னை மாநில முதன்மை நீதிமன்ற நீதிபதியிடம் செலுத்த வேண்டும் என மணியம்மையார் வெளியிடுபவராதலால் அவர் பெயருக்கு ஓலை அனுப்பியது.

எதற்காக இந்த ஜாமீன்?

அரசுக்கு எதிராக எழுதிவிட்டதற்காகவா? அல்லது சமூக நல்லுறவைக் கெடுக்கும் வகையில் எழுதிவிட்டது என்று ஏதாவது போலிக் குற்றச்சாட்டின் பேரிலா?

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 2, 4, 9, 17, 18, 19, 20, 23, 25 ஆகிய நாட்களிலும், பிப்ரவரி 12, 14, 16, 20, 21 ஆகிய நாட்களிலும், மார்ச் 6, 7, 8, 9, 11, 12, 13, 16 ஆகிய நாட்களிலும் விடுதலையில் எழுதப் பெற்ற தலையங்கங்கள், செய்திகள் ஆகியவற்றின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையிலே இந்த ஜாமீன் கட்ட வேண்டும் என்று ஆணை அனுப்பினர்.

கோவை மாவட்ட நீதிபதியான மாரீஸ் என்பவர் மணியம்மையார் பிணையத் தொகையைச் செலுத்திவிட்டதாகத் தலைமைச் செயலருக்கு 5-7-1948இல் எழுதிய கடிதத்தில் அறிவித்தார்.

*ஆதாரம்: அரசாணை எண் 1735 பொது (பிற நாள் 16-07-1948)*
*(G.O. No. 1735, Public (General) Dt. 16-07-1948)*

ஏற்கெனவே செலுத்தியிருந்த ரூபாய் இரண்டாயிரத்தைப் பறிமுதல் செய்ததுடன் நில்லாமல் மேலும் ரூபாய் பத்தாயிரம் செலுத்த வேண்டும் என்று ஆணையிட்டது.

அந்நாளில் 10,000 ரூபாய் என்பது மிகப் பெரிய தொகை.

அரசு 10,000 ரூபாய் பிணையத் தொகை செலுத்த ஆணையிட்ட போது இச்செய்தி மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்டது. மக்கள் பத்தாயிரத்துக்கும் மேலேயே ரூ. 15,200 ஆக வழங்கினர்.

இதனை எதிர்த்து 25-07-1949இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்து மனுவினை அளித்தார்.

**மணியம்மையார் கைது**

22.8.48இல் சென்னையில் பெரியார் இல்லத்தில் திராவிடர் கழக நிருவாகக்குழுக் கூட்டம் நடைபெற்ற போது காவல்துறை உதவி ஆணையாளர் அங்குக் கூடியிருந்த அனைவரையும் சட்ட விரோதமாகக் கூடியிருப்பதாகக் கூறிக் கைது செய்து காவல் துறை ஆணையாளர் அலுவலகச் சிறையில் வைத்தார். பெரியார், அண்ணா, மணியம்மையார், வேதாச்சலம் முதலானவர்கள் சிறை வைக்கப்பட்டு ஆறுநாள்களுக்குப்பின் விடுதலை ஆயினர்.

**இந்தி எதிர்ப்புப் போரில் மணியம்மையாரின் பங்கு**

திராவிட இயக்க வரலாற்றில் இந்தி எதிர்ப்பு அறப்போர் என்பது தொடர்ந்து நடைபெற்றுவருவது. இந்தித் திணிப்பின் விளைவால் தமிழ்மொழியின் வளமும், நலனும், தமிழர்கள் நலனும் பாதிப்பிற்குள்ளாகும் என்பது நம்பிக்கை.

மேலும் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தி ஆதிக்கத்தை, இந்தித் திணிப்பையே எதிர்த்து வந்தனர்.

**எப்பக்கம் வரும் இந்தி**
**எத்தனை பட்டாளம் கொண்டு வரும் இந்தி**
**வாருங்கள் தோழர்களே**
**இந்திக்கு ஆதிக்கமாம்**
**எதிர்த்து நிற்போம்**

என்றே முழங்கி வந்தனர்.

இந்த இந்தி எதிர்ப்பு பெரியார் காங்கிரசில் இருந்த காலத்திலேயே 1925க்கு முன்னரே நீதிக்கட்சியினரால்மேற்கொள்ளப் பெற்றது. 1920-1922இலேயே நீதிக்கட்சி இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துத் திருச்சியில் இராஜாஜி கலந்துகொண்ட கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்தது.*

அதன் பிறகு 1938இல் பெருமளவில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் நடைபெற்றது. தமிழன் தொடுத்த முதல் போர்' என மா. இளஞ்செழியன் என்பவர் இந்த 1938ஆம் ஆண்டு மொழிப்போர் குறித்து எழுதியுள்ளார்.

இதில் ஈழத்துச் சிவானந்தம் அடிகள், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலான பெருமக்கள் பங்கேற்றனர். தந்தை பெரியார் இந்த மொழிப் போரில் பங்கேற்றுப் பெல்லாரி சிறையில் (அப்போது இராஜாஜி தலைமையில் ஆட்சி செலுத்திய) காங்கிரசு அரசினால் அடைக்கப்பட்டார். இப்போரில் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஓர் அணி இந்தியை எதிர்த்து மறியல் செய்தது. பேரறிஞர் அண்ணா தளபதி என அழைக்கப்பட்டார்.

இந்த இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்புப் போர் அப்போது சென்னை மாநிலத்தை ஆட்சி செய்த இராஜாஜியின் அரசு பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது. எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும் இராஜாஜி அரசு அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்தது. பல்லாயிரக்கணக்கானவர் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றனர்.

அந்த நாளில் திருவாரூரில் பள்ளி மாணவராய் இருந்த இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய இந்தி எதிர்ப்புப் பாடலை முழங்கியவாறு திருவாரூர் வீதிகளில் வலம்வந்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சி.

இப்போரில் பங்கேற்றுச் சிறையேகிய தாளமுத்து, நடராசன் எனும் இரு தியாகச் செம்மல்கள் பலியாகித் தங்கள் இன்னுயிரை இழந்தனர்.

1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் தொடங்கிய போது, இராஜாஜி மந்திரிசபை பதவி விலகியது. 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற வேளையில் ஆளுநர் அரசு நடைபெற்றது. அந்த ஆங்கிலேய அரசு கட்டாய இந்தியைத் திரும்பப் பெற்றது.

இந்தி ஆதிக்கம் ஒழிந்தது என்று எல்லோரும் மகிழ்ந்தனர். இந்த இந்தி ஆதிக்கம் ஒழிந்தவேளையில்தான் அன்னை மணியம்மையார் பெரியாரின் 'காரியதரிசி' பொறுப்பும், திராவிடர் கழக நிருவாகக்குழு உறுப்பினர் பதவியும், விடுதலைப் பத்திரிகையின் பதிப்பாசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் பொறுப்பினையும் ஏற்றார்.

* ந.க. மங்களமுருகேசன் எழுதிய 'தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம்.

1947இல் விடுதலை பெற்றதும் த. பிரகாசம் அமைச்சரவை சென்று, ஓமந்தூர் பெரிய வளவு இராமசாமி ரெட்டியார் எனும் ஓ.பி. இராமசாமி ரெட்டியாரின் காங்கிரசு அமைச்சரவை பதவி யேற்றது. 'விவசாய அமைச்சர்', 'விபூதி பூதம் பெரியார்', 'கதர் கட்டும் பெரியார்' என்றெல்லாம் அழைக்கப்பெற்ற ஓமந்தூரார் அரசில் கல்வி அமைச்சராக விளங்கியவர் கோவை அவிநாசிலிங்கம் செட்டியார்.

அவர் மீண்டு ஒழித்த, அல்லது ஒழிக்கப்பெற்ற கட்டாய இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம்செய்தார். எனவே பெரியார் தலைமையிலான திராவிடர் கழகம் இந்தியை எதிர்க்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத் திற்குத் தள்ளப்பட்டது.

14-12-1948ஆம் நாள் திராவிடர் கழக நிருவாகக் குழு தந்தை பெரியார் தலைமையில் கூடி இந்தியை எதிர்த்து மீண்டும் போராட்டம் நடந்துவது என்று முடிவு செய்தது.

இதற்கு முதல் கட்டமாக அரசு விதித்து இருந்த 144 தடை ஆணையை மீற முடிவு செய்தது. கும்பகோணத்தில் தந்தை பெரியார் 144 தடையை மீறிய போது கைது செய்து, உடல் நலமில்லாது இருந்த பெரியாரை ஓர் ஓட்டை உடைசல் காவல்துறை லாரியில் ஏற்றிக் கும்பகோணத்திலிருந்து திருச்சிக்குச் சிறையில் அடைக்கக் கொண்டு சென்றது.

பெரியார் அப்போது வயிற்றுவலி, ஏப்பம், நெஞ்சு எரிச்சல் முதலிய நோய்த் தொல்லைகளால் அவதிப்பட்ட வேளை. கும்பகோணம் - திருச்சி சாலை இன்று போல் அன்றும் மிகமிக மோசமாக இருந்தது. லாரியில் குலுக்கல், மோசமான சாலை எல்லாம் சேர்ந்து 70 வயது கடந்த முதுபெருங் கிழவரான தந்தை பெரியாரை அவதி என்றால் இப்படி அப்படி அல்ல சொல்ல முடியாத அவதிக்குள்ளாக்கியது.

கழகத் தோழர்களுக்கு அய்யாவை எங்குக் கொண்டு செல்கிறார்கள் என்று அறிவிக்கவும் இல்லை. அறிஞர் அண்ணா ஒரு காரில் சுற்றி அலைந்து கடைசியில் திருச்சி அருகில் கண்டறிந்தார். அதன் பின் திருச்சி சிறை அதிகாரி தனக்கு ஆணை வரவில்லை என்று உள்ளே அனுமதிக்க மறுத்துத் தஞ்சாவூர் வந்து, பிறகு மாலை 5 மணியளவில் பெரியாரை விடுவித்த கதை ஒரு நீண்ட தனிக் கதை.

திராவிடர் கழக மைய நிருவாகக் குழுவின் முடிவிற்கேற்ப 1948 டிசம்பர் 20ஆம் நாள் கும்பகோணத்தில் அன்னை

மணியம்மையார் 144 தடையை மீறினார். கைது செய்யப் பெற்றார். இவரைப் பாபநாசம் துணைச் சிறைச் சாலையில் அடைத்துப் பிறகு திருச்சி சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதாகக் கூறி விழுப்புரம் கொண்டு சென்று அங்கிருந்து காட்பாடி செல்லும் இரயிலில் ஏற்றி வேலூர்ச் சிறையில் அடைத்தனர்.

பாபநாசம் சிறையில் அடைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று இரண்டு மாதம் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. இது மணியம்மையாரின் வாழ்க்கையில் ஏற்பட்ட முதல் நீண்ட நாள் சிறைவாசக் காலம். இந்தச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்ற பின்னரே வேலூர்ச் சிறைச்சாலைக்கு அவர் பிறந்த ஊரின் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டார்.

மணியம்மையார் வேலூர்ச் சிறையில் இரண்டு மாதக் காலம் கைதியாக அடைக்கப்பட்டு மொழிப் போர் தியாக முத்திரை பெற்றார்.

## குடந்தையில் விசாரணை

மணியம்மையாரைக் குடந்தைத் தடை மீறலுக்காகக் கைது செய்த துணை ஆட்சியர் அவரை விசாரணை செய்த போது அவருடைய கேள்வியும், அன்னையாரின் பதிலும் அரசியலில் அன்னையார் எவ்வளவு தெளிவுடன் விளங்கினார் என்பதையும், கொள்கையில் அவர் கொண்ட உறுதிப்பாடும் விளங்கும்.

வினா: **கும்பகோணத்தில் 144 தடை உத்தரவு போடப்பட்டு இருப்பது தெரிந்தும் அத்தடையுத்தரவை மீறி ஊர்வலம் நடத்திச் சென்றது சட்டப்படி குற்றம்.**

பதில் : **எங்கள் மொழிகாக்கும் உரிமைக்கு அமைதியாய்ப் போரிடுவது எனது கடமையாகும். மொழிப்பற்றை மறப்பது நாட்டிற்குத் துரோகம் செய்வதாகும்.**

வினா: **அதற்காகச் சட்டத்தை மீறுவது சரியா?**

பதில் : **சட்டம் நாட்டின் மொழி வளர்ச்சியைக் கூட ஒழிப்பதாய் இருக்கிறது.**

வினா: **உங்கள் மதம் என்ன?**

பதில் : **எனக்கு எந்த மதமும் கிடையாது.**

வினா: **உங்கள் சாதி**

பதில் : **திராவிட சாதி**

வினா: தடையுத்தரவை மீறிச் சட்டத்தை மீறியுள்ள தங்களை ஏன் தண்டிக்கக் கூடாது? சமாதானம் ஏதாவது சொல்கிறீர்களா?

பதில் : நான் சமாதானம் சொல்வதற்காக இங்கு வரவில்லை. சர்க்கார் சட்டத்தை நிறைவேற்றியிருக்கும் தாங்கள் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்கச் சித்தமா யிருக்கிறேன் தாராளமாய்ச் செய்யுங்கள்.

வினா: தங்களுக்கு இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை யளிக்கிறேன்.

பதில் : மிகமகிழ்ச்சி வணக்கம்.

"இந்தியன் பீனல் கோட் 188 செக்ஷன்படி தடை யுத்தரவை மீறியமைக்காக இரண்டு மாதக் கடுங் காவல் தண்டனை விதிக்கிறேன் என்று துணை ஆட்சியாளர் கூறியதும் மகிழ்ச்சியுடன் மிக்க மகிழ்ச்சி என்று பதிலுரைத்ததைக் கண்ட பொதுமக்கள் உள்ளம் துடித்தது. காவல்துறை அதிகாரி முகத்தில் ஏற்பட்ட ஆச்சரியக் குறி அவர்கள் கூட இந்த முடிவை எதிர்பார்க்க வில்லை என்று காட்டியது.

பாபநாசத்திலிருந்து திருச்சி சிறைக்குக் கொண்டு செல்வதாகச் சொல்லப்பட்டது. ஆனால் பாபநாசம் விரைவு வண்டியில் கொண்டு சென்று காட்பாடி செல்லும் வண்டியில் ஏற்றி வேலூர்ச் சிறைக்குக் கொண்டு சென்றனர். 24.12.1948இல் சிறை புகுந்தவர் 23.2.1949இல் வேலூர்ச் சிறையிலிருந்து விடுதலை ஆனார்.

தந்தை பெரியாரும், மணியம்மையாரும் கைதான செய்தியைச் சுதேசமித்திரன் என்னும் ஏடு வெளியிட்ட முறை இது.

**சுதேசமித்திரன், டிசம்பர் 21, 1948**

> **செக்ஷன் 144 தடையுத்தரவை மீறிய ஸ்ரீ ஈ.வி. ராமஸ்வாமி என்பவர் கைது செய்யப்பட்டுத் திருச்சிராப்பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.**

கொழுப்பைப் பாருங்கள். ஸ்ரீ.ஈ.வி. ராமஸ்வாமி என்பவராம். 71 வயதுடைய விடுதலைப் போராளி, சுயமரியாதை இயக்கத் தலைவர், திராவிட இனத் தலைவர் 'ராமஸ்வாமி என்பவராம்'.

**விடுதலையின் பதிலடி**

இந்த ஸ்ரீ ஈ.வி. ராமஸ்வாமி என்ற பேர்வழி யார் என்று தெரியாதா? அக்கிரகாரமே கொஞ்ச நாள் பொறு. அப்புறம் தெரியும்.

மணி அம்மையார் கைதானதை
சுதேசமித்திரன் தெரிவித்திருந்த பாணி

## ஒரு ஸ்திரீ கைதானாள்

திராவிடப் பெண்ணாயிருந்தால் 'அவள்' 'இவள்' என்று எழுதலாம். ருக்மணி அருண்டேலுக்கோ ராதா பாய் சுப்பராயனுக்கோ (ஆரியரல்லாத கணவன்மார்களாயிருந்தாலும்கூட இந்தமாதிரி போட இந்த 'சுயஜாதிமித்திரன்' ஜாதி திமிரே! பொறு! பொறு! ஸ்ரீ இருந்த இடத்தில் புல் முளைத்துப் போகும் நாள் நெருங்கிவிட்டது'. இதுவும் விடுதலை ஏட்டின் வீர முழக்கம்.

மணியம்மையார் சிறைப்பட்டார். 25-09-1949இல் வேலூர்ச் சிறையிலிருந்து விடுதலை ஆனார்.

இங்கே ஒரு முதன்மையான நிகழ்வைப் பதிவு செய்ய வேண்டும். தந்தை பெரியார் வேலூர்ச் சிறைச்சாலை வாசலில் அன்னையார் விடுதலையாகும் தினத்தன்று காத்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றார்.

ஒரு மாபெரும் தலைவர் மாபெரும் இயக்கத்தினை நடத்துபவர் தனது செயலாளராக விளங்கிய கழகத் தொண்டர் சிறையிலிருந்து விடுதலை அடைகின்றபோது நேரில் வந்து வரவேற்று அவரையும், அவருடன் சிறைப்பட்ட மற்றவர்களையும் வரவேற்றது வரலாற்றில் இதுவே முதல் நிகழ்வாக இருக்கும்.

இந்தி எதிர்ப்பு என்பது இத்தோடு முடிந்துவிடவில்லை. 1949இல் மார்ச் மாதத்தில் சென்னையிலும் தொடர்ந்தது. சென்னையில் அஞ்சலகம் முன்னர் மறியல் மேற்கொள்ளப் பெற்றது. 31-03-1949ஆம் நாள் சென்னைத் தலைமை அஞ்சலகம் முன்னர் நடைபெற்ற 'தர்ணா' எனும் மறியலுக்கு மணியம்மையார் தலைமை ஏற்றார். இப்போது கைது செய்து விடுவித்துவிட்டனர்.

### பெரியார் - மணியம்மையார் திருமண ஏற்பாடு

பெரியார்-மணி அம்மையார் திருமண ஏற்பாட்டிற்கு முன் நிகழ்வுற்ற சில நிகழ்ச்சிகள் பெரியார்-அண்ணா இடையே கருத்து வேற்றுமையை ஏற்படுத்தின. எனவே பெரியாரை விட்டுப்பிரிய ஒரு வாய்ப்பை அண்ணா எதிர்நோக்கியிருந்தபோது பெரியார்-மணி அம்மை திருமண ஏற்பாடு அதற்குத் துணையாக அமைந்தது எனலாம்.

முதலாவது வேற்றுமைக்கான காரணம் 3.6.1949 முதல் 10.6.49 வரை திராவிடர் கழகக் கொள்கைப் பிரச்சார வகுப்பினைப்

பெரியார் திருவாரூருக்கு அருகில் உள்ள மாவூர் என்னுமிடத்தில் சர்மா எனும் பார்ப்பனர் தோட்டத்தில் நடத்தினார்.

இந்தப் பிரச்சார வகுப்பிற்குச் சர்மா உதவினார். கடைசி நாளில் விருந்து அளித்தார். அவருடைய தோட்டத்தில் இதுபோல் பெரியார் பிரச்சார வகுப்பு நடத்தியதைக் கட்சியில் அண்ணா உள்ளிட்ட கழக முன்னணியினர் விரும்பவில்லை. ஆனால் பெரியாரைப் பொறுத்தமட்டில் தனிப்பட்ட பிராமணத் துவேஷம் எவரிடத்தும் கூடாது எனும் கொள்கையுடையவர். **பிராமணீயத்தை வெறுத்தாரன்றிப் பிராமணர்களை வெறுக்கவில்லை.**

**பெரியாரும் சரி, மணியம்மையும் சரி தனிப்பட்ட முறையில் எந்தப் பார்ப்பனரிடமும் அவர்கள் எவ்வளவு தீவிர வைதீகராய் விளங்கிய போதிலும், ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவரான போதிலும் வெறுப்புக்** கொண்டதில்லை. ஏனென்றால் பெரியார் ஒரு பகுத்தறிவுவாதி என்பதோடு மனிதநேயர்.

ஒருவர் பார்ப்பனராய்ப் பிறந்துவிட்டார் என்பதால் அவரை வெறுக்க வேண்டுவதில்லை. அவரிடம் காணப்பெற்ற பார்ப்பனீயத்தையே பெரியார் எப்போதும் கடிந்து வந்தார்.

பெரியாரைக் காண வருகின்ற பார்ப்பனப் பத்திரிகையாளர் களையும் மணியம்மையார் முகமலர்ச்சியோடு பார்ப்பனராயிற்றே என்று வெறுப்புக் கொள்ளாது வரவேற்று அய்யாவுடனான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

வயதில் இளையரான இல்லஸ்டிரேட்டட் வீக்லியின் நிருபர் பெரியாரைக் காண வந்தபோது தள்ளாத வயதில் அவரை 'வாங்க', 'போங்க' என்று மரியாதையுடன் விளித்து, அவர் பேட்டி முடிந்து செல்லவிருந்தபோது எழுந்து நின்று வாழ்த்தி வழியனுப்பியிருக்கிறார் என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

பெரியார் திருவண்ணாமலையில் அங்கு வந்த இராஜாஜியைச் சந்தித்த செய்தி வெளியான போது அண்ணா கோவை மாநாட்டில் இராஜாஜி-பெரியார் சந்திப்பு குறித்து விளக்க வேண்டும் என்ற போது அது தனது சொந்த விஷயம் என்று பெரியார் கூறினார்.

மேலும் பெரியார்

> **என்னைப் பற்றி ஒரு ஏற்பாடு செய்து கொண்டிருக் கிறேன். இனி நாள் கடத்த ஆசைப்படவில்லை. உடன் செய்து விட்டுப் பலி பீடத்துக்கு வரப்போகிறேன். நம்பிக்கையான ஒருவர் எனக்குக் கிடைக்கவில்லை என்றால் அதற்கு யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது**

என்று அண்ணாவும் மற்றவர்களும் எழுப்பிய பல்வேறு சிக்கல் களுக்குப் பெரியார் பதிலை விளக்கமாக அளித்தார்.

7-7-1949 விடுதலையில் விளக்கம் கேட்ட தோழர்களுக்குப் பெரியார் விளக்கம் அளித்தார்.

அதில் 'ஏற்பாடு' என்பதற்குப் பொருள் விளங்கும்படியாக

> **எனக்கும் என் பொருளுக்கும் சட்டப் படிக்கான ஒரு வாரிசு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். அந்த வாரிசு உரிமையையும் தனிப்பட்ட உரிமையையும் மற்றும் 5 பேர்களாகச் சேர்த்து இயக்க நடப்புகள் பொருள் பாதுகாக்கும் ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன்**

என்று கூறியவர்,

> **இப்படி எழுதி இருப்பதில் நான் மற்றவர்களை அலட்சியப்படுத்தியதாகவும் இயக்கத் தலைமைப் பதவியை மணியம்மைக்குப் பட்டம் சூட்டப் போவ தாகவும், பொருள் கொள்ள இடம் எங்கே இருக்கிறது**

என்று கேட்டார்.

> **மற்றபடி பிரஸ்தாப திருமணம் என்பது சட்டப் படிக்கான பெயரே ஒழிய காரியப்படி எனக்கு வாரிசுதான்**

இந்த விளக்கம் 7.7.1949இல் விடுதலையில் இடம்பெற்றது.

**எதிர்ப்பு அலைகள்**

பெரியார் 7-7-49இல் கொடுத்த விளக்கம் பெரியார் மணியம்மை திருமண ஏற்பாடு குறித்து அறிந்தபின் எதிர்ப்பு அலைகள் எழுந்தன. மணியம்மையாரைப் பொறுத்த மட்டில் பெரியாரின் இந்த முடிவு அவர் அறிந்ததோ அல்லது அவருடன் விவாதித்து அவருடைய ஒப்புதல் பெற்று மேற்கொள்ளப் பெற்றதோ அன்று.

பெரியாரிடம் 'விடுதலை' நிருவாகத்தின் பொருட்டு அவ்வப்போது வெள்ளைத் தாளில் அல்லது அவர் நீட்டுகிற இடத்தில் ஏன்? எதற்கு? என்று கேள்வி ஏதும் கேட்காமல் கையெழுத்துப் போட்டே பழக்கப்பட்டவர் அவர். எனவே பெரியார் மேற்கொண்ட முழுக்க முழுக்க அவருடைய முடிவின் அடிப்படையில் மேற்கொண்ட ஏற்பாடு.

ஆனால் அன்னையார் அய்யாவை என்றும் எப்போதும் அவர் வந்து சேர்ந்த ஆறு ஆண்டுகளில் எதுவும் கேட்டதில்லை. அய்யாவின் முடிவு, தீர்மானம், கட்டளை, ஆணை எதுவாயினும் அதை அப்படியே இயக்கம், கொள்கை ஆகியவற்றில் ஏற்று நடத்தி வந்ததால் இதிலும் அவருக்கென்று தனிக்கருத்து ஏதும் கொள்ள வில்லை.

9-7-1949இல் விடுதலையில் **'இன்னமுமா விளக்கம் தேவை?'** என்று பெரியார் விளக்கமாக எழுதினார்.

விடுதலை ஏட்டுக்குப் பெரியாருக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் கடிதங்கள் பல வந்தன. திராவிடர் கழக நிருவாகக்குழு ஜூல 10ஆம் நாள் திருச்சியில் கூடியது. திருமண ஏற்பாடு வேண்டாமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் எனவும், பெரியாரிடம் நேரில் தூதுக்குழு சென்று நேரில் கேட்டுக் கொள்வது என்றும் முடிவு செய்தனர்.

இத்தீர்மானம் நடைபெற்று நடுப் பகல் உணவு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே 9.7.49ஆம் நாள் அன்று பெரியார்-மணியம்மையார் திருமண ஏற்பாடு பதிவு செய்யப்பெற்று விட்ட செய்தி வெளியாயிற்று.

இந் நிருவாகக்குழுக் கூட்டம் நடைபெறும் முன்னர் 5.7.1949இல் அண்ணா திராவிடநாடு இதழில் **வெட்கப்படுகிறேன்-வேதனைப்படுகிறேன்** என்னும் தலைப்பில் நீண்ட அறிக்கை வெளி யிட்டார். அதன்பின் கழகம் பிளவுபட்டுவிட்டது. **'கண்ணீர்த் துளிகள்'** என்று திருமணத்தை எதிர்த்தவர்கள் பெயர்கள் தொடர்ந்து வெளிவந்தன.

பெரியாரின் திருமண ஏற்பாட்டை எதிர்த்தவர்கள் ஒன்று கூடித் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனர். பெரியார் எதைக் குறித்தும் அதிகக் கவலைப்படாது தன் இயக்கப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

'லோகோபகாரி' எனும் ஏடு 'எதிர்ப்பிலே வளர்ந்த ஈ.வெ.ரா. எனும் தலைப்பில் எழுதியவற்றை இங்கே குறிப்பிடப் பொருத்த மாகும்.

> **பெரியார் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாதவர். எதிர்ப்பு தான் அவருக்கு உற்சாகத்தை அதிகமாக்கும். முயற்சியைப் பெருக்கும். இதுவரையிலும் அவரை யாராலும் வீழ்த்த முடியவில்லை. இந்த உண்மை அவருக்குத் தெரியும். ஒருவர் எதிர்த்தால் மற்றொருவர் துணை வருவார் என்பதை அவர் அறிவார். இதுவரை**

> **யிலும் அவர் வாழ்க்கையில் நடந்தது எதிர்ப்புதான் அவரைப் பெரியார் ஆக்கிற்று. எதிர்ப்புதான் அவரைத் தலைவராக்கிற்று. இன்று அவர் சிருஷ்டித்த எதிர்ப்புச் சக்தி அவரையே எதிர்க்கத் தொடங்கியிருக்கிறது**

என்று எழுதியது.

**ஈ.வெ.ரா. மணியம்மை**

ஜூலை 1949இல் பெரியார் அறிக்கை ஒன்றின் வாயிலாக ஈ.வெ.ரா. மணியம்மை என்று தமிழிலும், ஆங்கிலத்தில் முன்றெழுத்துக்கள் கொண்டு ஈ.வெ.ரா. மணியம்மை எனவும் அழைக்கும்படி சொன்னார். அதன்பின் கையொப்பமிடுகையில் ஈ.வெ.ரா. மணியம்மை என்று கையொப்பமிடலானார். திராவிடர் கழகத்தில் பிளவு ஏற்பட்டதற்கு அன்னை மணியம்மையார் காரணமா என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

அண்ணா-பெரியாரிடையே ஏற்பட்டு இருந்த பனிப்போர் தான் காரணம்.

பெரியார் தம் கொள்கைகள் அனைத்திலும் உறுதியாக இருந்தது போல் திராவிடர் கழகம் பிரச்சார இயக்கமே, அரசியலில் பங்கேற்றுப் பதவியைக் கைப்பற்றும் நோக்கம் தமக்கு அறவே இல்லை என்பதை உறுதிபடத் தெளிவுபடுத்தி விட்டார்.

பதவி சுகம் வேண்டுவோர் பாட்டை இதுவன்று என்று காட்டிவிட்டார். எனவே பெரியாரை விட்டு விலகவேண்டும். ஆனால் பெரியார் மீது கொண்ட உண்மையான பற்று, பாச உணர்வு அதற்குத் தடையாக இருந்தது.

பெரியாரைப் பொறுத்தமட்டில் அவருடைய இயக்கத்தைப் பொறுத்தமட்டில் ஜனநாயக முறைப்படி, அமைப்பு அடிப்படையில் இயங்கும் இயக்கமன்று. பெரியார்தான் தலைவர். பெரியார் காட்டும் வழியே இயக்கக் கோட்பாடு, திராவிடர் கழகத்தில் இருப்பவர்கள் பெரியார் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாயின் இயக்கத்தில் இருக்கலாம். பிடிக்கவில்லையென்றால் வெளியேறிவிடலாம். எவரையும் சார்ந்து நம்பி அவர் இயக்கம் நடத்தவில்லை. கொள்கை சமுதாயத்தில் பகுத்தறிவு பரவவேண்டும், சாதி ஒழிய வேண்டும், அதற்குத் தடையானவை ஒழிக்கப்பட வேண்டும்.

எனவே அமைப்பு அடிப்படையில் இயங்க வேண்டும் என்னும் எதிர்பார்ப்புக்கு இடமில்லாத நிலையில், அமைப்பு அடிப்படையில் இயங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் பெரியாரைவிட்டு விலக வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தனர்.

எனவே காரணத்தைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு மற்றைய காரணங்கள் எல்லாம் வலுவின்றி இருந்தன. திருமண ஏற்பாடு பொருத்தாத் திருமணம் என்று மகுடம் சூட்டப் பட்டபோது பொருத்தமாகச் சிலருக்குத் தோன்றியது.

பெரியார்-மணியம்மை திருமணம் என்று கூறப்படுவது திருமணம் அன்று திருமண ஏற்பாடே. பெரியார் இதில் தெளிவாக இருந்ததுடன் தம் அறிக்கையில் தெளிவுபடுத்தினார். தனக்குப்பின் மணியம்மையார் வாரிசாக வரவேண்டும் என்று பெரியார் எண்ணவே யில்லை. ஆனால் வாரிசாகத் தம் சொத்துக்களுக்கு வரவேண்டும் என்று விரும்பினார். சட்டப்பூர்வமான சிக்கல் ஏற்படாது இருக்கவே திருமணம் எனும் ஏற்பாட்டைச் செய்தார்.

மணியம்மையார் திருமணத்தின்போது 32 வயதுடையவர். விவரம் தெரிந்தவர். அவரை ஏமாற்றியோ, மோசடியாகவோ மணக்கவில்லை. மேலும் ஆறு ஆண்டுகளாக அவர் செய்த பணி விடைகள் மனைவி கூடச் செய்யாதவை. மனைவி என்ற நிலை பெற்றுத்தான் அவர் இதெல்லாம் செய்ய வேண்டும் என்றில்லை. அவர் ஆற்றிய கடமைகளுக்கு ஈடான கடமையைச் செய்ய யார் இருக்கிறார்கள் என்ற போது ஒருவரும் பொருத்தமானவர் இல்லை.

பெரியார் மணியம்மையார் திருமண ஏற்பாடு திராவிடர் இயக்க வரலாற்றில் இடம்பெற்ற முதன்மையான நிகழ்வு.

பெரியார்-மணியம்மையார் திருமணத்தைக் குறித்து அதனை எதிர்த்தவர்கள் கூறிவந்தது 'பொருந்தாத் திருமணம்' என்னும் குற்றச்சாட்டே.

இந்த ஒரு கூற்றைத் தக்க வகையில் எடுத்துரைத்தாலே பெரியார்-மணியம்மையார் திருமண ஏற்பாடு இந்தக் குற்றச் சாட்டில் வராது என்பது தெளிவாகிவிடும்.

ஒரு கிழவர் ஓர் இளம்பெண்ணை இல்லற வாழ்வில் சுகங்களை - இளமைக் கனவுகளை நுகரவேண்டிய பெண்ணை அவர் விருப்பத்திற்கு மாறாக, குடும்பச்சூழல், சொத்து, பெற்றோர் வற்புறுத்தல் அல்லது மிரட்டல் முதலான ஏதேனும் காரணங்களினால் மணம் செய்து கொண்டாலே பொருந்தாத் திருமணம் என்னும் வகையில் சேரும்.

ஒரு மனிதன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது அடிப்படையில் தெள்ளத்தெளிவாகக் கூறினால் தன்னுடைய காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கு, தனக்குப்பின் சந்ததி உருவாகவேண்டும் என்னும் நோக்கத்திற்கு.

பெரியாரைப் பொறுத்தமட்டில் காம இச்சை, இல்லற சுகம், வாரிசு வேண்டும், தன் சந்ததி என்று வேண்டும் எனும் எந்த நோக்கமும் இல்லாதவர். 1933இல் நாகம்மையார் மறைந்தபோது தனது பொதுவாழ்வில் ஒரு வகையான தடை நீங்கிற்று என உள்ளூர மனைவியைப் பிரிந்த துயரம், வருத்தம் இருந்த போதிலும் கருதியவர்.

நாகம்மையார் மறைந்தபின், அவருடைய உறவினர்களும், நண்பர்களும் பெரியாரைத் திருமணம் செய்து கொள்ளும்படி பத்து ஆண்டுகள் வற்புறுத்தி வந்துள்ளனர். ஆனால் பெரியாருக்கு அத்தகைய எந்தவிதத் தூண்டுதல் வற்புறுத்தல்களை ஏற்கவில்லை.

பெரியாரின் பொது வாழ்வில் எத்தனையோ பெண்டிரை அவர் சந்தித்ததுண்டு. பெரியாரை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு நெருங்கிய பெண்டிரையும் கூட அவர் கிட்டே சேர்த்துக் கொள்ளாமல் அவர் விலக்கி வைத்தார் என்பது அவரோடு இணக்கமாகப் பழகியவர்களுக்குத் தெரியும்.

மேலும் அரசியலிலும், தன் வாழ்க்கையிலும் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தி வந்த தலைவர் அவர். தந்தை பெரியாரைப் போல் ஒழுக்க உயர்வுடைய ஒரு தலைவரைக் காட்டவியலுமா என்றால் காட்ட இயலாது என்று கூறுமளவிற்கு ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்கியவர்.

உடல் உபாதைகளால் அவதிப்பட்ட தலைவர் ஒருவர் பெரியாரைப்போல் அரசியலில் எவரும் கிடையாது. காம இச்சை கடந்த அத்தகு வாழ்க்கைத் தகுதியற்ற நிலை எய்திவிட்ட தலைவர் அவர்.

1943 முதல் அன்னை மணியம்மையார் பெரியாருடன் இருந்து வருகிறார். அவருக்கு உணவு வழங்குவது, குளிப்பாட்டுவது, உடை மாற்றுவது, உதவியாகக் கையைப் பற்றி அழைத்துச்செல்வது என்று ஒரு மனைவியை விட அதிகமான பணிகளை, அவர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றி வருபவராக மணியம்மை விளங்கினார்.

எனவே திருமணம் என்னும் ஒன்றைச் செய்துதான் தீர வேண்டும் எனும் எந்தவிதக் கட்டாயமும் இல்லை.

மணியம்மையாரும் பருவம் எய்திப் பத்தாண்டுகட்குமேல் தன் பெற்றோருடன் இருந்த காலத்திலேயே திருமண வாழ்க்கையை வெறுத்து வாழ்ந்தவர். யாரேனும் திருமணப் பேச்சுப் பேசினால் சாடி வேறு பேச்சுப் பேசுங்கள் என்று கடிந்து கொண்டவர்.

இயக்கக் கொள்கைகள் மீது, இயக்கத் தலைவரின் நலத்தின் மீது கொண்ட ஈடுபாடே அவர் பெரியாரிடம் வந்து சேர்ந்ததற்குக் காரணம்.

மணியம்மையார் ஒரு தன்னலமற்ற பெண்மணி, தனக்கென்று தனி ஆசை, விருப்பம் என ஏதுமில்லாப் பெண்மணி. எல்லாமே பெரியார் என்று வந்துவிட்டவர்.

தன்னை எப்போதும் இயக்க நடவடிக்கைகளில் முன்னிறுத்தி எதிர்காலத்துக்கு உதவிடும் வகையில் திட்டமிட்டுக் கொண்டவரா என்றால் அதுவுமில்லை.

நெ. திருமலைசாமி, கைவல்யம் சாமி ஆகியவர்கள் மிகத் தெள்ளத் தெளிவாக அலசி ஆராய்ந்து பெரியாரின் திருமண ஏற்பாட்டில் பொருந்தாத் திருமணம் என்ற கூற்று எவ்வகையிலும் பொருத்தமற்றது என்றே கூறி வந்துள்ளனர். பெரியாரைவிட்டுத் தனி அரசியல் வாழ்க்கை மேற்கொள்ளவிருந்தவர்களுக்கு இரு ஒரு வாய்ப்பு.

அண்ணாவைப் பொறுத்தமட்டில் அய்யா தவறாகக் கருதியது போல் அரசியலில் பணம் சேர்க்க வேண்டும் சொகுசான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கம் ஏதும் கொண்டிருக்க வில்லை.

அண்ணா ஊராரின் பழிச் சொல்லுக்கு அதாவது பெரியார் - இளம்பெண்ணைத் திருமணம்செய்து கொண்டார் என்று தூற்றும் தூற்றுதலுக்கு அவச் சொற்களுக்கு ஆளாகிவிட்டோமே என்று உண்மையிலேயே கவலைப்பட்டார்.

அண்ணா பெரியாரை விட்டு விலகினாரே ஒழிய, பெரியாரின் கொள்கைகளைவிட்டு ஒரு போதும் வழிபிறழ்ந்த தில்லை. பிறழக் கூடாது என்பதிலும் உறுதியோடு இருந்தார்.

'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று ஒரு தனி அமைப்பு உருவாக்க வேண்டும் என்று திட்டம் ஏதும் தீட்டிச் செயல்பட வில்லை. உண்மையிலேயே பெரியாரைவிட்டு விலகித் தனி இயக்கம் காணத் தயங்கினார்.

அண்ணாவிற்கு ஆட்சிக் கட்டில் ஏறவேண்டும், அரசோச்ச வேண்டும், முதலமைச்சராக வலம் வரவேண்டும் என்ற எண்ண மெல்லாம் கிடையவே கிடையாது.

பெரியாரைவிட்டுப் பிரிய நேர்ந்தால் பெரியார் வலியுறுத்தி வந்த சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை எழுதிக் கொண்டும்,

பேசிக்கொண்டும் வாழ்க்கைத் தேரினை ஓட்டிச் செல்லவே விரும்பினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் முடிவிற்கு அண்ணா இழுத்துச் செல்லப்பட்டார் என்பதே சரி.

பெரியார்தான் தாம் வாழ்நாளில் கண்ட, ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் என்பதில் இறுதி மூச்சிருக்கும் வரை உறுதியாக இருந்தார்.

தி.மு. கழகத்தின் தலைவர் என அலங்காரப் பவனி வந்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யாது தலைமை நாற்காலியைப் பெரியாருக்கு என்று எப்போதும் வைத்துவிட்டுப் பொதுச் செயலாளர், தி.மு.கழகம் என்றே வலம் வந்து 1969இல் மறைந்தார்.

அண்ணா 1967இல் தேர்தலில் ஆசையில்லாமலா பங்கேற்றார்? என்று கேள்வி எழுப்பக் கூடும். 1957இல் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில் அண்ணா விரும்பி யிருந்தால் நேரடியாகத் தி.மு.க. தேர்தலில் பங்கேற்கும் என்று சொன்னால் எதிர்ப்பதற்கு எவருமே இருந்திருக்க மாட்டார்கள். மக்களாட்சி முறைப்படி கழகத்தவர்கள் ஒப்புதல் பெற்றுத் தேர்தலில் பங்கேற்ற ஜனநாயகவாதி அண்ணா.

1967இல் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் ஆவோம் என்று எண்ணம் இல்லாது விளங்கியவர் அண்ணா. கலைஞர் சரியாக எதிர்பார்த்தார். இராஜாஜி எதிர்பார்த்தார். கூட்டணி வெற்றி பெறுமென்று.

அதனால்தான் சந்துமுனைகளில் சிந்து பாடிக் கொண்டிருக்க விரும்பிய தன்னை மக்கள் அரசுக் கட்டிலில் ஏற்றி அழகு பார்த்தனர் என்றார் அண்ணா.

அண்ணா பெரியாரைவிட்டுப் பிரிந்த உண்மையான காரணம் அரசியலில் காங்கிரசுக்கு ஒரு சரியான எதிரணி உருவாக்க வேண்டும் என்பதே. அன்றைய நிலையில் காங்கிரசுக்கு 1949-50களில் சரியான மாற்றுக்கட்சி இல்லை. எனவே சட்டசபையில் நுழைந்து காங்கிரசின் தவறான கொள்கைகளைச் சுட்டிக் காட்டி மக்கள் நலனில் உண்மையான கவனம் செலுத்தும் ஓர் எதிர்க்கட்சியாக விளங்க வேண்டும் என்பதே முதன்மை நோக்கம்.

பெரியாரின் இயக்கம் வெறும் பிரச்சார இயக்கமாகத் திகழ்வதில் பயன் ஏதும் விளையாது. மக்கள் கூடுகிறார்கள். அலைகிறார்கள் பயன் ஏதும் விளையவில்லை என நம்பினர்.

**மீண்டும் மணியம்மையார் தலை உருண்டது**

1949இல் பெரியார்-மணியம்மையார் திருமண ஏற்பாட்டின் விளைவால் கழகம் பிளவுபட்டது எனவும், அண்ணாவின் தலைமையில் தி.மு. கழகம் என்னும் அமைப்புக் கண்டு ஒரு பிரிவினர் பிரிந்து சென்றனர் எனக் கண்டோம்.

1963இல் மீண்டும் மணியம்மையாரைக் குறை கூறி விடுதலையின் ஆசிரியராக இருந்த குத்தூசி குருசாமி, பெத்தாம் பாளையம் பழநிச்சாமி ஆகிய இருவரும் கட்சிக்குள் குழப்பம் விளைவித்தனர்.

அவர்கள் 'திராவிடர் கழகம்' மணியம்மையார் வருகைக்குப் பின்னர் மணியம்மையார் கழகமாக மாறிவிட்டது' என்று குறை கூறினார்.

பெரியார், இவர்களுடைய நடவடிக்கைகளை நன்கு கவனித்து, இருவரையும் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஒதுக்கி வைத்தார். பிறகு அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கி வைத்தார். பெரியார்தான் இந்நடவடிக்கை மேற்கொண்டார் என்ற போதிலும் வீணாக மணியம்மையார் பெயரை இழுத்தனர்.

இதில் சா. குருசாமி அவர்களும், பெத்தாம்பாளையம் பழநிச்சாமி அவர்களும் மேற்கொண்ட ஒருசெயல் இயக்க நலனுக்கு ஊறாக அமைந்தது.

இந்தச் சிக்கல் எழுந்த வேளையிலேதான் பெரியாரின் 1949இல் பெரியாரின் திருமண ஏற்பாடு நடைபெற்ற வேளையிலே தான் பெரியார் உடுமலைப்பேட்டை வழக்கின் பொருட்டுப் பொள்ளாச்சியில் இருந்தபோது, பெரியார் தம் திருமண ஏற்பாட்டை ஒத்தி செய்வது குறித்து ஆலோசிப்பதாக விடுதலையில் போலிக் கடிதம் ஒன்று வெளியானது. அந்தக் கடிதத்தை விடுதலையில் வெளியிட்டவர் சா. குருசாமி அவர்கள் என்பதனைப் பெரியார் வெளிப்படையாக வெளியிட்டார்.

பெரியாரின் சொத்துக் குறித்து அவர்கள் இருவரும் பிரச்சினை கிளப்பியதுடன் தங்கள் கைப்பட வெளிப்படையாகவே வருமான வரித்துறையினருக்கும் பெரியாரின் சொத்துகள் குறித்து வருமான வரித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதினர்.

1963இல் தொடங்கிய இச்சிக்கல் 1976இல் தலைதூக்கி அம்மா தலைவியாக விளங்கிய காலத்தில் பெருந்தொல்லையாக

விளங்கி, திரு. கி. வீரமணி அவர்கள் பொதுச் செயலாளராக அம்மா மறைந்த பின் தக்க நடவடிக்கை எடுத்தபின் தீர்ந்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் தனி அமைப்பு உருவாக்கிய அண்ணா தம் கட்சியின் தலைமைப் பதவியைப் பெரியாருக்கே என்றும் விட்டுவைத்தார். கொள்கை எதிலும் பெரியாரின் கொள்கைக்கு மாறாகக் கொண்டிருக்கவில்லை.

இந்தி எதிர்ப்பா, சாதி ஒழிப்பா, திராவிட நாட்டுக் கோட்பாடா எல்லாம் இரண்டு இயக்கங்களுக்கும் அடிவேராக விளங்கின. இந்தி எழுத்து ஒழிப்பு என்றால் ஒரு இரயில் நிலையத்தில் திராவிடர் கழகத்தவர் தார் கொண்டு அழித்தால் மற்றொரு பக்கத்தில் தி.மு.க.வினர் தார் கொண்டு அழித்தனர்.

இராஜாஜியின் குலக்கல்வித் திட்ட எதிர்ப்பா? அங்கேயும் இராஜாஜி தி.க., தி.மு.க.வின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிட்டது. எனவே தி.மு.க. திருமண ஏற்பாட்டை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. இதனைப் பேராசிரியர் அன்பழகன் சுயமரியாதை இயக்கப் பொன் விழாவின் போது பலர் முன்னிலையில் எடுத்துரைக்கவும் செய்தார்.

**வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம், இல்லை விரட்டப் படுகிறோம் – அண்ணாவின் கட்டுரை**

திருமண முறையிலேயுள்ள மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கவும் பெண்களைக் கருவிகளாக்கும் கயமைத்தனத்தை ஒழிக்கவும் ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியது போல வேறு எந்தத் தலைவரும் உரையாற்றியதில்லை

“ஏம்பா? திராவிடர் கழகம் உங்கள் தலைவருக்குத் திருமணமாமே” என்று கேட்கும் கேள்வி கூரம்பு போல் நெஞ்சில் பாய்ந்தது.

“சீர்திருத்த இயக்கம் இதோ வாராய்யா “சீர்திருத்தம், 72க்கும் 26க்கும் திருமணம்” என்று கேலி பேசுகிறார்களே - கேட்டதும் நெஞ்சி வெடிக்கிறதே”

“கையிலேதடி மணமகனுக்கு, கருப்பு உடை மணமகளுக்கு” என்று பரிகாசம் பேசுகிறார்களே.

“ஊருக்குத்தானா உபதேசம் என்று இடிந்துரைக்கிறார்களே.”

“முகத்திலே கரிபூசிவிட்டார் மூக்கறுத்து விட்டார் மூலையிலே உட்கார்ந்து கத்துகிறோம் சேதி தெரிந்தது முதல்.”

வெட்கப்படுகிறோம் அயலாரைக்காண வேதனைப்படுகிறோம் தனிமையில்.

எத்தனை ஆயிரம் காரணம் காட்டினாலும், சமத்தான விளக்கம் உரைத்த 72-26 இதை மறுக்க முடியாதே இப்பொருந்தாத் திருமணம் என்பதை மறைக்க முடியாதே.

புயல் நுழைகிறது என்று கருதிய வள்ளுவர், புல்லர் அன்று தூற்றப்பட்டோர், ஆதலால் அந்த அம்மையாரும் அருந்தொண்டுகள், திராவிடர்கள் முதலிலே கொண்டிருந்த அருவருப்பையும் இழந்தனர்.

மணியம்மை பெரியாருக்கு மனைவி மட்டுமல்ல, இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி பெறப் போகிறார்.

புதிய அன்னிபெசன்ட் புறப்படுகிறார்களாம்.

நடைபெறப்போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல, புதிய மகுடாபிஷேகம். ஒரு இயக்கத்துக்கு வாரிசு ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கு ஏற்றது தானா? அல்லது நடைமுறையிலே வெற்றி தரக்கூடியது தானா?

நம்மை நம்பாதவரை நாம் எப்படி நம்புவது? ஏன் நம்ப வேண்டும்.

பொருந்தாத் திருமணம் என்று கேள்வியுற்றேன்.

வெட்கப்பட்டோம் - அதற்கும் பெரியார் தந்த அறிக்கை நமக்கு வேதனையூட்டியது.

சிந்தியுங்கள் - சோர்ந்து விட வேண்டாம் - தீர்மானியுங்கள் - அவசரம் வேண்டாம் - அஞ்சேல் - வெற்றி நமதே.

## இராஜாஜியின் பங்கு

இராஜாஜியைத் திருவண்ணாமலைக்கு அவர் வந்தபோது திருவண்ணாமலை இரயில் நிலையத்தில் காலை 6.46 முதல் 7.17 வரை அரை மணி நேரம் பெரியார் சந்தித்து உரையாடிய பின்னர், பெரியார் - மணியம்மை திருமண ஏற்பாடு செய்தி வந்தபோது, அவரிடம் பேசியது குறித்துப் பெரியார் விளக்க வேண்டுமென்று கோவை முத்தமிழ் மாநாட்டில் அண்ணா பேசினார். தந்தை பெரியார் என் சொந்த விஷயம் பற்றிப் பேசினேன். இதை வெளியிட வேண்டிய அவசியமில்லை என்று கூறினார் என்று கண்டோம்.

இதில் தொடர்புடைய மூவரில் பெரியார் மேலே கூறியவாறு கூறிவிட்டார். பெரியாரின் கருத்து எதுவோ அதுவே மணியம்மையாரின் கருத்து என்பதால் அவரும் ஏதும் கூறவில்லை. ஆச்சாரியாரும் பெரியார் தன்னிடம் தனிப்பட்ட விசயமாகப் பேசியதால் என்ன பேசினேன் என்பதைத் தெரிவிக்கவில்லை. ஆச்சாரியார் பெரியாருக்கு உடன்பாடாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை. மாறாக எதிரான

கருத்தையே தெரிவித்தார். இராஜாஜி 'அந்தரங்கம்' என்று குறிப்பிட்டு எழுதிய கடிதமாதலால் பெரியாரும் அதைக் குறித்துத் தகவல் வெளியிடவில்லை. கழகத் தோழர்கள் திரு. கி. வீரமணி உட்பட இராஜாஜியே திருமண ஏற்பாட்டிற்கு யோசனைக்குரியவர் என்று எண்ணி 1975 வரை 39 ஆண்டுகள் கழிந்துவிட்டது.

அந்தக் கடிதத்தைப் பெரியார் ஆவணக் காப்பகப் பெட்டகத்திலிருந்து அம்மா மறைந்தபின் திரு. கி. வீரமணி வெளியிட்டார். அக்கடிதத்தில் எழுதியவை இவை:

அன்பிற்குரிய ஆப்த நண்பருக்கு,

தங்களுடைய கடிதம் இன்றுதான் வெளியூரிலிருந்து திரும்பியதும் பார்த்தேன். என்பால் தாங்கள் காட்டும் அன்பைக் கண்டு நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அன்பு நாட்டுக்கு எந்த விதத்திலாவது உதவும்.

தங்களுடைய கடிதத்தில் கண்டிருக்கும் விஷயத்தில் ஒரு கஷ்டம் இருக்கிறது. அதாவது என்னுடைய பதவி, இந்தப் பதவியை வகிப்பவர் அந்தப் பதவியை வகித்து வந்த காலத்தில் சாட்சி கையொப்பமிடுவது அல்லது அதிகாரிகள் முன்னிலையில் அத்தாட்சியாக நிற்பது இதற்கெல்லாம் எவரும் பதவியை ஒட்டிய வழக்கத்திற்கும் பதவியின் கவுரவத்திற்கும் ஒவ்வாத காரியம் என்று இவ்விடத்திய உத்தியோகக் கூட்டம் அபிப்ராயப்படுவார்கள். என் அன்புக்கு அடையாளமாக வேறு ஒரு நலம் செய்ய வேண்டுமேயொழிய சாட்சிக் கையெழுத்துக்காகப் போவது ........ இரண்டாவதாக உலக அனுபவத்தில் என்னைவிடத் தங்களுக்கு அனுபவம் அதிகம். 30 வயது பெண் தங்களுக்குப்பின் தங்களிடம் எவ்வளவு பக்தியும் அன்பும் இருந்த போதிலும் சொத்தைத் தாங்கள் எண்ணுகிறபடி பரிபாலனம் செய்வார் என்று நம்புவதில் பயனில்லை. அதற்காக நிபந்தனைகள் வைத்துச் சாஸனம் எழுதினால் அது தகராறுக்கும் மனோ வேதனைக்கும் நீடித்த வியாச்சிய வகைகளுக்கும் தான் காரணமாகும்.

இதையெல்லாம் யோசித்து எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வீர்கள். தங்களுடைய

வயதையும், நான் தங்கள் பேரில் வைத்திருக்கும் அன்பையும் கருதி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த வயசில் விவாக எண்ணம் வேண்டாம் என்பது என் அபிப்ராயம். ஆகையால் ஒரு வருடமாவது ஒத்தி வைத்துப் பிறகு மனதில் எண்ணங்கள் ஊர்ஜிதப்பட்ட பின் செய்வது நலம்.

எழுதத் தோன்றியதெல்லாம் எழுதினேன். மன்னிக்க வேண்டும்.

இவை அன்புள்ள
இராஜகோபாலாச்சாரி

திருமண ஏற்பாட்டிற்குப் பின் இராஜாஜி எழுதிய கடிதம்.

அன்புக்குரிய நாயக்கர் அவர்களுக்கு, நமஸ்காரம். திருமணம் முடிந்து விட்டதாகத் தெரியவந்தது. இந்த வாழ்த்துக் கடிதம் எழுது கிறேன். இது தங்கள் மனைவியாருக்குமாகப் பகவான் அருள்வானாக.

இவண்
இராஜகோபாலாச்சாரி

பெரியார் - அண்ணா இடையே பனிப்போருக்கான காரணங் களில் ஒன்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு அண்ணா நிதி திரட்டியது. பெரியார் கழகத்திற்கு 50,000 நிதி திரட்ட முயலுகையில் அண்ணாவின் இந்த முயற்சி அதற்கு அறைகூவல் ஆயிற்று.

அண்ணா பெரியாரை மறைமுகமாகக் குறை கூறும் வகையில் இரும்பாரம், மரத்துண்டு, இராஜபார்ட் ரங்கதுரை முதலிய எழுத்தோவியங்களைத் தம் திராவிட நாடு இதழில் படைத்தார்.

இருவருக்குமிடையே வெளிப்படையாகத் தெரிய வைத்த விவகாரம் இந்திய விடுதலை நாள் விவகாரம். பெரியாரே இதுதான் இருவருக்கும் இடையே வெளிப்படையான மோதல் என்று பின்னாளில் குறிப்பிட்டார். பெரியார் விடுதலைக்கு 25 ஆண்டுகளுக்குப் பின்னும் கூட விடுதலை நாளைத் திராவிடர்களின் துயர நாள் என்றே கூறினார். அண்ணா விடுதலை நாள் கொண்டாட்டத்தில் பங்கேற்பதால் இந்திய விடுதலைத் துரோகிகள் என்னும் தீராத பழி மறையும் என நம்பினார்.

### பெரியாருடன் பொதுத் தொண்டு

பெரியார் மணியம்மை திருமண ஏற்பாட்டிற்குப் பின்னும் வழக்கமான தொண்டு தொடர்ந்தது. பெரியாரின் திருமணப் பதிவிற்குப்

பின் கழக நடவடிக்கைகள் நின்று போயின. கழகத் தொண்டர்களின் நிலை குறித்தும் பொறுமை காத்தார்.

அண்ணா செயலின்றி இருப்பதற்குப் பதிலாகக் கழகத்தின் எதிர்காலம் குறித்து முடிவு மேற்கொள்ள வேண்டுமெனக் கழகத் தொண்டர்கள் வலியுறுத்தினர்.

செப்டம்பர் 17, 1949இல் கே.கே. நீலமேகம் தலைமையில் நிருவாகக் குழுவைக் கூட்டித் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பெயரில் அண்ணாவைப் பொதுச் செயலாளராகக் கொண்டு புதிய கட்சி தொடங்கத் தீர்மானம் நிறைவேறியது. இன்று கட்சிகளில் பிரிந்து செல்வோர் தாங்கள் தான் கட்சி, எங்களுக்குத்தான் பொதுக் குழு ஆதரவு என்று முட்டி மோதிக் கொண்டிருப்பது போல் செய்யாது கௌரவமாக ஒதுங்கினார்.

மணியம்மையார் 25-07-1949இல் விடுதலைக்குக் கேட்டுக் கட்டப்பட்ட பிணையத் தொகையைத் திருப்பித் தர மனு ஒன்று அளித்தார். அம்மையார் அளித்த மனுவை நீதிபதிகள் ராஜமன்னார், சத்தியநாராயணராவ் திரு விசுவநாத சாஸ்திரி ஆகிய மூவர் கொண்ட அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. விடுதலையில் வெளியான கட்டுரைகள் இந்திய நாட்டு மக்களின் பல்வேறு பிரிவினர்களிடையே பகையையும் வெறுப்பையும் வளர்க்கிறது என்று கூறியதுடன் பிணையத் தொகையைப் பறிமுதல் செய்தனர்.

**வகுப்புவாரி உரிமை**

1950இல் வகுப்புவாரி உரிமைக்குப் பெரியார் குரல் கொடுத்தார். 1926இல் வகுப்புரிமைச் சிற்பி முத்தையா முதலியார் வெளியிட்ட வகுப்புவாரி உரிமையைத் தொடர்ந்து பிரகாசம் அரசுக்குப் பின் வந்த ஓ.பி. இராமசாமியார், தாடியில்லாப் பெரியார் முதலமைச்சராக வந்தார். அவருடைய அரசு சிறிது மாறுதல் செய்து வகுப்புரிமை ஆணை வெளியிட்டது.

1950இல் இந்திய அரசியல் சட்டம் வெளியானதைத் தொடர்ந்து வகுப்புரிமை ஆணை செல்லாது என வழக்கு ஒன்று உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் மனுதாரர்களின் சார்பில் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் தோன்றி வாதிட்டார். சென்னை உயர்நீதிமன்றம் வகுப்புவாரி உரிமை ஆணை இந்திய அரசியல் சட்டத்திற்கு முரண் என்று தீர்ப்பு வழங்கியது. உச்சநீதி மன்றமும் அந்தத் தீர்ப்பை ஏற்றது.

பிற்படுத்தப் பெற்ற மக்களின் 22 ஆண்டுக்கால உரிமை புதிய அரசியல் சட்டத்தினால் பறிக்கப்படுவதைச் சமூக நீதிக் காவலர் அய்யா பெரியாரால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க இயலவில்லை. எனவே வகுப்பு வாரி உரிமைக்காகப் போராட்டம் மேற்கொண்ட போது வகுப்புரிமைச் சிற்பி முத்தையா முதலியார் பெரியாருக்குத் துணை நின்றார். காமராசர் நேருவிடம் தமிழ் மக்களின் உணர்வினை எடுத்துக்கூறியதன் விளைவாக அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் தில்லி நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

திருமண ஏற்பாட்டிற்குப் பின் பெரியார் உடல்நிலை 1950இல் பாதிப்பிற்குள்ளாகியது. இதுவரை மூன்று நான்கு மணி நேரம் கூடச் சொற்பொழிவாற்றி வந்த பெரியார் 1950 அக்டோபர் 21இல் நாற்காலியில் அமர்ந்தவண்ணம் முழுச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அது முதல் இறுதி வரை பெரியார் சொற்பொழிவினை எங்கும் நின்றுகொண்டு நிகழ்த்தவில்லை.

இறுதிக் காலத்தில் இறங்கி ஏறி மேடைக்குச் சென்று சொற்பொழிவாற்றுவதையும் தவிர்த்து வேனில் அமர்ந்தவாறு மேடை போய் வேன் அமைக்கப்பெற்று அய்யா சொற்பொழிவு ஆற்றினார். கடைசியாகத் தியாகராய நகர் பொதுக் கூட்டத்தல் அவ்வாறு சொற்பொழிவாற்றும் காட்சியைப் புகைப்படம் வாயிலாகக் காணலாம்.

புகைப்படம்

இத்தகு உடல்நிலை கொண்ட பெரியாரை எவ்வாறு பொறுப்புடன் கவனிக்க வேண்டுமோ அவ்வளவு பொறுப்புடன் அன்னையார் கழகப் பிளவோ, புதிய கட்சியின் தோற்றமோ எதைக் குறித்தும் கவலை கொள்ளாது என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதுபோல் கருதி மேற்கொண்ட காலப்பகுதிதான் மணியம்மையார், ஈ.வெ.ரா. மணியம்மையார் என்று ஆன காலப்பகுதி.

மணியம்மையார் ஈ.வெ.ரா. மணியம்மையார் என்று பெயர் மாற்றம் பெற்றாரே தவிர வேறு எந்த மாற்றமும் அவரிடம் ஏற்படவில்லை. அவர் மணியம்மையாராக இருக்கையில் என்னென்ன பொறுப்புகளைச் சுமந்தாரோ, என்னென்ன கடமைகளைச் செய்தாரோ அதே பொறுப்புக்கள் அதே கடமைகளையே பின்னரும் நிறைவேற்றி வந்தார்.

மணியம்மையாரின் கழுத்தில் பெரியார் எப்பொழுதோ வழங்கிய வெள்ளிச் சங்கிலி தவிர ஒரு பொட்டுத் தங்கமும் கிடையாது. அய்யா கையிலாவது ஒரு மோதிரம் இருக்கும். அதுவும் அம்மா கையில் கிடையாது. அதே கருப்புச் சேலை. அதுவும் நூற்றுக்கணக்கில் அல்ல. ஒன்றிரண்டு இதுதான் அம்மாவின் சொத்து.

அம்மா என அரசியல் இயக்கங்களில் வலம் வருவோர் கொண்டிருப்பதுபோல் வகை வகையான உடைகளோ, நூற்றுக் கணக்கில் செருப்புகளோ, பட்டுச்சேலைகளோ கிடையாது. அதிகமாகப் போனால் ஐந்து சேலைகள் இருந்திருக்கும் என்று விவரம் அறிந்தவர்கள் கூறுகையில் இப்படி அய்யா வழியில் சிக்கனமாக ஆடம்பரம் வெறுத்துக் கொள்கைப் பிரச்சாரத்தை மேற்கொண்ட அம்மாவின் வாழ்வில் திருமண ஏற்பாடு எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. எளிமையின் சின்னம் என்றால் மணியம்மையாரைத்தான் சுட்டிக் காட்ட வேண்டும்.

## வடவர் ஆதிக்க எதிர்ப்பு

1950களில் தென்னகம் புறக்கணிக்கப் பெற்றது. தமிழ்நாட்டுக்கு வடநாட்டு ஆளுநர் நியமிக்கப் பெறத் தொடங்கினர். வடநாட்டார் ஆதிக்கம் என்பது பொருளாதாரச் சுரண்டலும் தான். விடுதலை பெற்ற தென்னகம் வடநாட்டார் ஆதிக்கத்திற்கு உட்பட்டது என்பது உண்மையே.

ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்டுத் தொழில்களில் முதலீடு செய்து வெள்ளையர் நம் செல்வங்களைக் கொள்ளை கொண்டு சென்றதாலேயே ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்தோம்.

விடுதலை பெற்ற பிறகு வெள்ளையர் சென்றனர். வடவர் ஆதிக்கம் ஏற்பட்டது. பெரியாரின் பொருளாதாரச் சிந்தனையின் வெளிப்பாடுகள் 'ஏக இந்தியா' என்று பேசி ஏமாறிக் கொண்டிருந்த காலம் அது. எனவே வடவர் ஆதிக்க எதிர்ப்பாக இரயில் நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தைப் பெரியார் தொடங்கினார்.

இப்போராட்டம் ஒன்றல்ல இரண்டல்ல 151 நாட்கள் நடைபெற்று 556 பேர் கைதாயினர். 1-4-1951இல் அப்போராட்டம் நிறுத்தப் பெற்றது. இந்தி எழுத்துக்களை அழித்ததன் பயனாய் இரயில் நிலையங்களில் விளம்பரப் பலகைகளில் முதலில் இடம்பெற்ற இந்தி கீழே இறங்கியது. தமிழ், ஆங்கிலம், இந்தி என்று இடம்பெற்ற மாற்றம் ஏற்பட்டது எனில் அதற்குப் பெரியார் வகுத்தளித்த போராட்டம் காரணமாயிற்று. கையில் தார்ச்சட்டியை ஏந்தி இந்தி எழுத்துக்களை மட்டுமல்லாமல் இந்தி பேசும் வடவர் ஆதிக்கம் பற்றிய விழிப்புணர்ச்சியையும் பெரியார் உருவாக்க அய்யாவின் உறுதுணையாய் அம்மா நின்றார்.

**ஆயுட்கால உறுப்பினர்**

1944இல் சுயமரியாதை இயக்கமான திராவிடர் கழகமாகப் பெரியார் நீதிக்கட்சித் தலைவரான பிறகு பெயர் மாற்றம் பெற்றது. 1944இல் திராவிடக் கழகமாக மாறிய உடனேயே பெரியார் இயக்கத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று எண்ணினார். ஆனால் டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன், வி.பி. இராமசாமி, கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் சுயமரியாதைச் சங்கம் என்னும் பெயரில் பெயர்ப்பதிவு செய்து விட்டனர்.

அதேபோல் திராவிடர் கழகமாக மாற்றியதை விரும்பாத நீதிக் கட்சியினர் தமிழவேள் பி.டி. இராசன் தலைமையில் நீதிக்கட்சியை மீண்டும் உருவாக்கி, இரண்டாவது நீதிக்கட்சிச் சட்ட விதிமுறைகளை உருவாக்கிய பெயரைப் பதிவு செய்தனர்.

1949இல் அதன்பின் தி.மு.க. பிரிந்து சென்றுவிட்டது. அந்தச் சூழ்நிலையில் ஏதும் செய்ய இயலாத நிலைமை இருந்தது.

எனவே தாம் நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்த இயக்கப் பதிவு என்னும் நோக்கத்தினை 1952இல் தான் பெரியாரால் நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. 22-02-1952இல் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் (Periyar Self-Respect Propaganda Institution) என்னும் பெயரில் பதிவு செய்தார். இதன் ஆயுட்கால உறுப்பினர்களின் பெயரில் மணியம்மையாரும் இடம்

பெற்றார். இதில் வேறு பலரையும் உறுப்பினர்களாகப் பெரியார் சேர்த்தார்.

**பெரியாரும் இராஜாஜியும்**

பெரியார் திருமண ஏற்பாட்டிற்கு இராஜாஜியைக் கலந்து பேசினார் எனில் இருவருக்குமிடையே நிலவிய ஆழமான நட்பின் பொருட்டுத்தான். ஆனால் கொள்கை என்று வருகிறபோது பெரியாரும் சரி, இராஜாஜியும் சரி இருவருமே ஒரு சிறிதும் விட்டுக் கொடுத்ததில்லை.

இராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பு ஏற்றபோது கொண்டு வந்த கல்வித் திட்டம் பெரியாரால் குலக்கல்வித் திட்டம் என்று பெயரிடப் பெற்றுக் கடுமையான எதிர்ப்புக்கு ஆளாயிற்று.

ஆயினும் 1953இல் சென்னையில் நடைபெற்ற நபிகள் நாயகம் விழாவில் பெரியாரும் இராஜாஜியும் அருகருகே அமர்ந்து கலந்து கொண்டு பேசினர். 21-12-53ஆம் நாள் காலை பெரியாருடைய இல்லத்திற்கு இராஜாஜி வந்து பெரியாரின் உடல்நலம் குறித்து விசாரித்தார். அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஒரு பெரும் தலைவர் உடல் நலமுற்று இருக்கையில் சென்று காணக்கூடிய பண்பாடு இராஜாஜிக்கு இருந்தது.

**அம்மா நிறைவேற்றிய சமூகக்கடமை**

அய்யாவுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அவருக்குத் தொண்டு செய்த அன்னையார் 26-01-1953 முதல் இரண்டு வாரக் காலம் வயிற்று வலியால் அவதிப்பட்ட வேளையில் அய்யா தனியே தன் பயணம் மேற்கொண்டார்.

அம்மாவின் வாழ்வில் கழகத் தலைவர்கள், அய்யாவின் நண்பர்கள், அய்யாவுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் மறைவு, அவர்கள் இல்லத் திருமணம் ஆகிய சமூகக் கடமைகளை அம்மா அய்யாவுடன் சேர்ந்து நிறைவேற்றி வந்துள்ளார்.

22.2.53இல் பட்டிவீரன்பட்டியில் டபிள்யூ.பி.ஏ. சவுந்திர பாண்டியனார் மறைந்தபோது நேரில் செல்ல இயலா நிலையில் அய்யாவும், அம்மாவும் கையெழுத்திட்டு அனுதாபத் தந்தி அனுப்பினர். அய்யாவும் அம்மாவும் உடல்நலிவுற்ற வேளை அது. 21-11-53 முதல் 28-11-53 வரை அய்யா ஈரல் கெடுதல், சிறுநீரகக் கோளாறு சிகிச்சை பெற்று ஈரோட்டுக்குச் சென்று ஓய்வு பெற்று வந்தபோது அம்மாவின் அன்பான கவனிப்பு அய்யாவிற்கு இருந்தது வழக்கம்போல.

## வெளிநாட்டுப் பயணம்

அம்மாவின் முதல் வெளிநாட்டுப் பயணம் 1954இல் அய்யாவுடன் அமைந்தது. 23-11-54இல் சென்னையிலிருந்து எஸ்.எஸ். ஜெயகோபால் கப்பலில் பர்மாவில் நடைபெற்ற பௌத்த மாநாட்டில் பெரியாரும் மணியம்மையார், ஆனைமலை ராமகிருஷ்ணர், ஆனைமலை ஏ.எஸ். நரசிம்மன், க. ராசாராம் ஆகியோர் கலந்து கொள்ளச் சென்றனர். 17.01.55இல் பயணம் முடிந்து சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

1957இல் இந்தியாவிலே வரலாற்றில் குறிப்பிடத்தகு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பெரியார் குற்றம் சாட்டப் பெற்றார். திருச்சி மாவட்டக் கள்ளர் வகுப்பில் பிறந்த மாவட்ட ஆட்சியர் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து நில உடைமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தபோது உயர்நீதி மன்றப் பார்ப்பன நீதிபதிகள் இருவர் அவ்வழக்கில் தமிழர் மலையப்பன் எனும் அந்த ஆட்சியாளரைத் தாக்கு தாக்கென்று தாக்கி அவரை வீட்டுக்கு அனுப்பிட வேண்டுமென்றனர். பெரியார் பார்ப்பன நீதிபதிகள் முறைமீறிச் செயல்பட்டுள்ளதாக உணர்ந்தார். இந்த வழக்கில் விடுதலை ஆசிரியரான அன்னை மணியம்மையார் மீதும் அரசு வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கு விசாரணை 9-4-1957இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பி.வி. இராஜமன்னார், ஏ.எஸ். பஞ்சாபகேசன் முன் வந்தபோது பெரியார் எதிர்வழக்காட விருப்பமில்லை என்று அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி பெற்றுத் தம் கருத்துகளை நீண்ட அறிக்கையாக அளித்தார். இது நீதி கெட்டது யாராலே எனும் சிறு நூலாக வெளிவந்துள்ளது.

முதல் எதிரியாகச் சேர்க்கப்பெற்றவர் பெரியார். இரண்டாவது எதிரியாகச் சேர்க்கப்பட்டவர் மணியம்மையார். எனவே அரசு வழக்கறிஞர் முதல் எதிரி மனுதாரரின் பேச்சு இரண்டாவது எதிரி மனுதாரர் வெளியிட்ட அந்தக் கட்டுரையும் மூத்த உயர்நீதிமன்றத்தின் கௌரவத்தைக் குறைப்பதற்கான நோக்கத்துடன் இருப்பதாகவும் இந்தக் கோர்ட்டின் நிருவாகத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன் இருப்பதாகவும் உள்ளது. ஆகவே இது கோர்ட்டை அவமதிப்பதாகும் என்று கூறினார்.

1957ஆம் ஆண்டு ஏப்ரல் இரண்டாம் நாள் பெரியார் மணியம்மையாருடன் சிறை செல்லப் படுக்கையுடன் நீதிமன்றம்

சென்றார். பெரியாருக்கு அவருடைய வயதைக் கருதி நீதிபதிகள் 100 ரூபாய் அபராதம் விதித்தனர். மணியம்மையாரை நீதிபதி எச்சரித்து விடுவித்தார். நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கப் பொது மக்களுக்கு உரிமையுள்ளது எனும் கருத்தும் தீர்ப்பில் இடம்பெற்றது.

## சாதி ஒழிப்புக் கிளர்ச்சியில் அம்மா

திருச்சியில் கூடிய மைய செயற்குழுவினில் சாதி ஒழிப்புக் கிளர்ச்சியின் ஒரு கூறாக 5.5.57 முதல் பார்ப்பனர் உணவு விடுதிகளில் முன்புறம் பலகைகளில் உள்ள 'பிராமணாள்' எனும் எழுத்துக்களை அழிப்பதாக முடிவெடுக்கப்பட்டு அக்கிளர்ச்சியின் முன்னோட்டமாகப் பெரியார் அவர்கள் சென்னை ஆளுநருக்கும் 27-04-57இல் கடிதம் ஒன்று எழுதினார்.

உணவு விடுதிகள் பல பிராமணாள் எனும் பெயரை அழித்துச் சைவ உணவு விடுதி, சைவ ஓட்டல் என இடம்பெறச் செய்தன. ஆனால் பைக்கிராப்ட்ஸ் சாலையில் முரளீஸ் கபே எனும் உணவு விடுதி உரிமையாளர்கள் பிராமணாள் பெயரை எடுக்க மறுத்தனர். எனவே பிராமணாள் எனும் எழுத்துகளை எடுக்கும் வரை மறியல் செய்யப் பெரியார் ஆணையிட்டார்.

அய்யாவின் கட்டளைக்கேற்ப 8-5-57இல் அன்னை மணியம்மையார், விசாலாட்சி அம்மையார், சுப்பிரமணியம் ஆகியோர் உணவு விடுதி முன் மறியல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி மறியல் செய்தவர்களுக்கு மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை விதித்தார். சென்னைச் சிறைச்சாலையில் பெண்களுக்கு என்று ஒதுக்குப்புறமாக இருந்த அறையில் அம்மா அடைக்கப்பட்டார். 2-1957ஆம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சியில் அதுவரை தண்டனை பெற்றோர் 837 பேர்.

பெரியார் சாதி ஒழிப்பிற்காக அரசியல் சட்டத்தைக் கொளுத்துவோம் என்று கூறி 25-11-57இல் திருச்சியில் கைதானார். திருச்சியில் கைதான பெரியார்மீது ஆறு செக்ஷன்களின்கீழ் வழக்குத் தொடர்ந்து தனித்தனியே ஆறுமாதத் தண்டனை வழங்கினர். இவ்வழக்குடன் மற்ற இரு வழக்குகளுக்கும் சேர்த்து ஆறுமாதத் தண்டனை விதித்தனர்.

## மீண்டும் அன்னையார் சிறைக்கு

19-01-1958 நாளிட்ட விடுதலையில் வெளியான 'இளந்தமிழா புறப்படு போருக்கு' என்ற கட்டுரையின் பேரில் அதனை வெளியிட்டதற்காகத் தமிழக அரசு (காமராசர் அரசு) விடுதலை ஆசிரியரான அன்னை மணியம்மையார்மீது 1533, இந்தியக் குற்றவியல்

சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்தது. நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், அமைச்சர் பக்தவத்சலம், முதலமைச்சர் காமராசர் நடவடிக்கைக் கோப்பில் வழக்குத் தொடரக் கையொப்பமிட்டனர்.

எனவே கட்டுரை எழுதிய சி.என். நடராசன் எனும் சி.என். நெடுமாறன், மணியம்மையார் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது. குற்றம் சாட்டப்பெற்றவர்கள் சார்பில் டாக்டர் மு.வ., புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோர் சாட்சியங்களாகச் சாட்சி சொன்ன வழக்கு இது. 18-06-58ஆம் நாள் 100 ரூபாய் அபராதமும் கட்டத்தவறினால் ஒரு மாதச் சிறை தண்டனையும் அம்மாவிற்கு விதிக்கப்பட்டது.

மணியம்மையாரைச் சிறைக்கு அனுப்பியும் நிறைவடையாத காங்கிரசு அரசு 100 ரூபாய் அபராதத் தொகைக்காக மணியம்மை யாருக்குச் சொந்தமான 4000 ரூபாய் மதிப்புடைய எம்.எஸ்.சி. 5880 எண்ணுள்ள காரை 30.8.58 அன்று பறிமுதல் செய்து கட்டி இழுத்துச் சென்றனர். இதற்கு மாறுபாடாகத் தண்டனைக் காலத்தில் 15 நாள் மீதமிருக்கையில் காரணமின்றி மணியம்மையாரை 1-9-1958இல் அரசு விடுதலை செய்தது.

## அம்மாவின் அறிக்கை

1958இல் அம்மா (03-06-1958)இல் அய்யா சிறை செல்லுமுன் வெளியிட்ட அறிக்கை வாயிலாக எந்த அளவுக்கு அவர் அய்யாவைப் பேணிக் காத்தார் என்பதற்குச் சான்றாக விளங்குகிறது.

* **அழைப்பைக் குறைத்தால் பெரியார் அவர்களைப் பத்திரிகைகளுக்கும் நூல்களுக்கும் ஏதாவது எழுதிக் கொடுக்கும்படி செய்யலாம்.**
* **மாநாடுகளை மாதத்திற்கு ஒன்று நடத்தினாலே போதுமானது. அதுவும் அனுமதி பெற்று நடத்துவது பயன்படத்தக்கது.**
* **பெரியாருக்கு ஒரு வேளை உணவுதான். இரண்டு வேளை பால், இப்படித்தான் பழக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.**
* **கூப்பிட்டால் வந்துவிடுவார். கொடுத்தால் சாப்பிட்டு விடுவார். இது இரண்டிலும் அவர் குழந்தையே ஆவார்.**

இந்த அறிக்கை அவர் தொடர்ந்து பெரியாரின் நலனில் எந்த அளவிற்குக் கவனம் செலுத்தினார் என்று காட்டும்.

## அம்மாவிற்குப் பாராட்டு

சிறை மீண்ட அம்மாவிற்குத் தமிழகமெங்கும் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. பாராட்டுடன் மகிழ்ந்திடவில்லை.

> நான் அய்யா அவர்களின் கட்டளைக்கிணங்காமல் சாதாரண முறையில் தொண்டு செய்கிறேனே ஒழிய வேறில்லை.

என 8-10-58ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையில் அடக்கத்துடன் தெரிவித்துக் கொண்டார்.

அவர் சிறையிலிருந்தபோது அய்யா இல்லாத வேளையில் அம்மா அடக்கத்துடன் ஆர்ப்பரிப்பு இல்லாமல் பணியாற்றியதுடன் தேவைப்பட்ட போதுதான் தாம் அமைதிப்புறா அல்ல, அடக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் ஆற்றலும் உள்ளவர் என்று மெய்ப்பித்தார்.

இவ்வாறு இயக்கப் பணிகளில் ஈடுபட்டபோதும் அய்யாவைக் காப்பது என்ற கடமையுணர்வை எப்போதும் கைவிட்டுவிடுவதல்லை.

பெரியார் உடல்நலனுக்கு எந்தெந்த நடவடிக்கை உகந்தது என்பதை அனுபவத்தில் உணர்ந்து அறிக்கை வாயிலாக வெளியிட்டார்.

* **ஊருக்கு எவ்வளவு தூரத்தில் டிராவலர்ஸ் பங்களா இருந்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல் பெரியார் தங்குவதற்கும் முசாபரி பங்களா ஏற்பாடு செய்யவேண்டும். பங்களா உண்மையிலேயே இல்லாமல் இருக்குமானால் தனியே வீட்டையே ஏற்பாடு செய்ய வேண்டும்.**

* **எந்தக் காரணம் கொண்டும் விருந்துக்கு அழைக்கக் கூடாது. விருந்து செய்யவும் கூடாது. கண்டிப்பாக வரவேற்பு ஏற்பாடுகளும் செய்யக்கூடாது. அவசியம் செய்யவேண்டும் என்று விரும்பினால் பொதுக்கூட்டம் நடத்திடும் இடத்தில் வரவேற்பு அளிக்க வேண்டும்.**

போன்ற கண்டிப்பான விதிமுறைகள் வெளியிட்டார்.

**சீறி எழுந்த பெண் சிங்கம்**

தலைவர் சிறைப்பட்டபோது அய்யாவின் பொறுப்புகளைக் கச்சிதமாக மேற்கொண்டு நிறைவேற்றிப் பெருமை சேர்த்தார்.

அன்னையார் அமைதிப்புறாதான். ஆனால் செயல்புரிய வேண்டிய வேளை வந்தபோது சீறிப்பாயும் சிங்கமாக மாறத் தவறவில்லை.

மார்ச் 8ஆம் நாள் சாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டுத் திருச்சி சிறையில் அடைக்கப்பெற்றிருந்த தோழர்கள் பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி ஆகிய இரண்டு

தியாகசீலர்கள் சிறைக் காவலர்கள் எனும் மனிதநேயமற்ற கொடியவர்களால் சிறைக்கொடுமைக்கு ஆளாகி மாண்டனர்.

அவர்களில் வெள்ளைச்சாமியின் சடலத்தை வெளியே தருவதற்கு இசைந்த சிறையதியாரிகள் இராமசாமியின் சடலத்தை ஒப்படைக்க மறுத்துச் சிறையிலேயே புதைத்தும் விட்டனர். சென்னையிலிருந்து திருச்சி சென்ற அம்மா அவர்கள் சிறை அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டும் அவர்கள் விடாப்பிடியாக மறுத்தனர்.

சினம் கொண்ட வேங்கையென அம்மா இராமசாமியின் உடலைப் பெறாமல் விடுவதில்லை எனச் சூளுரைத்துத் திருச்சியிலிருந்து சென்னை வந்தார். அய்யா சிறையில் இருந்தவேளை அது. அப்போது தமிழக முதல்வர் காமராசர். காமராசரைச் சந்தித்து, உள்துறை அமைச்சர் பக்தவத்சலத்தைச் சந்தித்துச் சிறை அதிகாரிகளைச் சந்தித்து உடலைப் பெறத் தேவையான ஆணை பெற்றுவிடுவதற்குள் சிறை அலுவலர் இராமசாமியின் உடலைப் புதைத்துவிட்டனர்.

தக்க ஆணையோடு புதைத்த உடல்களைப் பெற்றுத் திருச்சி பெரியார் மாளிகையில் மக்கள் மரியாதை செலுத்தும்படி செய்து காவல் துறையினர் கொடுத்த நெருக்கடியைச் சட்டை செய்யாது காவலர்கள் தடுத்ததை மீறி ஊர்வலம் நடத்தினார்.

திருச்சி வரலாற்றில் அம்மா மேற்கொண்ட இந்த அறப்போர் அம்மா எப்படிப்பட்ட வீராங்கனை என்று காட்டும் அவருடைய உறுதியான செயல்திறனுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு நிகழ்ச்சி.

**அய்யா சிறைபட்டபோது மாநாடுகள்**

அய்யா அவர்கள் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை பெற்று உடல் நலம் குன்றி மருத்துவமனையில் இருந்தபோது கழகத்தின் கொள்கைப் பிரச்சாரம் தடையின்றி நடந்து வந்தது என்றால் மணியம்மையாரின் செயல்திறனே காரணம் எனலாம்.

10-05-1958இல் சாதி ஒழிப்பு மாநாட்டினைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடத்தினார். 11-05-1956இல் அம்மா ஏற்பாடு செய்த லால்குடி சாதி ஒழிப்பு மாநாட்டினை டாக்டர் மா. இராசமாணிக்கனார் தொடங்கி வைத்தார். கழகத்தவர் ஏராளமாகக் கலந்துகொண்ட விழாவில் மணியம்மையார் பங்கேற்றார்.

தஞ்சாவூர் பூதலூரில் 1-06-1958இல் சாதி ஒழிப்பு மாநாடு நடைபெற்றபோது அன்னையார் இம்மாநாட்டில் பங்கேற்றார்.

அய்யா விடுதலை ஆகிவருவதற்குள் புத்தூர் பெரியார் மாளிகையின் பழுதடைந்த பகுதிகளைச் சரிபார்த்துவிட்டு இவ்

விவரத்தைச் சென்னை மருத்துவமனையில் கைதியாக இருந்தபோது பெரியாருக்குத் தெரிவித்தபோது "அழகு என்றால் பணச்செலவு என்றே எனது அகராதியில் பொருள்" என்று அய்யா எழுதினார்.

## செல்லப்பிள்ளையின் திருமணம்

விடுதலை ஆசிரியர் கி. வீரமணிதான் அய்யா அம்மாவின் செல்லப்பிள்ளை. அவருக்கும் சிதம்பரம் ரங்கம்மாள், சிதம்பரம் அவர்களின் மகள் மோகனாவிற்கும் 07-12-1958 அன்று திருச்சியில் திருமணம் நடைபெறும் எனப் பெரியாரும் மணியம்மையாரும் கையொப்பமிட்டு அழைப்பு அனுப்பினர். பின் 09-12-1958 அன்று திருமணம் பதிவு செய்யப்பட்ட பின் பெரியாரும், மணியம்மையாரும் கடலூர் மணமகன் இல்லம், திருவண்ணாமலை மணமகள் இல்லம் சென்று பாராட்டிவிட்டுத் திரும்பினர்.

இந்தத் திருமணத்தில் இருவரும் காட்டிய ஈடுபாடு குறிப்பிடத் தக்கது. பெரியார் முன்னின்று நடத்திய அதாவது தாமே பொறுப்பு ஏற்று நடத்திய திருமணங்கள் என்று பார்த்தால் மிகச் சிலவே ஆகும். அதிலும் அம்மாவும், அய்யாவும் நடத்திய திருமணம், இருவர் கையொப்பமிட்டு மணமக்களை வாழ்த்த அமைந்த திருமணம் இது ஒன்றுதான்.

## 4000 மைல் சுற்றுப்பயணம்

01-02-59 அன்று பெரியார் கார் வாயிலாகச் சுமார் 4000 மைல் நீளச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது சுற்றுப்பயணத்தில் மணியம்மையார், ஆனைமலை நரசிம்மன், ஆனைமலை ராம கிருஷ்ணம்மாள், கி.வீரமணி, புலவர் கோ. இமயவரம்பன் ஆகியோரும் உடன் சென்றனர்.

செகந்திராபாத், ஜான்சி, ராகவுரி, ஜப்பல்பூர் வழியே கான்பூர், நாக்பூர்சென்று அங்கே பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினை குறித்து உரையாடிவிட்டுப் பின் இலட்சுமண்புரி பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவு ஆற்றினார். 12ஆம் நாள் டெல்லி சென்று, அங்கிருந்து பம்பாய் வந்து 28-02-59ஆம் நாள் சென்னை சேர்ந்தார்கள்.

பெரியார் மணியம்மையார் சுற்றுப் பயணத்தை வாழ்த்தி இலட்சம் பேருக்கு மேல் பங்கேற்ற ஒரு மாபெரும் ஊர்வலம் சென்னையில் நடைபெற்றுப் பின் மெரீனாவில் 2 இலட்சம் பேர் திரண்டுவந்து வாழ்த்திய பொதுக் கூட்டம் நடைபெற்றது.

## தாயாக மாறினார்

62ஆம் ஆண்டுக் காலத்தில் பெற்றோர் இல்லாத, கைவிடப் பட்ட குழந்தைகளை ஒரு தாயாகவே மாறி முழுப் பாசத்தோடு

வளர்த்தார். பெரியார் என்னும் ஒரு குழந்தை மட்டுமில்லை. நூற்றுக் கணக்கான குழந்தைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டிய அன்னை அவர்.

தன்னிடம் வந்து சேர்ந்த குழந்தைகளைக் காலில் போட்டுக் கொண்டு பாலாடையில் பால் எடுத்துப் புகட்டுவது, குளிப்பாட்டுவது ஆகியவற்றைத் தாமே தாய், தந்தை என்னும் உணர்வுடன் மேற்கொண்டார்.

மணியம்மையாருடன் பிறந்தவர்களில் ஒரு தம்பிக்குத் திருமணம் செய்தார். ஒரு தம்பி வேலூரில் இருந்துவிட்டார். மணியம்மையின் தங்கை பெங்களூரில் இருந்தவரை எப்போதாவது சென்று கண்டு வருவதோடு சரி. அவர்கள் எவரும் தன் கடமை, பொறுப்பு ஆகியவற்றில் குறுக்கிடவோ, ஆதிக்கம் செலுத்தவோ, சொந்தம் கொண்டாடிக் கொண்டு கட்சியில் புகுந்திடவோ அம்மா ஒருபோதும் அனுமதித்ததில்லை.

**சித்தப்பா**

வேலூரில் அவருடைய சித்தப்பா திருநாவுக்கரசு அவர்கள் இருந்து வந்தார்கள். ஆனாலும் அம்மா அவர்கள் எப்போதாவது வேலூருக்கு அய்யாவுடன் வந்தால், ஒரு மணி நேரம் பிறந்த இடம் சென்று உறவினர்களைச் சந்தித்துவிட்டுக் குசலம் விசாரித்ததோடு சரி.

சித்தப்பாவும் குத்தூசி குருசாமியோடு பிரிந்துசென்று விட்டார். எனவே அம்மா பெரியார்தான் தனக்கு எல்லாம் என இருந்துவிட்டார். எனவே 15-10-1962இல் அய்யா எழுதுகையில்,

> **மணியம்மையார் இயக்கத் தொண்டுக்கு என்று என்னிடம் வந்த இந்த 20 ஆண்டில் எனது வீட்டு வசதிக்கான பல காரியங்களுக்குத் தேவைக்கு உதவிசெய்ய வந்ததன் காரணமாக என் உடல்நிலை எப்படியோ என் தொண்டுக்குத் தடையில்லாமல் நல்ல அளவுக்கு உதவி வந்ததால் என் உடல் பாதுகாப்பு, வீட்டு நிர்வாகம் ஆகியவற்றில் எனக்குத் தொல்லை இல்லாமல் இருக்கும் வாய்ப்பை அடைந்தேன்**

என்று குறிப்பிட்டார்.

**பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி**

பெரியார் திருச்சியில் அரசுக்கல்லூரி நிறுவ 5 இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தார். திருச்சிராப்பள்ளி அரசுக் கலைக் கல்லூரி எனும் பெயரில் அரசின் விளம்பரம் வந்தது. பெரியார் கல்லூரி எனும் பெயரில் கல்லூரி இல்லையே என்ற குமுறல் கழகத்தவருக்கு இருந்தது.

அப்போது கல்லூரிக் கல்வி இயக்குநராக இருந்த என்.டி. சுந்தரவடிவேலு அவர்களைத் திரு. வீரமணி அவர்கள் சென்று சந்தித்த போது கடிதம் ஒன்று கொடுத்தால் அய்யாவின் பெயரை அக் கல்லூரிக்குச் சூட்ட அரசுக்குப் பரிந்துரைப்பதாகச் சொன்னார்.

அய்யாவிடம் சொன்னால் அவர் இதற்கு உடன்பட மாட்டார். எனவே பெரியார் சுயமரியாதை நிறுவன அறக்கட்டளையின் செயலாளர் எனும் அடிப்படையில் அம்மா அவர்கள் கடிதம் அளித்தார்.

கோப்பு முதல்வர் பக்தவத்சலம் அவர்களிடம் சென்றபோது **பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி** எனும் பெயரே பொருத்தமானது என்று ஆணை பிறப்பித்தார். திருச்சியில் இன்றும் அய்யாவின் பெயர் சொல்லும் கல்லூரி இருக்கிறது எனில் அதற்கு அம்மாவே காரணமாக விளங்கினார். பெரியார் திடலை அதிகவிலைக்கு ஆதித்தனார் கேட்டபோது விடுதலை அலுவலகத்திற்கு இது போல இடம் வேண்டுமென்று அம்மா அய்யாவுடன் வாதாடி அய்யா அதனை விற்றுவிடாமல் காத்தார். இதுபோலவே பெரியார் திடலில் கட்டடம் எழுப்பிய போது, கட்டட ஒப்பந்தக்காரர் வழக்கு மன்றம் சென்றதால் ஏற்பட்ட சிக்கலும் முடிவு காணப்பெற அம்மா துணையாக விளங்கி இருக்கிறார்.

### அன்னையாரின் தியாகம்

3-10-64இல் ஈரோட்டில் பேசிய பெரியார் தனது சொத்துக்களையெல்லாம் ஸ்தாபனத்திற்குக் கொடுத்துவிட்டதாகக் கூறினார். அதுபோலவே அன்னையாரும் தனக்கு என்று சொத்து ஏதும் வேண்டியதில்லை என்றே கருதினார். அதற்கான நடவடிக்கைகளைச் செய்தார்.

### 1967இல் தேர்தல்

1967இல் தேர்தல் நடைபெற்றபோது பெரியார் காங்கிரசை ஆதரித்தார். அண்ணாவின் தலைமையில் காங்கிரசைக் கூட்டணிக் கட்சிகள் எதிர்த்தன. தேர்தல் முடிவு பெரியார் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. திரு. காமராசர் படுத்துக்கொண்டே வெற்றி பெறுவார் என்று கூறியவர் தோற்றுவிட்டார். திரு. பக்தவத்சலமும் அவருடைய அமைச்சர்களில் பூவராகன் தவிர ஏனையோர் தோல்வியைத் தழுவினர்.

தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா, கலைஞர் ஆகியோர் திருச்சியில் சென்று அய்யாவைச் சந்தித்து வாழ்த்தும் பெற்றனர். அய்யவைச் சந்திக்க வந்த, அண்ணா, கலைஞர், நாவலர் ஆகியோரை அம்மா அவர்கள் மிகுந்த பற்றுடனும் பாசத்துடனும் 'நம்ப அண்ணா, நம்ப கலைஞர்' என்று கூறி வரவேற்றார்.

அய்யாவின் கோட்பாடுகளைக் கொள்கைகளை நிறைவேற்றி அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுத்து வரும் தி.மு.க. அரசு பாதுகாக்கப்பெற வேண்டும் எனப் பெரியார் அறிவித்தார்..

அண்ணா சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் எனச் சட்டம் நிறைவேற்றியபோது அய்யா பெரிதும் மகிழ்ச்சி யடைந்து அண்ணாவைப் பாராட்டினர். தி.மு.க. அரசு அதன் அமைச்சரவையையே பெரியாரின் காலில் சமர்ப்பித்து அய்யாவைப் பெருமைப்படுத்தியது.

மே தினத்தன்று வேலூரில் பொதுக்கூட்டத்தில் பேசிய பெரியார் காங்கிரசைவிடத் தி.மு.க. தோழர்கள் நமது தோழர்கள் அவர்களிடம் அன்புடன் பழகவேண்டும். "அந்தக் காலத்தில் தகராறு இருந்தது. இப்போது போச்சு என்றால் போனது தானே? பிறகு என்ன" என்று கேட்டு முடித்தார்.

## சிவசேனைக் கூட்டத்திற்கு எதிர்ப்பு

மும்பையில் 70களில் சிவசேனைத் திருக்கூட்டம் மண்ணின் மைந்தர் கோட்பாட்டைக் குறிவைத்து, மும்பையில் பிழைக்கச் சென்று அந்த மண்ணில் தங்கள் உழைப்பைச் சிந்திச் செல்வம் கொழிக்கும் மாநிலமாக்கியதில் நம் தமிழ் மக்களுக்கும் பெரும்பங்கு உண்டு. ஆனால் மராட்டியம் மராட்டியருக்கே என்று முழங்கித் தமிழர்களைப் பால் தாக்கரேயின் வன்முறைக் கூட்டம் அடாவடிக் கூட்டம் பயங்கரமாகத் தாக்கியபோது, மும்பைத் தமிழர்களின் பிரச்சினையைத் தம் சொந்தப் பிரச்சினையாக அய்யா கையில் எடுத்துக் கொண்டார்.

சிவசேனை எதிர்ப்பு மாநாடு நடத்திட ஆவன செய்து தம் பிறந்த நாளுக்கு முதல் நாள் நாள் குறித்தார். திருச்சி தேவர் மன்றத்தில் சிவசேனை எதிர்ப்பு மாநாடு நடை பெற்றது. அக்டோபர் முதல்நாள் கண்டனக் கூட்டம் ஊர்வலம் நடத்த முடிவு செய்து சிவசேனை எதிர்ப்புக் குழு உருவாக்கினார். அக் குழுவில் இடம்பெற்ற முதல் பெயர் அன்னை மணியம்மையாருடையது.

## 89வது பிறந்தநாள்

89வது பிறந்த நாளின் போது தனது உடல் நிலை பற்றிக் கூறிய பெரியார் "மணியம்மையார் கவனிப்பும் உதவியும் அளவிடற்கரியது. உங்கள் கடமையிலிருந்து தவறாதீர்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார். 17-9-67இல் திருச்சியில் பெரியார் பிறந்த நாள் விழா களை கட்டியது.

1967இல் கார் விபத்தில் சிக்குண்டு பலத்த காயத்துடன் சிகிச்சை பெற்று வந்த கலைஞரைச் சென்று கண்டனர். ஜாமீனில் வெளிவந்த எம்.ஆர்.ராதாவை அவரில்லம் சென்று பெரியாரும் மணியம்மையும் கண்டு வந்தனர்.

25-12-67இல் மலேசியா, சிங்கப்பூருக்குத் தன் மனைவி பிள்ளைகளுடன் விமான மூலம் பயணித்த திரு. வீரமணி அவர்களை விமான நிலையம் சென்று வாழ்த்தி அனுப்பினர். அம்மா இதுபோல் பல்வேறு காலங்களில் சமூகப் பொறுப்புடன் கடமையாற்றிய பெருமைக்குரியவராக விளங்கினார்.

**அண்ணாவைக் காணுதல்**

சென்னை மருத்துவமனையில் அண்ணா சேர்க்கப்பெற்ற செய்தி கிடைத்ததும் திருச்சியிலிருந்து விரைந்து வந்த பெரியாரும் மணியம்மையாரும் 7-9-68ஆம் நாள் காலை 11.30 மணியளவில் பொது மருத்துவமனை சென்று மருத்துவரிடம் தக்க வகையில் அண்ணாவைக் கவனித்துக் கொள்ள வேண்டி வந்தனர். தமிழகத்தின் சொத்து அண்ணா என்றார் பெரியார்.

அதன் பின் அண்ணா அமெரிக்காவில் சிகிச்சை பெறச் சென்றபோது விமான நிலையம் வரை சென்று வழி அனுப்பியவர் பெரியார். அமெரிக்காவிலிருந்து வந்த பின் அண்ணா, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது அடையாறில் திரு. கி. வீரமணி அவர்களின் வீட்டில் அண்ணாவைத் சென்று காணவேண்டுமென்பதற்காகத் தங்கிக் கொண்டு அண்ணாவைக் கண்டு உடல்நிலை குறித்து விசாரித்து வரத் தவறவில்லை.

**அண்ணா மறைந்தார்**

அண்ணாவின் மறைவு குறித்துக் குறிப்பிட்டது:

> **நடக்கக் கூடாதது நடந்து விட்டது. எதிர்காலம் இருட்டாக இருக்கிறது. நாலு கோடி மக்களையும் பொறுத்த பரிகாரம் செய்ய முடியாத துக்க சம்பவம்**

என்றார்.

**அம்மாவின் மும்பைப் பயணம்**

அய்யாவுடன் ஏற்கெனவே இரண்டுமுறை வடபுலப் பயணம் மேற்கொண்ட அன்னையார் மும்பைக்கு அய்யாவுடன் 28-10-70 பிற்பகல் 2.15 மணிக்கு வேனில் புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணம் அய்யாவின் அன்பிற்குரிய அறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழாவில் பங்கேற்பதற்காக மும்பைப் பயணம் சென்ற பெரியாருக்கு வழியெங்கும் வசந்த வரவேற்பு. மக்கள் வழியெல்லாம் கூடிநின்று 'அய்யா வாழ்க' 'அம்மா வாழ்க' 'அண்ணா வாழ்க' என்று முழக்கம் இட்டு வரவேற்பு அளித்தனர்.

**அம்மாவின் சினம்**

அம்மாவின் ஆத்திரத்தைத் தூண்டும் நிகழ்ச்சி ஒன்றைக் கயவர் கூட்டம் செய்தது. அய்யாவின் சிலைக்கு அவமரியாதை

செய்தனர். பெரியாரை அவமானப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு தங்களைத் தாங்களே அவமானப்படுத்திக் கொண்டனர். மல்லாந்து படுத்து வானத்தில் உமிழ்ந்து தங்கள் மார்பில் உமிழ்ந்து கொண்டனர். எதிலும் ஆத்திரப்படாத நன்றி உணர்வு கொள்ளாத சமூகத்தைப் பார்த்து அம்மா பெரிதும் வேதனைப்பட்டார். இச்செயலைக் கடுமையாகக் கண்டிக்க அம்மா தவறவில்லை.

### இராஜாஜி மறைவு

21.12.72இல் இராஜாஜி சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இராஜாஜியின் உடல்நிலை குறித்துக் கேள்வியுற்ற பெரியார் அப்போது திண்டுக்கல்லில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருந்தவர் திண்டுக்கல்லில் இருந்து நேரே பொது மருத்துவமனைக்கு மணியம்மையாருடன் சென்று இராஜாஜியைப் பார்த்து வந்தார். தம் 'ஆப்தநண்பர்' என்று இராஜாஜி பெரியாரை அழைத்து வந்தார் தம் நண்பரை விட்டுப் பிரியும் நிலைகுறித்துப் பெரிதும் வருந்தினார். ஆயிரம் கருத்து வேறுபாடுகளுக்கிடையே இருவரிடையே அந்த ஆழமான நட்பின் வெளிப்பாடு தெரிந்தது.

மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த பெரியார்

> **எவ்வளவோ கருத்து வேறுபாடு எங்களுக் கிடையேயிருந்தாலும் எங்கள் நட்பு ஆழமானது. ஒருவருக்கொருவர் மாறாத தன்மை கொண்டது**

என்றார். 25-12-72 மாலை 5.44க்கு இராஜாஜி மறைந்தார். 26-12-72இல் விடுதலையில் இராஜாஜி மறைவுக்கு இரங்கல் தெரிவித்துப் பெரியார் நீண்ட தலையங்கம் எழுதினார்.

### பெரியாரின் 93வது பிறந்தநாள்

1972இல் பெரியாரின் 93 வயது நிறைவடைந்தது. திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்து விடவும், உண்மை இதழைச் சென்னைக்குக் கொண்டுவந்து விடவும் தம் எண்ணத்தைத் தெரிவித்தார்.

> **சென்னைக்கு வருவதில் வேறுபல சங்கடங்கள் இருக்கின்றன. திருச்சியில் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. சிறார் பள்ளி ஒன்று இருக்கின்றது. அனாதைப் பிள்ளைகள் விடுதி ஒன்று இருக்கிறது. வரும் ஆண்டு முதல் உயர் நிலைப் பள்ளி ஒன்று ஏற்படுத்த அனுமதி பெற்று நடத்தப்படப் போகிறது. ஈரோட்டில் ஒன்று ஏற்படுத்த உத்தேசம். இவையெல்லாம் திருமதி மணியம்மையார் முயற்சியில்தான் நடைபெறுகின்றன. 10,12 ஏக்கர் தோட்டப்பண்ணை ஒன்று நடைபெறுகின்றது. பல**

> ஆயிரக்கணக்கில் வாடகை வரும் பல கட்டடங்களும் திருச்சியில் இருக்கின்றன. ஆகவே மணியம்மை அவர்கள் திருச்சியில் இருக்கவேண்டியிருக்கிறது.
>
> நான் சென்னைக்கு வந்தால் மணியம்மையார் என்னைத் தனியே இருக்கச் சமமதிக்க மாட்டார்கள். அவர்கள் சென்னைக்கு வந்து விட்டால் திருச்சி நடப்புகள் பாதிக்கப்படும்.
>
> இது ஒரு சங்கட நிலைமை என்றாலும் ஏதாவது செய்தாக வேண்டியிருக்கிறது

இவ்வாறு முடிவு காணவியலாமல் பெரியார் தவித்தார்.

1972இல் தளர்ந்துவரும் அய்யாவின் உடல்நிலை அம்மாவை மட்டுமல்லாது தமிழ்ச் சமுதாயத்தையே கவலை கொள்ளச்செய்தது. அய்யாவிற்கே தாம் அடுத்த பிறந்தநாளுக்கு இருக்கமாட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. 15.2.72இல் ஒரு முறை வாந்தியும் வயிற்றுப்போக்கும் ஏற்பட்டன. 22.2.72இல் சென்னை வந்தார். உடல்நலம் தேறியது.

இந்த நிலையிலும், கண்ணியம் மிக்க காயிதே மில்லத் மறைந்தபோது மணியம்மையாரை அழைத்துக் கொண்டு மருத்துவமனையில் சென்று கண்டு வந்தார். அவர் இறந்தபிறகு புதுக் கல்லூரியில் அவர் உடல் வைக்கப்பட்டிருந்தபோது மணியம்மையாருடன் சென்று இறுதி மரியாதை செலுத்தினார். 18.7.72இல் “என்னைப்பற்றி” என்று தன்னைக் குறித்து ஒரு சாசனம் வெளியிட்டார் பெரியார். இறுதியாக,

> ஏன் இவற்றையெல்லாம் சொல்லுகிறேன் என்றால் உங்களிடம் மன்னிப்புக் கேட்பதற்கு? ஏன் மன்னிப்பு என்றால் சுற்றுப் பிரயாணப் பிரச்சாரத்திலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு.

என்று எழுதியிருந்தார்.

> சென்னையிலோ திருச்சியிலோ வேறு தொல்லை யில்லா இடத்திலோ இருந்துகொண்டு, துண்டுப் பிரசாரம், வால் போஸ்டர் சில சித்திரப் புத்தகங்கள் பிரசுரித்துக் கொண்டு இருக்கலாம். அலைய வேண்டாம் என்று பார்க்கிறேன்.

இதுவும் பெரியாரின் அவா

5.2.72இல் திரு.கி.வீரமணி அவர்களின் மாமனார் பெரியாரின் மிகுந்த அன்பிற்குரிய அழ. சிதம்பரம் அவர்கள் மறைந்தபோது தருமபுரியிலிருந்து இறுதிச் சடங்கில் பங்கேற்கப் பெரியாரும்

மணியம்மையாரும் சென்னை வந்தனர். ஒரு பெரிய தலை முறையின் சின்னமாக விளங்கிய மணியம்மையார் அய்யாவுடன் வீரமணி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

## அய்யாவின் இறுதி நாட்கள்

அய்யாவின் கடைசிப் பொதுக் கூட்டம் சென்னை தியாகராயநகர் பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்றது. அன்று இரவு 2.30 மணிக்குக் குடலிறக்கநோய் அவரைப் பாடாய்ப்படுத்தியது. சென்னை மருத்துவமனையில் 7.30 மணிக்குச் சேர்க்கப்பட்டார்.

பெரியாருக்கு வேலூரில் சேர்க்கப்பட்டால் நலமாயிருக்கும் என மன அடிப்படையில் எண்ணம் ஏற்பட்டது. எனவே அங்கு அவரைச் சேர்த்தனர்.

21.12.73ஆம் நாள் வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டவர் 24.12.73ஆம் நாள் சி.எம்.சி. மருத்துவ மனையில் காலையில் 7.40 மணிக்கு மறைந்தார். 100 வயது வரை அய்யாவை எப்படியும் வாழ வைத்துவிட வேண்டும் என்னும் வைராக்கிய உணர்வுடன்தன் உடலை வருத்தி, இழிவுச் சொற்கள், பழிச் சொற்கள் கேட்டு, அய்யாவை மற்றவர்கள் போலவே தாமும் அய்யா என்றழைத்துப் போற்றிய இதுவரை எதற்கும் நிலை குலையாத அன்னையார் அய்யா மறைந்தபோது நிலைகுலைந்தார்.

அய்யாவின் உடல் சென்னையில் பெரியார் திடலில் வைக்கப் பெற்றது. உடலைப் பார்த்துப் பார்த்து அன்னையாய், தாதியாய்க் காத்து வந்த அம்மா கடைசியாகப் பார்த்த போது நினைவிழந்தார்.

"உங்கள் அடிமையை விட்டுப் போய் விட்டீர்களே" என்று அய்யாவின் காலைப் பற்றிக் கொண்டு கதறிய காட்சி கல் மனத்தையும் கரைய வைத்தது.

கூடியிருந்த நெஞ்சங்களை உலுக்கியது. இறந்தவர் கிழவர்தானே என்று எவரும் எண்ணவில்லை. ஏனென்றால் தொண்டு செய்த பழுத்த பழம், இன்னும் தொண்டு செய்ய இல்லையே, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட நமக்கு இனி இப்படி ஒரு தலைவர் கிடைப்பாரா என்று ஏங்கி அழுதது கூட்டம்.

பெரியார் மறைந்தார் ஒரு சகாப்தம் நிறைவுற்றது.

# 3. திராவிடர் கழகத்தலைவர் அன்னை மணியம்மையார்

பெரியார் என்னும் மேருமலை சாய்ந்தது. உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளர்வு என்பது இல்லாமல் தமிழ் மண்ணில் சுற்றிச் சுற்றி வந்த அந்த மாமனிதரை மண்ணில் புதைத்து விட்டோம். நல்ல வேளையாக அவருடைய கொள்கைகள்அவருடன் புதையுண்டு போகவில்லை. தனக்குப்பின் இயக்கம் தடையின்றித் தன் பணியைத் தொடரத் தக்க வழிமுறைகளைக் காட்டிவிட்டுத்தான் சென்றிருந்தார்.

மற்ற தலைவர்களின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு, அவர்களுடையகொள்கைகள் கோட்பாடுகளுக்கு மாறாக, அவர்கள் மறைந்தபிறகு 'அவர் இந்தப்பொருளில் தான் சொன்னார்' 'இப்படித்தான் சொன்னார்' என்று வியாக்கியானங்கள் கூறப்பட்டுக் கொள்கையை நீத்துப் போகச் செய்துவிடுவார்கள்.

ஆனால் பெரியாரைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அத்தகு வியாக்கியானங்களுக்கு இடம் கிடையாது. ஏனென்றால் அவர் சொன்னவை எதிலும் குழப்பம் கிடையாது. திரிபு செய்வதற்கு இடம் கிடையாது.

| | |
|---|---|
| **கடவுள் கொள்கையா?** | **கடவுள் இல்லை, இல்லவே இல்லைதான்.** |
| **சாதிக்கோட்பாடா?** | **சாதி ஒழிய வேண்டும்.** |
| **ஆலய வழிபாடா?** | **அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆதல் வேண்டும்.** |
| **பகுத்தறிவா?** | **அனைவரும் பகுத்தறிவு பெறவேண்டும்.** |
| **இராமாயணமா?** | **அது பொய் புனை சுருட்டு.** |

இதையும் மீறி எவராவது திரிபில் இறங்கினால் அய்யா இப்படித்தான் சொன்னார் என்று அய்யாவின் எழுத்தைப் பேச்சை எடுத்துக் காட்ட அம்மா இருந்தார். அய்யா மறைந்தபிறகு அம்மா இருக்கிறார் என்னும் ஆறுதல் ஏற்பட்டது.

அய்யாவின் மறைவிற்குப் பின் 'அவ்வளவுதான் திராவிடர் கழகம். அவரோடு முடிந்து விட்டது என்று சொல்லிய வீணர்கள் வாய் மூடும் வகையில் பெரியார் கண்ட இயக்கம் ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடிய இயக்கம். இது பட்டுப்

போகாது, கெட்டுப் போகாது, கார் உள்ளளவும், கடல் உள்ளளவும் இருக்கும் என்று காட்டும் வகையில் அம்மா புயலாய் எழுந்து வந்தார் புது வரலாறு பாட...

அய்யா மறைந்தபின் 27.12.73இல் எழுதப்பட்ட விடுதலை ஏட்டில் தலையங்கம் அய்யா மறைவிற்கு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கு முதலில் அன்பு வணக்கங்களைத் தெரிவிப்பதாக அமைந்தது.

> **அவர் விட்டுச் சென்ற பணியினை அவர் போட்டுத் தந்த பாதையிலே வழி நடத்தி முடிக்கிற வரையிலே மன அமைதி நமக்குக் கிடையாது.**
>
> **அந்தப் பணியினை ஆற்றிட அருமைத் தோழர்களே அணி வகுத்து நில்லுங்கள்!**
>
> **அய்யா அவர்களின் இலட்சியத்தை ஈடேற்றியே தீருவோம்! என்ற உறுதியினைச் சங்கல்பத்தினை இன்று எடுத்துக்கொள்வோம்**

என்று கூறிய அத்தலையங்க வரிகளில் அய்யாவிற்கு மருத்துவம் பார்த்த டாக்டர் கே.இராமச்சந்திரா, டாக்டர் பட், டாக்டர் ஜான்சன் ஆகியவர்களுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பிற அமைச்சர் பெருமக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் கழகத்தின் சார்பில் நன்றியை அம்மா அவர்கள் தெரிவித்தார்.

அடுத்து அய்யாவின் வழியில் உழைக்க அம்மா மேற்கொண்ட உறுதிமொழியாகும். அம்மா அவர்கள் திரும்பி வருகிறேன் என்னும் தலைப்பில் வழங்கிய மொழி அடுத்துக் குறிப்பிடத்தக்கது. அதில் தன் உள்ளக் கிடக்கையைக் கொட்டுகிறார்..

**கழகத் தலைவராக அம்மா**

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்கள் 'திராவிடர் கழக எதிர்கால ஆக்கப்பணிகள் குறித்துமுடிவு செய்ய 6.1.74 அன்று திராவிடர் கழக மாநிலப் பொதுநிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் என அறிவித்தார். ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக மாநிலப் பொது நிர்வாகக் கூட்டம், நடை பெறும் என அந்த அறிவிப்பு கூறியது.

6.1.1974இல் திருச்சி பெரியார் மாளிகையில் திராவிடர் கழகக் கூட்டம் கூடியது. இக் கூட்டத்தில் அன்னை மணியம்மையார் திராவிடர் கழகத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். திரு. கி. வீரமணி அவர்கள் தொடர்ந்து பொதுச் செயலாளராக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

**அய்யா அவர்கள் இதுவரை செய்து வந்த காரியங்கள், பிரச்சாரங்கள் இவற்றைச் சந்தேகத்திற்கு இடமின்றிச் செய்யக் காத்திருக்கிறேன்.**

**பெரியாராவது தேவலாம். அவர் தொண்டர்கள் நம்மை நிம்மதியாக வாழவிடமாட்டார்கள் போலிருக்கிறதே என்று எண்ணும்படி செய்ய வேண்டும்.**

**அவர்கள் பெருந் தலைவலியாயிருக்கிறார்கள் என்று கருதும்படி செய்ய வேண்டும்.**

**நம்மை ஒழிக்க முற்பட்டவர்கள் தோல்வி கண்டார்கள், நாம் வெற்றி கண்டோம் என்ற நிலை உருவாகும் வகையில் நம் காரியங்கள் அமைய வேண்டும்.**

**தலைமைப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்க் கழகத்தவருக்கு அளித்த அம்மாவின் உரையில் ஒரு பகுதி இது**

அம்மா அவர்களுக்கு மேடையில் பேசுகையிலும், அறிக்கைகள் அளிக்கையிலும், தாமே சுயமாகச் சிந்தித்து எழுதி வழங்குமளவிற்குத் தலைவிக்குரிய ஆற்றல் இருந்தது. அய்யாவுடனேயே நிழலாகத் தொடர்ந்ததன் பயனாக அம்மாவும் சுயசிந்தனையை அய்யா வாயிலாகப் பெற்றார்கள்.

பிறர் எழுதிக் கொடுத்தவற்றைப் பேசும், பிறருடைய அறிக்கையில் கையொப்பமிட்டுத் தலைவி எனும் தகுதி பெறவில்லை. இது ஒரு சிறப்பான இயல்பாக அம்மாவிடம் காண்கிறோம்.

கொள்கைப் பிடிப்புள்ள குடும்பத்தில் பிறந்து கொள்கைச் சூழலில் வளர்ந்து அய்யாவின் தொண்டராக அய்யாவின் அடிச் சுவட்டில் நடை போட்டதால் அய்யாவின் கொள்கைகள் இவை, கோட்பாடுகள் இவை, இதில் மாற்றங்களுக்கோ, திரிபுகளுக்கோ இடமில்லை. இடமளிக்கக் கூடாது என்னும் எண்ணம், உணர்வு அவரிடமிருந்தது.

அதனால் அய்யாவிற்குப்பின் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றபோது இயக்கத்தின் வயது முதிர்ந்த தோழர்களும் 'அம்மா' 'அன்னையார்' என்று அவரை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டவில்லை. சுயநலத்தினால் அம்மா என்று அழைக்கவில்லை. கொள்கைத் தெளிவால், வழிகாட்டுதலால் 'அம்மா' என ஏற்றனர்.

**96வது பிறந்த நாள்**

அய்யா பிறந்த நாளின்போது ஆண்டுதோறும் விடுதலை மலர் வெளியிட்டுச் சிறப்பிக்கும். '**எனது பிறந்த நாள் செய்தி**' என்று தலைப்பிட்டு அய்யா அவர்கள் ஆண்டுதோறும் எழுதுவது வழக்கம்.

95வது பிறந்தநாள் மலருக்குக் கட்டுரை எழுதுகையில் அய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

> என்னால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால் அடுத்த ஆண்டுமலர் எழுதப்பட வேண்டிய காலத்தில் நான் இருப்பேனா இல்லையோ என்கிற பிரச்சனை மாத்திரமல்லாமல் எழுதும்படியாக வாய்ப்பு இருக்குமோ இருக்காதோ என்பதே முக்கிய காரணமாகும்

என்று எழுதியதை 96வது பிறந்த நாளில் நினைவு கூர்ந்து கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

> **அருமைக் கழகத் தலைவர்கள் அனைவரும் நாம் நடத்த இருக்கும் ஜாதி ஒழிப்புப் போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு ஆதரவு அளிப்பதோடு மட்டுமல்லாமல் துன்பங்களை ஏற்கவும் கொடுமை களைத் தாங்கவும் துணிவு கொண்டவர்களாக அழைப்பு வந்தாலும் உடனடியாக வருவதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்து கொண்டு வீட்டில் பெண்டு பிள்ளைகளுக்கு ஏற்ற வகையில் வழி வகைகளைச் செய்துவிட்டு எவ்விதமான கவலை களையும் மனதில் கொள்ளாமல் தம் கொள்கை வெற்றியில் மட்டும் கண்ணோட்டமாய் பெட்டி படுக்கைகளுடன் வந்து விடவேண்டுமென்று விரும்புகிறேன்**

என்று அறிவித்தார்கள்.

அய்யா மறைந்த பின்னர்க் கலங்கி நிற்கின்ற கழகத்தவர் களுக்குத் தன் மனத்தின் ஆழத்தில் அய்யா இல்லாத சோகம் பிழிந்தெடுத்த போதிலும், தன் உடலில் முதுமையை எட்டிப் பார்க்கும் நோய்க் கூறுகள் தாக்கத்தினாலும், உழைத்து, உழைத்து ஓய்வில்லாமல் உழைத்துத் தோய்ந்து போன உடல் உள்ள நிலையிலும், அய்யா விட்டுச் சென்ற கடமைகளைப் பொறுப்புகளைத் திராவிட இயக்கத்திற்குச் செவ்வனே ஆற்ற வேண்டும் என்னும் மன உறுதி காணப்படுவதை அவருடைய அறிக்கைகளில் காண்கிறோம்.

1974 செப்டம்பரில் பெரியாரின் 96வது பிறந்த நாளில் விடுதலை மலருக்கு அம்மா எழுதிய கட்டுரை அவ்வகையில் குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது. அதில் அவர் செய்த ஏற்பாடு ஒன்று அய்யாவின் வாரிசாக இயக்கத்தை நடத்திச் செல்ல அம்மா தகுந்தவர் தான் என்று சுட்டியும் கூறுகிறது.

அய்யா அவர்கள் அம்மாவை 1949களில் தனது சொத்துக்களைத் தக்க வகையில் இயக்கத்திற்குப் பயன்படுத்தக் கூடிய வாரிசாகத்தான் நியமித்தார். இயக்கத்தைப் பிளவுபடுத்தி அண்ணா, பின்னாளில் குத்தூசி குருசாமி, தி.பொ. வேதாசலம் முதலானவர்கள் சென்ற பிறகுதான் அம்மாவை இயக்கத்தில் அய்யா முழுமையாக ஈடுபடுத்தினார் என்று தெரிகிறது.

96வது பிறந்தநாள் மலருக்கு எழுதும் கட்டுரையில் அம்மா இவ்வாறு கூறுவதிலிருந்து அது தெரிகிறது.

> சில சமயங்களில் சுவாச குணத்தில் எனக்கு வரும் பிடிவாதம் அர்த்தமற்ற கோபம் இவைகளால் ஏற்படுகிற தொல்லைகளை எல்லாம் அன்போடு சகித்து அனுசரித்து அரவணைத்து ஏற்றுக்கொண்டு தனது மனநிலைக்கு ஏற்றவாறு என்னையும் மாற்றி அமைத்துப் பக்குவ மனநிலையை அடையச் செய்தார்கள்

இவ்வாறு அய்யா செய்த பக்குவ, பரி பக்குவ நிலையின் வெளிப்பாட்டை அம்மாவிடம் காண்கையில் வியப்படைகிறோம். குறிப்பாகச் சொத்துக்கள் குறித்தவற்றில் காண்கிறோம். அய்யா அவர்களுக்கு என்று இருந்த சொந்தச் சொத்துக்களையும், மணியம்மையாருக்கு என்று விட்டுச் சென்ற சில தவிர்த்துத் தான் சேர்த்த சொத்துக்களையும் முழுமையாக இயக்கத்திற்கென்றே எழுதிவைத்துச் சென்ற அரும் பெரும் தலைவர் பெரியார்.

அவர் வழியில் இயக்கத் தலைமைப் பொறுப்பேற்ற அம்மா மட்டும் சுயநலமியாகிவிடுவாரா? சொந்தங்களுக்கு என்று சொத்துக்களை எழுதி வைத்து விடுவாரா? திராவிட இயக்க வரலாற்றில் இப்படிப்பட்ட தியாகப் பெண்மணியைக் கண்டு தலைவணங்குகிறோம்.

### பெரியார் மணியம்மை கல்வி அறக்கட்டளை

அம்மா எழுதுகிறார்

> அவர்களது காலத்திற்குப்பிறகு (அய்யா) எனக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்று கருதி எனக்குத் தெரியாமல் சில ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தது பல ஆண்டுகள் கழித்தே எனக்குத் தெரிய வந்தது.
>
> அந்த ஏற்பாட்டின்படி எனக்குத் தனிப்பட்ட வாழ்வுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட கிடைத்துள்ள சொத்துக்களையும் அதன் மூலம் வரும் வருமானங்களையும் வைத்து அய்யா அவர்கள் காட்டிய வழியிலேயே அய்யா அவர்களைப் போன்றே பொதுமக்களுக்கே உபயோகப்படும் தன்மையால் நான்

நல்ல வண்ணம் சிந்தித்து ஒரு ஏற்பாடு செய்வது என்ற திடமான முடிவுக்கு வந்து சென்ற 1974ஆம் ஆண்டு செப்டம்பர் 24ந் தேதி பெரியார் மணியம்மை கல்வி அறக்கட்டளை **(Periyar Maniyammai Educational Trust)** ஏற்படுத்தி தக்கவழி முறையாகச் சட்ட ரீதியாக அதற்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்து விட்டேன்.

## ஈரோட்டில் அய்யா நினைவு இல்லம்

ஈரோட்டில் இருந்த அய்யாவின் வீடு, அய்யாவின் மனைவி என்னும் உரிமையில் சட்டப்படி அம்மாவிற்குரியதாக இருந்தது. அம்மா அதனை என்றென்றும் அய்யாவின் வீடாக இருக்க வழிவகை செய்துவிட்டார். அதனை அய்யாவின் 96வது பிறந்த நாள் விழாவின் போது டாக்டர் கலைஞர் அவர்களிடம் ஈரோட்டில் பெரியார் நினைவு இல்லம் அமைக்க ஒப்படைப்பதாக அறிவித்து அவ்வாறே ஒப்படைத்தார்.

அய்யா அவர்களின் நினைவு இல்லமாகப் பெரியாரின் வாழ்ந்த வாழ்க்கை எதிர்காலத் தலைமுறைக்கு அய்யாவின் பணி, வாழ்வு தெளிவாக விளங்கும் வகையில் டாக்டர் கலைஞர் அதனைப் பெரியார் - அண்ணா நினைவு இல்லமாக அமைத்தார். பொதுமக்கள் பார்வைக்கு அய்யாவின் பிறந்த நாளின்போது அந்த இல்லம் திறந்து வைக்கப்பட்டது.

தனக்கு என்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் அய்யா வழியில் பெரியார்-மணியம்மையார் அறக்கட்டளைக்குச் சேர்த்துவிட்ட தியாக உள்ளம் கொண்ட அம்மாவின் திராவிட இயக்கத் தொண்டில் குறிப்பிடத்தக்க பாராட்டத்தக்க தொண்டு இது.

## இராவணலீலா

அய்யா அவர்கள் இராமன் பட எரிப்பு, இராமாயண எதிர்ப்பு, இராமாயணப் பாத்திரங்கள் குறித்த கருத்துரைகள் எழுதுதல் ஆகியவற்றையே செய்து வந்தார்.

இராமாயணக் கதை தமிழனை இழிவு படுத்துவது தவிர அதில் வேறு கருத்தில்லை. தமிழ்நாட்டில் இராமாயணத்தைவிட்டு வைத்திருப்பதானது மனித சுயமரியாதைக்கும், இன சுயமரியாதைக்கும் தமிழ்நாடு சுயமரியாதைக்கும் மிக மிகக் கேடும் இழிவானதாகும் என இராமாயணப் பாத்திரங்கள் என்னும் தம் நூலின் முன்னுரையில் பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

1956 ஜூலை 5 முதல் இராமன் படத்தைக் கொளுத்துவது என்று அறிவித்து 24-7-56 முதல் சுமார் 8000 பெரியார் அணியினர் இராமன் படத்தைக் கொளுத்தினர். இராமன் பட எரிப்பினால் பெரியார் கைது ஆகி விடுதலை ஆனார்.

30-10-74இல் மருத்துவமனையில் இருந்தவாறே அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டார் "தலைவர் அருமைத் தந்தையின் நினைவுநாளை மாபெரும் இனவெழுச்சிப் பெருவிழாவாக இராவண லீலா நடத்தி நாம் திட்டமிட்டபடி காரியங்களைச் செய்தே தீர வேண்டிய நிலையில் இருக்கிறேன்".

அம்மாவின் அடுத்த 28-11-74இல் வெளியான அறிக்கை அய்யா அவர்களின் நினைவுநாளான டிசம்பர் 24க்கு அடுத்த நாளான டிசம்பர் 25ஆம் நாளை இராவணலீலா நடக்கும் நாளாக அறிவித்தது. உ.பி.யிலிருந்து அகில இந்தியப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் அமைப்பின் நிறுவனர் அம்மா அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார்.

1973 டிசம்பர் 8,9 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டில் சாதியை ஒழிக்கப் போராட்டத் திட்டம் வகுத்தார் பெரியார். அதற்காக மேற்கொள்ளப் பட வேண்டிய பல திட்டங்களைத் தனது குறிப்பேட்டில் எழுதி வைத்திருந்தார். மரணத்தைச் சந்திப்பதற்குச் சரியாக 15 நாள் இருக்கு முன்பே கூட அய்யா அவர்களின் கையில் இருந்த எழுச்சி ஆயுதம் இராமனை எரிக்க வேண்டும் என்பதாகும்.

17-10-74இல் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கி.வீரமணி அவர்கள் இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் முடிவில் இந்தியஅரசு இராமலீலா விழாவிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தலைமை அமைச்சர், குடியரசுத் தலைவர் முதலானவர்கள் அதில் கலந்து கொள்ளக் கூடாது. மீறி நடந்தால் இராவண லீலா நடத்தப்படும் என்று குறிப்பிட்டார். இதற்குப் பதில் ஏதும் அவர்களிடமிருந்து இல்லை.

எனவே கழகத் தலைவர் அம்மா அவர்கள் தலைமை அமைச்சருக்கும், குடியரசுத் தலைவருக்கும் தந்தி அனுப்பினார். ஆனால் டெல்லியில் இராமலீலா நிகழ்ச்சியில் இராவணனோடு சேர்த்துக் கள்ளக் கடத்தல் மன்னர் உருவப் பொம்மைகளையும் வைத்துக் கொளுத்தினர். அம்மாவிற்குக் கடிதத்தில் இந்திரா தாம் எழுதிய இராம லீலா இனப்பிரச்சினை அல்ல என்று தலைமை அமைச்சர் எழுதினார்.

இந்த நிலையில்தான் மருத்துவமனையில் இருந்து அம்மாவின் வேண்டுகோள் வெளிவந்தது. முதல்நாள் பொதுச் செயலாளர்

கி. வீரமணி அவர்களையும், மற்றும் எழுவரையும் காவல் துறையினர் கைது செய்தனர்.

25-12-74 புதனன்று காலை 9.30 மணிக்கு இராவண லீலா நிகழ்ச்சி மிகவும் எழுச்சியுடன் தொடங்கியது. இரவு மணி ஏழினை நெருங்கிக் கொண்டிருந்தது. மிகவும் பரப்பரப்பான நேரம். இராமன், இலட்சுமணன், சீதை உருவப் பொம்மைகள் பெரியார் திடலின் நடுப் பகுதியில் நடப்பட்டன. அவற்றின் உயரங்கள் முறையே 18, 17, 16 அடிகள்.

அன்னையார் அவர்கள் களத்திற்கு வந்தார்கள். எங்கும் ஒரே ஆரவாரம். 'எழுச்சி' கிளர்ச்சி வேட்டுகள் முழங்கின. தந்தை பெரியார் வாழ்க 'இராவண லீலா' 'இராமர்ஒழிக' என்ற வண்ண மத்தாப்புகள் பளிச்சிட்டு எரிந்து அழகுக்கோலம் காட்டினர்.

ஆயிரம் ஆயிரம் தாய்மார்கள் தோழர்கள் ஆளுக்கொரு இராமன் சீதை இலட்சுமணன் படங்களைக் கையில் பிடித்துக் கொளுத்தினர். காவல்துறையினர் வந்து, கைது செய்கிறோம் என்றவுடன் அன்னையார் 'மிக்க மகிழ்ச்சி' என்றார்கள் 'அன்னையார் வாழ்க', 'அன்னையார் வாழ்க' முழக்கங்கள் குடியிருந்த கழகத்தவரிடையேயிருந்து எழுந்தன. அந்த எழுச்சியின் உச்சத்திலும் கழகத்தவர் கட்டுப்பாட்டைக் காப்பதில், பொது ஒழுக்கத்தைப் பேணுவதில் மிகவும் எச்சரிக்கையாயிருந்தனர்.

அன்னையார் அவர்களுடன் மேலும் பதின்மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். முதல் நாள் இரவு கைது செய்யப்பட்ட பொதுச்செயலாளர் அவர்களையும், உடன் கைதான எழுவரையும் விடுதலை செய்தனர். நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அன்னையாரையும், உடன் கைதானவர்களையும் சொந்த ஜாமீனில் நீதிமன்றம் விடுதலை செய்தது.

அன்னையார் அவர்கள் அய்யா வழியிலே நின்று ஆணைகளை முறைப்படுத்தினார்கள். அதற்குக் கிடைத்த அருமையான களம்தான் 'இராவண லீலா' ஆம் 'இராவணலீலா' திராவிடர் எழுச்சியை உறுதிப்படுத்தி விட்டது எனில் அதற்கு முதன்மைக் காரணியாக விளங்கியவர் அன்னை மணியம்மையார் அவர்கள்.

அய்யா, அவர்கள் மறைந்த பிறகு அன்னையார் அவர்கள் தலைமையில் திராவிடர் இயக்கம் சிறப்போடும், விழிப்போடும், கட்டுப்பாட்டோடும் தந்தையின் பணிகளைச் சிறப்பாக, வெற்றியாக முடித்திட வீறு கொண்டு எழுந்திருக்கிறது. வெற்றி நடைபோடுகிறது என்பதற்கு அன்னை மணியம்மையார் பெரியார் திடலில் நடத்திக்காட்டிய 25-12-74ஆம் நாள் இராவண லீலா நிகழ்ச்சிகள் மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக நிச்சயமாக விளங்குகின்றன.

அன்னையின் தலைமையில் இயக்க வரலாற்றில் இராவண லீலா ஓர் எழுச்சிக் காவியம். இன வரலாற்றில் ஒருபுதுத் திருப்பம் என்றே கூறலாம்.

## அய்யாவின் நினைவுநாள்

காலச் சக்கரம் மிகவேகமாகத் தான் சுழல்கிறது. 1973 டிசம்பரில் அய்யாவை இழந்து ஓர் ஆண்டு உருண்டோடி விட்டது அவருடைய நினைவுநாள் 24-12-74இல் வந்தது.

அந்நாளில் அமைதி ஊர்வலத்தில் கழகத்தலைவர் மணியம்மையார், கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்கள் உட்பட மாவட்டக் கழகத் தலைவர்களும், பதினாயிரக் கணக்கான கரும் சட்டைப் படையினரும் கலந்து கொண்டு ஒரு புதிய எழுச்சியை உருவாக்கினர்.

காரைக்குடியில் 13.3.75ஆம் நாள் பல்லாயிரக்கணக்கானவர் களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே கழகத் தலைவர் மணியம்மையார் தலைமையில் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்தார். இதுவே தந்தை பெரியாருக்கு எழுந்த முதல் சிலை. இதைத் திறந்து வைத்த பெருமைக்குரியவர் கலைஞர் அவர்கள். தலைமை வகித்த பெருமை அன்னையாருக்குரியது.

## கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்

வடநாட்டில் ஆலயங்களில் கருவறை சென்று வழிபாடு நிகழ்த்துகிறவர்கள் இறைவன் உருவச்சிலையைத் தொட்டு வணங்கலாம், பால், தயிர், இளநீர் முதலியவற்றைத் தாங்களே ஊற்றி வழிபடலாம். ஆனால் இங்கோ அர்ச்சகர்கள் மட்டுமே அதனைச் செய்ய முடியும். கருவறைக்குள் நுழையும் உரிமை அவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்து வருகிறது.

கடவுளே இல்லை என்பது பெரியாரின் கொள்கை என்ற போதிலும் கடவுள் பெயரால் நடத்தப்படும் இழிவு கண்டு பெரியார் பெரிதும் கவலை கொண்டார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்று வலியுறுத்தி எழுதியும் பேசியும் வந்தார்.

அய்யாவின் வழியில் அன்னையாரும் கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தப் பெறவேண்டும் என்றார். கலைஞர் தலைமையில் அமைந்த அரசு அன்னையின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் செய்ய ஆவன செய்வதாக உறுதி அளித்ததன் பேரில் போராட்டம் ஒத்திவைக்கப் பெற்றது. (2007இல் அதனைக் கலைஞர் அரசு நிறைவேற்றியது.)

## அன்னையார் தி.மு.க. ஆதரவு

1972இல் தி.மு.க. பொருளாளராக இருந்த எம்.ஜி.இராமச் சந்திரன் அவர்கள், தி.மு.காவிலிருந்து விலக்கப்பட்டார். அவர் அண்ணா தி.மு.க. எனும் கட்சியை உருவாக்கியபோது பெரியாரை அவர் வந்து சந்தித்தார். அப்போது பெரியார் அவரைப் பிரச்சினை களைப் பேசித் தீர்த்துக் கொள்ளும்படி கூறியதுடன், எம்.ஜி.ஆர். அவர்கள் மேற்கொண்ட செயலைத் 'துரோகம்' என்றே கூறி எழுதினார். எம்.ஜி.ஆர். அவர்களின் நடவடிக்கையை அ.தி.மு.க.வை அய்யா ஏற்கவில்லை.

அய்யா அவர்கள் மறைந்து அம்மா கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது அய்யா வழியிலேயே தி.மு.க.வையே ஆதரித்தார். தி.மு.க. அரசு காக்கப்பட வேண்டியது என்பதை வலியுறுத்தினார். அய்யாவிற்கு அரசு மரியாதை தெரிவித்து நல்லடக்கம் நடைபெறக் கலைஞர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டியதுடன் நன்றியும் தெரிவித்தார்.

1974இல் 'நினைவு, நினைவு, நினைவு' என்று எழுதினார். தி.மு.க. அரசு பெரியார் வழியில் நடைபோடுவதைக் குறிப்பிட்டு விட்டு

> **இதன் மூலம் எவ்வளவு பெரிய தொல்லைகளுக்கும் வெறுப்புக்கும் ஆளாக நேரிடுகிறது என்பதைத் தினம் தினம் பத்திரிகைவாயிலாக நாகரீகமற்ற முறையில் வருவதைப் பார்க்கின்றேன். அதனால்தான் நாம் இந்த அரசைக் கட்டிக்காக்க நம்மால் முடிந்த அளவு முழு மனதோடு இறங்கிச் செயல் படவேண்டும் என்று நமது தமிழ் மக்களைக் கழகத் தோழர்களையும் அன்போடு வேண்டுகிறோம்**

என்றார்

## பெரியார் நூலகம் - ஆய்வு மையம்

அய்யா அவர்களின் நினைவு அலைகள் என்றும் நிலைத்திடச் செய்ய அம்மா அவர்கள் மேற்கொண்ட அரிய தொண்டு தலையாய தொண்டு என்றால் பெரியார் நூலகம் ஆய்வு மையம் அமைந்ததைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

நூலகம் என்றால் நூல்களை மட்டும் சேகரித்து வைப்பது என்ற நிலை மாறி அய்யா அவர்கள் நடத்திய விடுதலை, குடியரசு, பகுத்தறிவு ஆகிய ஏடுகளைத் திரட்டியதோடு, பகுத்தறிவு இயக்க,

திராவிட இயக்க ஏடுகளான திராவிடன், திராவிடநாடு முதலான வற்றையும் திரட்டி அவற்றை அறிவியல் முறையில் பாதுகாத்து வைத்திருக்கிற பணி பாராட்டப் பெறவேண்டிய பணி.

அரிய பழைய ஏடுகள், நூல்கள் அடங்கிய ஆவணக் காப்பகமாகப் பெரியார் நூலக ஆய்வு மையம் விளங்குகிறது. உலகம் எங்கணும் இருந்து வரும் ஆராய்ச்சிப் பறவைகளின் கூடு அது. இத்தகைய அரும்பணி ஆற்றத்தேவையான நிதியைச் செலவைப் பாராது அம்மா மேற்கொண்ட பணியைத் தொடர்ந்து விடுதலை ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மேற்கொண்டிருப்பதும் அய்யா அம்மா அடிச்சுவட்டில்தான்.

**அம்மாவின் உயில்**

அய்யாவின் அடியொற்றி அம்மா அவர்கள் செய்த இந்த ஏற்பாடு திராவிடர் கழகம் தனக்குப் பின் தகுந்தவர் கையில் ஒப்படைக்கப் பெறவேண்டும், இயக்கத்தைச் செம்மையாகக் கொள்கை வழுவாமல் நடத்தக் கூடியவர் விடுதலை ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்தாம் என்று முழுமையாக உணர்ந்து, எவருடைய தூண்டுதலும் இன்றித் தாமே அதனைச் சிந்தித்துச் செய்தார்.

மருத்துவமனையிலேயே இருந்த அன்னையார் உயில் ஒன்றினைத் தயார் செய்தார். அதன்படி சொந்தச் சொத்தினை ஓர் அறக்கட்டளையாகப் பொதுத் தொண்டுக்குப் பயன்படுத்தும்படிச் செய்யும் தனது விருப்பத்தினை நிறைவேற்றும் முழுப் பொறுப்பினை கி. வீரமணி அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் எழுதி மருத்துவ மனைக்குப் பதிவாளரை வரவழைத்துப் பதிவு செய்ய வைத்தார். இதற்குப் Periyar Maniammai Educational and Charitable Society என்று பெயர். இந்த உயில் 25-9-1974இல் சென்னைப் பொது மருத்துவமனையில் எழுதப்பட்டது. இதில் சாட்சிக் கையொப்ப மிட்டவர்கள் கீழ்க்கண்டவர்கள் ஆவர்

1. சென்னை பொது மருத்துவமனை மேலாளர் தந்தை பெரியாரின் மருத்துவர் டாக்டர் கே. ராமச்சந்திரன் அவர்கள்
2. துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள்
3. கள்ளக்குறிச்சி கழக வழக்கறிஞர் திரு. சி.டி. நடராசன் அவர்கள்
4. திரு. கோ. சாமிதுரை, எம்.ஏ., (இன்றைய கழகப் பொருளாளர்) அவர்கள்
5. மேட்டூர் திரு. டி.கே. ராமச்சந்திரன் அவர்கள் (தந்தை பெரியார் அறக்கட்டளை உறுப்பினர், கழகத்தின் முதுபெரும் தொண்டர்)

அய்யாவின் அறக்கட்டளையில் ஏற்கெனவே மைய அரசு வரித்துறையினர் சிக்கலை உருவாக்கி விசாரணையில் இருந்ததால், அதற்குள் கொண்டு போய்த் தம் சொத்துக்களைச் சேர்க்காமல் தனியே ஓர் அறக்கட்டளை அமைப்பதே சிறந்த ஏற்பாடு என்ற சட்ட நிபுணர்களின் கருத்துரையைப் பல மாதங்கள் சிந்தித்து இந்த ஏற்பாட்டைச் செய்தார் அம்மா அவர்கள்.

## பெரியார் மாளிகைகள்

அய்யாவின் மறைவிற்குப்பின் 14-9-76இல் அம்மா அவர்கள் சென்னையில் அம்மா அமைத்த அய்யாவின் பெயர் சொல்லும் ஏழு மாடிப் பெரியார் கட்டடம் குறித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

இந்தக் கட்டடத்தின் திறப்பு விழாவை அரசியல் தலைவர் களையோ அல்லது சமூகத்தில் பெரும் பொறுப்பு வகிப்பவர் களையோ கொண்டு திறந்திருக்கலாம். ஆனால் அம்மா புதுமை செய்தார்.

திக்கற்ற ஆதரவற்ற ஆனாதையாக விடப்பட்ட குழந்தை களுக்குத் தந்தையாகவும் ஈ.வெ.ராம என்ற முதலெழுத்து இடப்பட்ட குழந்தைகளைச் சீராட்டித் தாய்போல வளர்த்தவர் தந்தை பெரியார் ஆதலால், புரட்சித் தாய் அன்னை மணியம்மையார் மூன்று ஆதரவற்ற குழந்தைகள் ஈ.வெ.ராம. அழகுமணி, ஈ.வெ.ராம கண்மணி, ஈ.வெ.ராம கலைமணி ஆகிய மூன்று மணிகளைக் கொண்டு திறப்பு விழாவை மணியான அம்மா நடத்தி வைத்தார். இவ்விழா அப்போதைய நெருக்கடி அரசின் இடையூறால் தள்ளி வைக்கப்பட்டுப் பின்னர் நடைபெற்றது.

## நெருக்கடி நிலையில் நெருப்பாற்றில் நீந்தினார்

இந்திரா அம்மையார் அரசு 26.6.1975இல் நெருக்கடி நிலை அறிவிப்பினைக் குடியரசுத் தலைவர் வாயிலாகச் செய்தது. பத்திரிகைகள் தணிக்கைக்கு ஆளாகும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றது.

அன்னை மணியம்மையார் நெருக்கடி நிலை அறிவிப்புக் கண்டு அஞ்சவில்லை. 8.7.1975இல் நெருக்கடி நிலைக்கு எதிராகத் தலையங்கம் தீட்டிச் சரியான சூழ்நிலை ஏற்பட்டால் அன்னையார் புயலாக எழுவார் என்று காட்டியுள்ளார்.

நெருக்கடி நிலைக்குக் கலைஞரின் அரசு துணை நிற்காது என்பதால் 31.7.76இல் கழக அரசைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொணர்ந்தனர்.

ஆளுநரின் ஆலோசகராகத் தவேரி, ஆர்.வி. சுப்பிரமணியம், எனும் இரண்டு பார்ப்பனர்கள் - ஒருவர் வடநாட்டுப் பார்ப்பனர், மற்றவர் தென்னாட்டுப் பார்ப்பனர் நியமனம் ஆயினர்.

பார்ப்பனீய ஆட்சி ஏற்படாத தமிழகத்தில் முதன் முதலாகப் பார்ப்பனீயம் பின் நின்று ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

31-1-1976 மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு நள்ளிரவு 12 மணிக்குச் சென்னை பெரியார் திடலில் வந்து இறங்கிய விடுதலை ஆசிரியர் கி.வீரமணி அவர்களைப் பெரியார் திடலில் காத்திருந்த காவலர்கள் கைது செய்தனர். மணியம்மையாரின் தம்பி, தியாகராசன், என்.எஸ். சம்பந்தம் ஆகியோரையும் கைது செய்தனர். அன்னையாரைக் கைது செய்யவில்லை.

1.2.1976 முதல் விடுதலை தணிக்கைக்கு ஆளாயிற்று. தணிக்கை விதிகள் என்று இருந்தாலும் 'விடுதலை'யைப் பொறுத்த வரை அவை காற்றில் பறக்கவிடப்பட்டன. சகட்டுமேனிக்கு அடித்தல்கள் திருத்தல்கள்தான். 'கடவுள்கள் திருட்டு' என்று விடுதலை எழுதினால் கடவுள் சிலைகள் திருட்டு என்று எழுதுவார்கள். தந்தை பெரியார் என்று எழுதினால் தந்தையை நீக்குவார்கள். பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் என எழுதினால் அதில் பெரியாரை நீக்குவார்கள்.

பொறுத்துப் பார்ந்த அம்மா பொங்கி எழுந்தார்கள். திராவிடர் கழக இன்றைய பொதுச்செயலாளர் கவி. பூங்குன்றன் அவர்களை அழைத்துத் தணிக்கையாளர்களிடம் 'காலம் இப்படியே போய்க் கொண்டிருக்காது எனச் சொல்லிவரவும் அவருக்குத் தயக்கம் இருக்குமானால் தாமே நேரில் போவதாகச் சொன்னார். எச்சரித்து விட்டு வரச்சொன்னார்'. புயலாகச் சீறினார்.

**அன்னையார் கைது**

1976இல் அய்யாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் அறிவிக்கப் பெற்றது. நெருக்கடி நிலைக்கால ஆட்சியாளர்கள் அய்யா பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்ச்சியில் அம்மாவைக் கலந்து கொள்ளாது தடுக்கச் செய்யச் சதிவலை பின்னினர்.

தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவும், பெரியார் மாளிகைக் கட்டடத்திறப்பு விழாவும் ஒரு சேர நடத்த அன்னையார் திட்டமிட்டுப் பத்து நாட்களுக்கு முன்பே சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளரிடம் இசைவு கேட்டு விண்ணப்பித் திருந்தும் 15-9-76 இரவு பத்து மணிக்கு இசைவு மறுக்கப்

பெற்றது. விழா நிறுத்தப் பெற்று ஒத்தி வைத்துள்ள செய்தியினை அறிவிக்கக் கூடக் கால வாய்ப்பு இல்லை.

16-9-76 காலை 5.30 மணிக்குப் பெரியார் திடலில் கழகத் தலைவர் மணியம்மையாரையும், அவருக்கு நிழலாக இருந்து பணியாற்றிய கோ. இமயவரம்பன் அவர்களையும் காவல்துறையினர் கைது செய்து 15 நாள் ரிமாண்டு என்று சொல்லிச் சென்னை மையச் சிறையில் அடைத்தனர். ஆனால் 18.9.76 மாலையில் திடீரென்று கழகத்தலைவர் அவர்களையும், புலவர் அவர்களையும் விடுதலை செய்தனர். பேய்கள் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் என்பது பாடல். அது சரியாயிற்று.

**பெரியார் பிறந்த நாள் விழா**

20.11.76இல் நீதிக்கட்சி வைரவிழா நடைபெற்ற போது அதில் பங்கேற்ற அன்னையார், "இன்றைய திராவிடர் கழகம் அன்றைய நீதிக் கட்சியின் வாரிசு" என்று குறிப்பிட்டார்.

அந்த ஆண்டு சென்னையில் பெருவெள்ளம் பெருக் கெடுத்து ஓடி மக்கள் அவதியுற்றனர். அம்மா அவர்கள் சும்மா யிருக்கவில்லை. 'கண்ணீரைத் துடைக்க வாருங்கள்' என்று 27-11-76இல் அறிக்கை வெளியிட்டு மக்கள் துயர் துடைப்புப் பணியில் கழகத்தவர்களை ஈடுபடச் செய்தார்.

இதன் பின்னர்த்தான் தந்தை பெரியாரின் நினைவுநாள் வந்தது. 24-12-76ஆம் நாளுக்குப் பதிலாக 26-12-76ஆம் நாளில் 11 மாத இடைவெளிக்குப் பின் இறந்தநாள் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நெருக்கடி காலத்தில் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி அளிக்காத நிலையில் 'கலந்துரையாடல் கூட்டங்கள்' என்ற பெயரில் ஏற்பாடுகள் செய்து அன்னையார் இயக்கப் பணியாற்றி அதிலும் சாதனை செய்தார்.

**சுதந்திரக் காற்று வீசத்தலைப்பட்டது**

358 நாட்கள் நெருக்கடி கால வைதீக அரசின் கொடுங் கோன்மையில் சிறைபட்ட தோழர்கள் 23-1-77ஆம் நாள்விடுதலை ஆயினர். கழகப்பொதுச் செயலாளர், கடுஞ்சிறையில் பட்ட அவதிகளிலிருந்து விடுதலையானார். **"பெருமிதம் கொள்கிறேன்"** என்று அன்னையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டுத் தன் மகிழ்ச்சியினையும், வணக்கத்தையும், மரியாதையையும் தெரிவித்துக் கொண்டார்.

## 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்

நெருக்கடி அரசுக்கு விடை கொடுத்த பின்னர் மக்களாட்சிக்கு மீண்டும் இந்தியா திரும்பியதன் அறிகுறியாகப் பொதுத் தேர்தல் வந்தது. தேர்தல் முடிவில் இந்திரா அம்மையார், அவருடைய மகன், முதன்மை அமைச்சர்கள் ஆகியோர் தோல்வியைத் தழுவினர். ஆனால் தமிழகம் வித்தியாசமான முடிவைத் தந்தது. எம்.ஜி.ஆரின் ஊழல் பிரச்சாரத்தின் விளைவால், நெருக்கடியில் தி.மு.க.வின் தியாகம் மறைக்கப் பெற்று, தி.மு.க. வெற்றி வாய்ப்பைப் இழந்தது. எனவே **'அதிர்ச்சி நிறைந்த முடிவுகள்'** என்ற தலைப்பில் அன்னையார் தம் வருத்தத்தை வெளியிட்டார்.

## தந்தைபெரியாரின் பிறந்த நாள் விழா

கழகத் தலைவர் அம்மா அவர்கள் கலந்து கொண்ட அய்யாவின் கடைசிப் பிறந்தநாள் விழா 18-9-77இல் சென்னையில் பெரியார் திடலில் நடைபெற்றபோது அம்மா, பொதுச்செயலாளர், பேராசிரியர், இராமனாதன், பகுத்தறிவாளர் கழகத்தலைவர் பண்டரிநாதன் முதலியோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் பங்கேற்ற அம்மா, அய்யா அவர்கள், அய்யா விட்டுச் சென்ற இறுதிப் போராட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி விடவேண்டும் எனவும் அதற்கான திட்டத்தை விரைவில் வகுக்க நாம் ஈடுபட்டாக வேண்டும் என்றார்.

தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா மலரில் "என்றும் அணையாச் சுடர் ஏற்றுவோம்" என்னும் தலைப்பில் எழுதினார். அதில் உடல்நிலை குன்றியும் அய்யா தந்த அரிய உள்ள உணர்வால் நான் ஓரளவு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சூசகமாகத்தான் வாழப்போவது சிலமாதங்களே என்பது போல் தெரிவித்து விட்டார்.

## மீண்டும் தி.மு.க.வில் பிளவு

தி.மு.க. எனும் தூய குளத்திலிருந்து சில பறவைகள் நீர்வற்றிப் போகும் என்று எம்.ஜி.ஆருடன் பிரிந்து சென்றுவிட்டன. இன்னும் சில இயக்கத்தில் நீடித்தவை, இனிமேல் தி.மு.க.விற்கு எதிர்காலம் இல்லையென்று முடிவுகட்டிப் பறந்துபோகத் துணிந்தனர்.

இயக்கம் தொடங்கிய காலம் முதல் இருந்து வந்த தலைவர்களில் ஒருவரான நாவலர் அவர்கள் அவ்வாறு எதிர் அணிக்குச் சென்றார். திராவிட இயக்கத்தின் தலைவரான அன்னையார், மூத்த இயக்கத்தின் தலைவரான அன்னையார், எதிர் வீடுதானே பற்றி எறிகிறது என வாளாயிருக்கவில்லை.

"தி.மு.க. தலைவர்களுக்கு முக்கியவேண்டுகோள்" என்று குறிப்பிட்டு,

> **தி.மு.க. என்பது மிகவும் கெட்டியான பூட்டு அதற்குக் கள்ளச் சாவி போடச் செய்யப்படும் முயற்சிகள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்**

என எச்சரித்ததுடன் அவர்

> **நான் எந்தச் சார்பாகவும் பேசவில்லை. தமிழர் சார்பில் பரிதாபத்திற்குரிய தமிழர் நலச் சார்பாய்ப் பேசுகிறேன்**

என்று அம்மா இப்போது கோடிட்டுக் காட்டினார்.

தமிழர் நலன் கருதி நல்ல முடிவுக்கு வாருங்கள் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன் என்ற அன்னை அவர்களின் நல்ல விதமான வார்த்தைகள், அறிவுரைகள் எடுபடாமல் போயிற்று.

**வெந்த புண்ணில்வேல்** என்ற தலைப்பில் 28-4-77இல் அன்னையார் விடுத்த அறிக்கை, எம்.ஜி.ஆர். தனிக்கட்சி கண்டது ம்ட்டுமல்லாமல் தினசரி அடுக்கடுக்காகக் குற்றச் சாட்டுகளையும் வீசிடுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது என்று இதில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்.

**கலைஞர் சிலை**

தலைவர் கலைஞர் அவர்களுக்குச் சிலை திறக்க அம்மா முடிவு செய்தார். அய்யாவின் வேண்டுகோள் என்றதால் தட்ட முடியாமல் உடன்பட்டார். அய்யாவும் மறைந்துவிட்ட பிறகு அம்மா அவர்கள் அய்யாவின் விருப்பத்தை நிறைவேற்றினார். இச்சிலை குறித்து கலைஞரின் சிலை போக்குவரத்துக்கு இடைஞ்சலாகச் சென்னை அண்ணா சாலையில் இருப்பதாக எம்.ஜி.ஆர். பேசிய போது கழகத்தலைவர் அவர்கள்

> **இதை ஒரு பிரச்சனயாக யார் ஆக்கினாலும் அது பெரியாரின் கருத்தை லட்சியத்தை சவாலுக்கு அழைப்பது மட்டுமல்ல பெரியாரை அவமதிப்பதும் ஆகும் என்று நாங்கள் கருதுகிறோம்**

என்று உறுதிபடக் கூறினார்.

**இந்திராவிற்குக் கறுப்புக்கொடி**

இந்திராகாந்தி அம்மையார் தேர்தலில் தோற்றது மட்டும் அவருக்குத் தண்டனையல்ல. நெருக்கடிக் கொடுமைக்கு ஆளான தமிழ் மக்களின் எதிர்ப்பு உணர்ச்சி மங்கிப் போய்விடவில்லை,

மரத்துப்போய் மரக் கட்டைகளாகி விடவில்லை என்பதை உணர்த்த வேண்டிய பொறுப்பு தமக்கு உள்ளது என்று அன்னையார் உணர்ந்தார்.

எனவே வரலாற்றுச் சிறப்புமிக்க அழுத்தமான, ஆணித்தரமான அம்மாவின் அறிக்கை இது.

## இந்திராவிற்குக் கறுப்புக்கொடி தமிழினமே திரண்டிடுவாய்

> **அக்டோபர் 30, 1977இல் தமிழ்நாடு வரவிருந்த இந்திராவிற்குக் கறுப்புக் கொடி காட்டமுடிவு செய்தபோது, தி.மு.க.வும் அந்தப் போராட்டத்தில் பங்கு பெற முன்வந்தது. கலைஞர் அவர்கள் "நெருக்கடி காலத்தில் கொடுமைக்கு ஆளான திராவிடர் கழகமும் இந்தக் கறுப்புக்கொடிப் பேரணியை நடத்துகிறது. அண்ணன் அன்றே சொன்னாரல்லவா திராவிடக் கழகமும், தி.மு.கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று அந்த இரு கழகமும் இணைந்து நடத்துகிற அறப்போர்**

எனக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் ஆளும் எம்.ஜி.ஆர். அரசு இந்திராவிற்கு எதிரான கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திற்குத் தடை விதிக்கப் போவதாக அறிந்த அம்மா அவர்கள் உடல் நலம் குன்றித் திருச்சியில் மருத்துவமனையில் இருந்தவர் உடனே சென்னைக்கு விரைந்தார்.

ஆர்ப்பாட்ட நாளாகிய 30-10-77இல் 'தடையை மீறுவோம்' என அறிவித்தார். போராட்டத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தியும், நாமே அதற்குத் தலைமைப் பொறுப்பினை ஏற்க முன்வந்த நிலைமையையும் வெகு தெளிவாகப் படம்பிடித்துக் காட்டினார்.

தடைமீறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து மணியம்மையார், கழகப் பொதுச் செயலாளர், கழகத் தோழர்கள் காலை எட்டரை மணியளவில் கைதுசெய்யப் பெற்றனர்.

சைதாப்பேட்டை அருகே சென்றபோது காவல் துறை அலுவலர் ஒருவர், பொதுமக்கள் ஒருவரை மூர்க்கத்தனமாகத் தாக்கியபோது அம்மா துணிந்துகேள்வி கேட்டார். அந்தக் காவல்துறை அலுவலரோ அம்மாவையே தாக்க முயற்சித்தார் அந்தப் பண்பாடில்லாத அதிகாரி. அந்தக் காவல்துறை அதிகாரி

அருகில் இருந்த மற்றொரு பொறுப்புள்ள மேல் அதிகாரி கழகத் தோழர்களை 'I will finish you' என்று மிரட்டிடவும் செய்தார் என அறிகிறோம்.

கழகத் தலைவர் முதலானோர் 88வது விதியின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 15 நாள் காவலில் வைக்கப்பட்டனர். ஜாமீனில் வெளிவர மறுத்து அன்னையார் சிறையேகினார்.

சென்னை மையச் சிறைச்சாலையிலிருந்து1-11-77 பகல் ஒன்றே முக்கால் மணியளவில் பொது மருத்துவமனையின் இருதயச் சிகிச்சைப்பிரிவில் அன்னை சேர்க்கப்பட்டார். இந்தக் கொடுமை நேர்ந்த வேளையில் 10-11-77இல் விடுதலை ஆசிரியரின் தந்தையார் இறந்துவிட்டார்.

கழகத் தலைவர் அம்மாவிற்கு உடல்நலமின்மையால் ஏதேனும் நேர்ந்துவிட்டால் தமக்குப் பழி வந்து சேருமே என எண்ணிய எம்.ஜி.ஆர். அரசு போடப்பட்டிருந்த வழக்கைத் திரும்பப் பெற்று அன்னையாரை மட்டும் விடுவிப்பதாக அறிவித்த போது அரசின் தந்திரத்தை அம்மா வெளிப்படுத்தினார். பின்னர் 15-11-77இல் கழகத் தோழர்கள் சொந்த ஜாமீனில் வெளிவந்தனர்.

9-12-77ல் அரசுக்கு எனது வேண்டுகோள் எனும் தலைப்பில் அம்மா வெளியிட்ட அறிக்கையில்

> **இதற்கு முன் நடந்தது எப்படியிருந்த போதிலும் இனியாவது எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் கூடாது என்பதைத் தான் தெரிவித்துக் கொள்கிறேன்**

என்று அறிவுரை பகன்றார்.

ஒரு பொறுப்புள்ள இயக்கத்தின் தலைவியின் பண்பட்ட இந்த உரைகள் ஆளும் அரசு எதுவான போதிலும் அந்த அரசு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான அறிவுரையாக அமைகின்றன.

அம்மா அவர்கள் முற்றிலும் நலம்பெற வில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வருந்தினார்.

> **கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட பொம்மைபோல் என்னை மருத்துவர்கள் ஆக்கிவிட்ட நிலையில் எனது உள்ளம் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருக்கிறது என்றாலும் உடலை வருத்தி அங்கே சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாத நிலையில்**

**நான் என்ன செய்ய முடியும்? எழுதவே கை கூசுகிறது. 95 வயது வரை வாழ்ந்த நம் தலைவர் கடைசி வரை பணி செய்தார். என் நிலை சொல்லொணா வேதனையில் ஆழ்த்திவிட்டது.**

ஒரு தாயின் வேதனைக் குரலாக ஒலிக்கிறது. இருப்பினும் பாதிப்பிற்கு ஆளானவர்களுக்கு உதவிட வேண்டித் தலைமை அமைச்சருக்குத் தந்தி அனுப்பினார். ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை மருத்துவமனையிலிருந்தே விடுத்தார்.

9.3.78இல் **'என்.ஜி.ஓ. பிரச்சினையும் அரசின் விசித்திர அணுகுமுறையும்'** எனும் தலைபில் அரசு ஊழியர்களுக்கு ஆதரவாகத் தலையங்கம் எழுதினார். இதுவே அம்மாவின் இறுதித் தலையங்கமாக அமைந்துவிட்டது.

இந்தத் தலையங்கத்தை அடுத்து 14-5-78இல் **'என்.ஜி.ஓ. ஸ்டிரைக் நமது முக்கிய வேண்டுகோள்'** என வேலை நிறுத்தத்தை நிறுத்தி அரசும், அரசு ஊழியர்களும் கவுரவம் பாராட்டாமல் மக்கள் தொண்டை ஏற்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

**அம்மாவின் இறுதிப் பயணம்**

மருத்துவமனையிலிருந்து வெளிவந்து இல்லத்தில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த அம்மா மணியம்மையார் அவர்களுக்கு 16.3.78 காலை நெஞ்சுவலி ஏற்பட்டு சென்னைப் பொது மருத்துவமனை இருதயச் சிகிக்சைப்பிரிவில் சேர்க்கப்பெற்றார்.

மருத்துவர்கள் தீவிர சிகிச்சைகள் மேற்கொண்டனர். இருப்பினும் பயன் இல்லை. பகல் 1.05 மணி அளவில் தமிழ்ச் சமுதாய நலனுக்கு என்று உழைத்து, உழைத்து மெய் வருத்தம் பாராது கண்துஞ்சாது பணி செய்த தியாக தீபம் அணைந்தது.

மருத்துவமனையிலிருந்து அவர்கள் உடல் பெரியார் திடலில் மக்கள் மரியாதை செலுத்த வைக்கப் பெற்றது. இறுதி ஊர்வலம் 17.3.78இல் கழகத் தோழர் ஒருவர் கருப்புக் கொடியைத் தாழ்த்திப் பிடித்துச் செல்ல, நாகம்மை பெண்கள் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி ஆசிரியைகள் மாணவிகள் தொடர்ந்து செல்ல முதன்மைச் சாலை வழியே மக்கள் அஞ்சலிக்குக் கொண்டு செல்லப்பெற்று அம்மாவின் உடல் புதைகுழியில் ஒய்வுபெற அடங்கியது.

**அன்னையார் மறைவிற்குப்பின்**

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன ஆயுள் செயலாளர் அன்னை மணியம்மையார் அவர்களால் 2-7-78இல்

எழுதப்பட்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பாதுகாப்பில் வைக்கப் பட்டு, அவருடைய மறைவிற்குப் பின் தஞ்சை திரு. கா. மா. குப்புசாமி அவர்களிடம் ஒப்படைக்கும்படி ஏற்பாடு செய்யப் பட்டிருந்த முத்திரையிட்ட உறையில் இருந்த அம்மாவின் கடிதம் வாசிக்கப்பட்டது.

**இரங்கல் கூட்டம்**

திராவிடர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட இரங்கல் கூட்டம் 28.3.78 செவ்வாய் இரவு 7.30 மணிக்குச் சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில் ராஜா சர் முத்தையா வேள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சீரணி மேடையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடினர். அம்மா, அய்யா சேர்ந்திருக்கும் படம் இடம்பெற்றது. அவர்களின் உருவத்துடன் 'இலட்சியப் பயணத்தைத் தொடருவோம்' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் கட்டப்பட்டிருந்தன.

கழகத்தின் பொருளாளர் கா.மா. குப்புசாமி ராஜா சர் அவர்களைத் தலைமையேற்றுத் தருமாறு முன்மொழியத் தென் ஆர்க்காடு மாவட்டக் கழகத் தலைவர் பண்ருட்டி நடேசன், தென் சென்னை மாவட்டத் தி.க. தலைவர் எஸ்.டி. தட்சிணாமூர்த்தி ஆகியோர் வழிமொழிந்தனர். டி.எல். மகாராஜன் அம்மா அவர்களைப் பற்றிய கவிஞர் பூங்குன்றன் எழுதிய பாடல் ஒன்றை உருக்கமாகப் பாடினார்.

ராஜா சர் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். எம்.ஜி.ராமச்சந்திரன், கலைஞர், நாவலர், பேராசிரியர், எம்.கல்யாணசுந்தரம், ம.பொ.சி., ரா. மார்க்கபந்து, மீ. பக்தவத்சலம், கருப்பையா மூப்பனார், வரதராசன் ஆகியோர் உரையாற்றினர்.

முதல்வர் எம்.ஜி.ஆர். தமிழக அரசு அம்மா அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் என்றார். எம்.ஜி.ஆர். வாக்களித்தவாறு செய்யவில்லை.

> **தமிழ்ச் சமுதாயம் என்னும் குழந்தையை மடியிலே தூக்கிப் போட்டு மருந்தைப் பாலாடையில் குழைத்து வாயிலே புகட்டிய அன்னை மணியம்மையார்**

என்றார் டாக்டர் கலைஞர்.

> **பெரியாருடைய நம்பிக்கையை முழு அளவுக்குப் பெற்று 40 ஆண்டுக்காலம் அவரோடு பழகி அந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றிய அம்மையார்**

**அவர்கள் மறைத்துவிட்ட அந்தத் தன்மை இன்றைக்குத் திராவிடர் கழகத் தோழர்களைத் தாயை இழந்த பிள்ளைகளைப் போன்ற ஓர் உணர்வுக்கு ஆளாக்கியிருக்கிறது**

என்றார் பேராசிரியர்.

**பெண்குலத்தின் சார்பாக இன்னும் அதிகமாகவே அம்மா அவர்கள் இயக்கத்தை வளர்த்தார்கள் என்றும் பெரியாருடைய நினைவு நிலைத்திருக்கும் வரை மணியம்மையாருடைய நினைப்பும் சேர்ந்தே நிலைத்திருக்கும்**

என்றார் ம.பொ.சி.

பெரியவர் பக்த வத்சலம் பேசுகையில்

**மணியம்மையாரிடம் பெரியார் கொள்கையில் நம்பிக்கையும், உறுதியான பிடிப்பும் இருந்தது. அதற்காக எந்தத் தியாகத்திற்கும் அவர்கள் தயாராக இருந்தார்கள். பெரியாருக்குப் பிறகு முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வாரிசு என்கின்ற முறையில் அவர்கள் விளங்கினார்கள்**

என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் வரதராசன், அம்பிகாபதி முதலிய பொதுவுடைமையினரும், உழைப்பாளர் கட்சி மார்க்கபந்து அவர்களும், முஸ்லீம்லீக் அப்துல் லத்தீப் அவர்களும் பேசிய பின் விடுதலை ஆசிரியர், கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்கள் பேசுகையில்

**அம்மா அவர்களின் இந்த வீர வணக்க நாளில் நாங்கள் எடுத்துக் கொள்ளும் உறுதி எந்த இடர் வந்தாலும், எவ்வளவு சங்கடங்கள் வந்தாலும் அவர்களுடைய உயிரையே கொடுக்கக் கூடிய கட்டம் வந்தாலும் தூக்கு* மேடையிலே நாங்கள் தூக்குக் கயிற்றை முத்தமிடக் கூடிய நிலை வந்தாலும் கூடப் பெரியார் கொள்கையைக் காப்போம், காப்போம், வெற்றி பெறாவிட்டால் அதற்காக மாள்வோம் மாள்வோம்**

என்றார்.

சுயமரியாதைப் பிரச்சார நிருவாகக் குழுவின் ஆயுள் செயலாளராக அம்மா, தம்முடைய செயலாளர் பதவியை ஆயுள்

உறுப்பினராக உள்ள திரு.கி. வீரமணி அவர்களிடம் ஒப்படைத்து அந்தப்பதவியை நியமித்து வர, நியமனம் செய்கிறேன் என்று கையெழுத்திட்டிருந்தார்.

அதன்படி அன்னையார் உடல் அடக்கத்தின் பின் மைய திராவிடர் கழக நிருவாகக் குழு கூடி அத்தீர்மானத்தை முழுப் பொறுப்பையும் ஏற்று வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டு 17-3-76 அன்று தீர்மானம் நிறைவேற்றியது.

**முடிவுரை**

இந்த வரலாறு திராவிடர் இயக்க வரலாற்றின் வரலாறு இரண்டாம் இயல் முடிவுற்றுவிட்டது. ஒவ்வோர் இயல் முடிவுறும் போதும் வாசகர்களாகிய சமுதாயப் பெருமக்கள் கண்கள் குளமாகின்றன. கண்களில் கண்ணீர் மலர்கள் உதிர்கின்றன.

அது போலவே இந்த இரண்டாவது இயல் முடிவுறும் போது 1943 முதல் 1978 வரை 35 ஆண்டுக்காலத் திராவிட இயக்க வரலாற்றைப் புரட்டிப் பார்க்கிறோம். அய்யா-பெரியார்-திராவிடச் சிம்மம் பகுத்தறிவுப் பகலவனோடு பிரியாது உண்மையாக உழைத்துத் தொண்டாற்றிய ஒரு தியாக தீபம் அன்னை மணியம்மையார்.

மணியம்மையார் பெருமையை உலகம் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. மணி அம்மையார் நூல் ஏதும் எழுதவில்லை. அவருடைய நூல் அய்யாதான்.

அவருடைய தொண்டு, தூய தொண்டு. அறிந்த தலை முறை மறைந்து வருகிறது. எனவே அம்மாவின் தொண்டு மறைந்துவிடக் கூடாது. அம்மாவின் முதல் கட்டுரை சிறு நூலாக வந்துள்ளது. திராவிடர் கழகம் 'அன்னை மணியம்மையாரின் தொண்டறம்' எனும் நூலினை வெளியிட்டுள்ளது. அம்மாவைப் பற்றிய குறிப்புகள் சில காணலாம்.

எனவே இது மணியம்மையார் குறித்த முதல் முயற்சி.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்று காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம் | 60.00 |
| பழந்தமிழ் அறிவியல் | 45.00 |
| நீறணி பவளக்குன்றம் | 35.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்-ஒருசமூகவியல் பார்வை | 30.00 |

---

**645 திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு 40.00**